சிவகாமியின் சபதம்

...கதை...

...வசனம்...



பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

அம்மையப்பன்

...கதை-வசனம்...

மு. கருணாநிதி

★

[உரிமை பதிவுசெய்யப் பட்டிருக்கிறது]

★

மு.கா.மு பதிப்பகம்

சென்னை-14

முதற் பதிப்பு
செப்டம்பர்; 1954

விலை எட்டணா

மூரசொலி அச்சகம், 62 எஸ். பி. சனனதி தெரு.
ராயப்பேட்டை, சென்னை 14.

அம்மையப்பன்

★

கதை வசனம்

மடாலய வெளிப்புறம்

ஒரு கோச் வந்து நிற்கிறது. பலதேவர், ராணி, எல்லோரும் இறங்கி உள்ளே செல்கின்றனர். கோச்சை ஓட்டிவந்த முத்தனும் இறங்குகிறான். அவன் குல்லாயை எடுக்கிறான். அதிலிருந்து படம் ஒன்று விழுகிறது. சுகதேவ் கண்டு விடுகிறான்.

சுக : ஏ !—முத்தா ! என்ன படம் இது ?

முத் : ஒன்றுமில்லை...

சுக : ஏ !...சும்மா காட்டு : பார்க்கலாம்...

[காட்டுகிறான்.]

சுக : அடேடே !...முத்தா ! நான் இதுமாதிரி ஒரு படம் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னல் எங்கேயோ பார்த்தது போலே ஞாபகம் !...

முத் : இப்போது நீங்கள் காணப்போகும்...இந்தப் படம் என் லட்சியக் கனவு...இன்ப விடிவெள்ளி...இரண்டொரு வாரங்களுக்கு முன் நீங்கள் பார்த்த படம் இந்தப் படத்தின் இன்னொரு பிரதி—முற்றுப் பெறுத சித்திரம்...

சுக : ஓகோ ! அதுவும் உன்னுடையதுதானு ?

முத் : ஆமாம் முன்னது கை தவறிப்போய் களவாடப்பட்டு விட்டது...! நான் வேறு எழுதிக் கொண்டேன். அது...இது...

சுக: சரி; சரி; ஆனு முத்தா இந்தப்பூ-த்திலே இருக் கிறமாதிரி ஒரு பெண்ணு உலகத்திலே இருந்தா நான்தான் அதை கல்யாணம் பண்ணிக்குவேன்.

முத்: உம்; இல்லாததைபற்றிப் பேசுவானேன்.

சுக: சரிதான். உலகத்திலே பேசறதே இல்லாத தைப் பத்தித்தான்...சரி நீ வாவில்லையா மடத்துக்கு.

முத்: ஊ கூம்.

[முத்தன் நண்பர்கள் வருகிறார்கள்]

நண்: என்ன முத்தண்ணு சுகந்தானு?

முத்: இது என்ன சுந்திர பூமியா சுகமாயிருக்க? சுகவாசி இதோ இந்த மடத்துக்குள்ளே இருக்கிறார் மாய்கைநாத சாமியார்.

மாய்கை: அகில ஜெகத்திற்கும் அம்மையப்பன் அருள் சித்திக் கட்டும்...அடியார்க்கு அடியார்களே! அன்பு நிறைந்த பக்தர்களே!.....அய்ய, விஞ்ஞக்கள் ஏதேனும் இருப்பின் கேட்டுத் தெளிவு பெறுக.....

சுகதேவ்; அம்மையப்பன் என்பதற்கு அர்த்தம் என்ன ஸ்வாமி.....

மாய்கை; அடடா, இதுவா புரிய வில்லை—இள வரசே. இதோ இருக்கும் பாளையக்கார பலதேவர் உமக்கு...

சுகதேவ்; அப்பா!.....

மாய்கை; சரி, அவர்கள்.....?

சுகதேவ்; அம்மா!.....

மாய்கை; அம்மா.....அப்பா.....அம்மையப்பா.

சுகதேவ்: அடடே! அப்படியானால் நீங்கள் தோஸ்த் தாரிப்பது என் அம்மாவையும் அப்பாவையும் தானு!

மாய்கை: கேளும் உமக்கு ஒரு அம்மையப்பன் இருப்பது போலவே, உலக மக்களுக்கும் ஒரு அம்மை யப்பன் இருக்கிறார்கள்.

சுகதேவ் : அவர்கள் எங்கு இருக்கிறார்களோ ?—

மாய்கை : கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள் !—

சுகதேவ் : பிள்ளைகளாகிய நாம் கண்ணுக்குத் தெரியும் போது, பெற்றவர்களும் தெரிய வேண்டியது தானே.

மாய்கை : தவறு ! ... தெரிய மாட்டார்கள் அந்த தெய்வப் பெற்றோர்கள் — அவர்கள் அரூபிகள் — அண்ட சரா சரங்களையும் படைத்து அழிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்...ஆயிரம் நாமம் படைத்தோர்...பாயிரம் பலவற்றுல் பாராட்டப் பெற்றோர் ... இகபரம் சுகதுக்கம் ... தூண் தரும்பு..அங்கு...இங்கு எங்கும் பிரகாசமாய் இருப்போர்.. என்ன சுகதேவ் ... குழப்பம் முடிவுற்றதா ?...

சுகதேவ் ; இப்போது தானே ஆரம்பமே ஆகிறது

மாய்கை : அட அம்மையப்பா—

பலதேவர் : சுகதேவ் இப்படி எல்லாம் சூழும்புத் தனமாக கேள்விகளை கேட்காதே; மகான்களை இப்படி யெல்லாம மடக்குவது மகாபாபம.....

சுகதேவ் ; இல்லையப்பா தெரியாமல்தான் கேட்டேடன். திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.....

மாய்கை : சந்தோஷம்.

அஞ்சல் மனை

வேதா: மாய்கை நாதஸ்வாமிகள்.....

மாய்கை நாதஸ்வாமிகள்.....

மாய்கை நாதஸ்வாமிகள்.....

முத்தன் : மாய்கை நாதஸ்வாமிகளுக்கு சரியான வேட்டைதான் போலிருக்கிறது.

வேதா : எல்லாம் பக்தர்கள் அனுப்பும் காணிக்கைகள் .....

முத்தன் : காணிக்கை ! ... ஆமாம் உழைக்காமல் கிடைக்கிற ஊதியத்துக்கு அப்படியும் ஒருபெயர் உண்டு ...

வேதா : அடா—அடா—அடா இவ்வளவு பெரிய உண்மையை எங்கேயப்பா நீ கற்றுக் கொண்டாய். நீ படிக்கிற பதினெட்டு சித்தர் சொன்னார ? ... குதம்பை சித்தர் சொன்னார ?

முத்தா ஆரம்பித்து விடாதே உன் அதிமேதாவித் தனமான பிரசங்கத்தை.....

முத்தன் : நான் சாமியாரைச் சொன்னல் தங்களுக்கு ஏன் கோபம் வருகிறது

வேதா : ஏ முத்தா ! இது அஞ்சல் மனை. பல்லும் வரும் இடம் போகும் இடம் ... நீ இப்படி உளருவது எனக்கு ஆபத்து ... இதுமாதிரி எதுவும் வருமென்று தெரிந்துதான் உனக்கு என் வீட்டில் அந்த அறையை வாடகைக்குத்தர அவ்வளவு தயங்கினேன்...

முத்தன் : சரி—சரி—வாயை மூடிக் கொண்டேன்...

வேதா : போதாது! ...வாலையும் சுருட்டிக் கொள்...

முத்தன் : இது என்ன ராமாயணம் ? ராவணர்பாரா ?.....

வேதா : சரி ஏன் நிற்கிறாய் அரண்மனைக்குப் போகவில்லையா குதிரை தேய்க்க.....

முத்தன் : ஏன், நான் இங்கிருந்தால் இன்னும் ஏதாவது பேசிக்கொண்டே இருப்பேன் என்ற பயமா? ...

வேதா : இல்லை ஊதியம் வாங்குகிற இடத்தில் ஒழுங்காக வேலை பார்க்க வேண்டாமா? அதற்காகச் சொன்னேன். ...நீ நல்ல பிள்ளை எப்படியாவது கெட்டுப்போ. எனக்கு என் கடமை பெரிது, சாமியாரை மட்டும் ஒன்றும் சொல்லாதே. அவர் உன்னைப்போல சத்திரத்துப் போர்வழி அல்ல; ஜகம்புகழும் மகான்.

முத்தன் : ஜகம்புகழும் மகான் அப்பேர்ப்பட்ட மகான் அடிமையாய் இருக்கும் இந்த பழுதூருக்கு விடுதலை வாங்கித்தர சக்தி பெறவில்லை போலும்...?...

வேதா : பழுதூர் விடுதலையைப் பற்றி அவருக் கென்ன கவலை ... அவர் என்ன உன்னைப்போல குருகிய நோக்கம் படைத்தவரா ? இந்தப் பாப லோகத்திலிருந்து மக்கள் விடுதலை பெற்று பரலோகம் செல்ல வேண்டுமென்ற பரந்த நோக்கம் படைத்தவர் அவர்...பழுதூர் விடுதலையாம் விடுதலை.....

இன்றைக்கே இளையராணி பூங்காவனம், வேங்கை நாட்டாரை விவாகம் செய்து கொள்ளட்டும் நாளைக்கே பழுதூருக்கு விடுதலை,

முத்தன் : விருப்பமற்ற விவாகம் விடுதலைக்கு தரும் விலையா ?

வேதா : சரி—சரி— உன்னோடு பேச என்னால் முடியாது ! அப்பா ! விடுதலை வீரனே !...வேலையைப் பார்... நான் வருகிறேன்,

பூங்காவனம் அறை

★

[பூங்காவனம் முத்தனுக்காக பழங்களை எடுத்துக் கொண்டிருக்கிறாள்.]

பல : பூங்காவனம்-பூங்காவனம்.....

பூங் ; என்ன அண்ணை...என்ன விசேஷம்.....

பல : விசேஷமா! உனக்கு அண்ணைகப் பிறந்து விட்டு, விசேஷம் வேறு எனக்கு. இதோ பார் வேங்கை நாட்டரசன் ஓலையனுப்பி இருக்கிறான்.....

பூங் : எப்போதும் போல என் திருமணத்தைப் பற்றித்தானே.....

பல : திருமணமா? அதைத்தான் அவன் மறந்து விட்டானே...இப்போது வந்திருக்கும் ஓலை...அரை லட்சம் பொன்னுக்கு...அவசர உதவி. கப்பம் கட்டித்தீர வேண்டும் பூங்காவனம்...கப்பம் கட்டித் தீரவேண்டும்...

பூங் : வழக்கம் தானே அண்ணை இது!...

பல: வழக்கமா? பூங்காவனம் யோசித்துப்பார்...நீ அந்த வேங்கைபுரத்தாரை விவாகம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டிருந்தால் இந்த பதினைந்து வருட காலமாக எத்தனை லட்சம் பொன் மீதமாயிருக்கும்—கொட்டிக் கொட்டி அழுதிருக்கிறேனே அந்த கொடுமையாளர் ஆட்சி பீடத்துக்கு.....

பூங்: அதற்காக...என் அபிப்ராயத்தை மாற்றிக் கொள்ள முடியுமா?.....

பல: அபிப்ராயம், பெரிய அபிப்ராயம்!...பல வருஷ காலமாக உன்னைத் திருமணம் செய்து கொள்ள முயற்சித்து கடைசியில் பிரமச்சரிய விரதம் பூண்டிருக்கிறான்...வேங்கை நகர் மன்னன்...நீயோ அவனை வெறுக்கிறாய்.....

பூங்: அண்ணே...திருமணப் பேச்சு பேச வேண்டிய நேரமோ, பருவமோ இல்லை எனக்கு...தயவு செய்து என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்...அந்தப் பாழும் கல்யாணப் பேச்சு வேண்டாம்! வேண்டவே வேண்டாம்.

பல: இப்படி அழுது அழுது தான் பழுதூரையே பாழ்படுத்திவிட்டாய் நீ...உன்னோடு பேசி என்ன பயன் எனக்கு.....

மடாலயம்

★

(பொன் மெருகேறிய பீடமொன்றில் மாய்கை நாத சாமியார் அமர்ந்திருக்கிறார்...அருகில் பல தேவர், அவர் பக்கத்தில் அவரது மனைவியும் சுகதேவும்; காவலாளி திருசங்கும்; மற்றவர் களும் நிற்கின்றனர்.)

மாய்கைநாதர்: மகான்களைப் பற்றி நேற்றுச் சொன் னேனல்லவா? மகான்கள் அடிக்கடித் தோன்று வதில்லை. ஆனால் அப்படித் தோன்றும் மகான்களால் ஆகாதது எதுவுமே இல்லை...கடலை வற்ற வைப்பர்; கனத் திலே மிதந்திடுவர்...கடவுளுடன் பேசுவர்...கரும்பிலே கசப்புக் காட்டுவர்; காகத்தையும் கந்தர்வ கானம் எழுப்பச்

செய்வர்... அத்தகைய அருட்சக்தி பெற்றவர்கள் அவர்கள். வீரர்கட்கும் விவேகிகட்கும் மண்ணிலே தான் புகழ்... ஆனல் மகான்கட்கோ விண்ணிலும் புகழ். ஆகவே தான் சொல்லுகிறேன். வாளையும் வேலையும் தொடாதே வைகுந்த வாசனைத் தொழு. கையிலே கேடயம் ஏந்தாதே. கைலாச நாதரின் திரு நீரை ஏந்து...நீ யார்? நான் யார்? தாய் தந்தை அண்ணன், தம்பி எல்லாம் வீண்; முடிவில் ஒரு பிடி மண்.

[எல்லோரும் வீபூதி பெற்றுச் செல்கிறார்கள்]

[பூபதி வருகை]

மாய்கை: வாரும் பூபதி...வாரும். உம்மைப் பார்த்து பல ஆண்டுகளாகி விட்டனவே! தாடியெல்லாம் வெளுப் பேறி விட்டதே.

பூபதி: ஆமாம்!

மாய்கை: தளிர் சருகாகத்தானே மாறும். தாடி வெளுப்பாவதிலே என்ன ஆச்சர்யம்.

பூபதி: ஒன்று சொன்னீர். அதுவும் நன்று சொன் னீர். உண்மை; உள்ளங்கை நெல்லிக்கனி...

மாய்கை: என்ன பூபதியாரே வெளிநாட்டுப் பிரயாணங்கள் எப்படியிருந்தன. உமது மருத்துவத் தொழில் முன்னிலும் பன்மடங்கு சிறப்படைந்திருக்கு மென்று எண்ணுகிறேன்—அதற்கு உமது சுற்றுப் பயணம் பயன்பட்டதல்லவா!—

பூபதி: நிச்சயமாகப் பயன்பட்டது. இருபது ஆண்டு இடைவிடாத அலைச்சல் வீண் போகவில்லை— மாயத்தாலும் மந்திரத்தாலும் தீர்க்க முடியாதவைகளை மருத்துவத்தால் தீர்க்கலாம் என்ற உண்மையை.....

மாய்கை: அம்மையப்பா — தெய்வத்தால் ஆகாத தொன்றில்லை.

[வேதாளம் வருகை]

வேதாளம்: ஸ்வாமி நமஸ்தே

மாய்கை: என்ன வேதாளம்.

வேதாளம் : ஸ்வாமிகளுக்கு காணிக்கைகள் வந்திருக்கிறது நிறைய. அதை எடுத்து வந்தேன்...

மாய்கை : காணிக்கை...வாழ்க பக்தர்கள்! எவ்வளவு வேதாளம்.

வேதாளம் : கணக்கற்ற பொன் நாணயங்கள்.

மாய்கை : சந்தோஷம்! அதோ இருக்கிறது உண்டியல்.

[வேதாளம் போதல்]

பூபதி : சாமிகள் பொன்னைத்தொடுவது கிடையாதோ

சாமி : விஷம்—விஷம்!!.....

பூபதி : அந்த விஷத்திலே வளருவது தானே இந்த விருக்ஷம்!...சாமியாரே! வெளிநாடு சென்று திரும்பியிருக்கும் எனக்கு நீர் ஓர் வெகுமதி தரவேண்டும்—தருவீரா?

சாமி : வெகுமதியா? என்ன பூபதி.

பூபதி : அந்த புதையலை என் கண்ணிலே காட்ட வேண்டும்.

சாமி : புதையல்?

பூபதி : பொன்னே வைரமோ அல்ல சாமியாரே... உம்மிடம் புதைந்து கிடக்கும் அந்த ரகசியத்தைத்தான் கேட்கிறேன்...

சாமி : ரகசியம்!

பூபதி : ஆமாம் இப்போதாவது சொல்லக் கூடாதா?

சாமி : உயிரை வாங்காதீர்; இருபது வருடமாய் போய் இருந்தீரே இப்போது இங்கு ஏனய்யா வந்தீர்...?

பூபதி : ஏன் வந்தேனு—சொல்கிறேன், நீரும் இருபது ஆண்டுகளாகத்தான் அந்த ரகசியத்தை மறைத்துக் கொண்டு வாழ்கிறீர்! ஹா—ஹா—ஹா—சாமியாரே குதிரை தன் ஆகாரத்தை கோணியிலே மறைத்துக் கொண்டு சாப்பிட்டாலும் அது கொள் என்று தெரியாமலா போய் விடுகிறது. ஹா—ஹா—ஹா!

குதிரைக் கொட்டடி

★

குதிரை கொள்தின்று கொண்டிருக்கிறது. ஒரு பையன் மெள்ள மெள்ள திருட்டுவிழி விழித்துக் கொண்டு அந்தப் பக்கம் வருகிறான்...பிறகு கொள்ளுப்பையில் கையை விட்டு, கொள்ளை எடுத்து அவனும் சாப்பிடு கிறான்...அப்போது திருசங்கு அங்கு வருகிறான் ... பையனின் தலையில் ஒரு அடிவிழுகிறது...

திரு; திருட்டுக் கழுதை, யாருடா நீ! என்னடா முழிக்கிறே—துப்புகீழே...ம்...துப்பு...இனிமேல் வருவியா இங்கே ஆங்...

[...முத்தன் வந்துபிடித்துக் கொள்கிறான்...]

முத்: ஏன்...அவனை அடிக்கிறீர்கள்.....

திரு: நீ வந்துட்டியா — சிபார்சுக்கு...முத்தா—நீ குதிரை பார்த்துக் கொள்கிற லக்ஷணம் நன்றாயிருக்கிறது திருட்டுபய பிள்ளைகள் எல்லாம் அரண்மனைக் குள்ளேயே வந்துட்டுதுங்க திருடருத்துக்கு!

முத்: பசி பொறுக்காமல் இந்தப் பசலைப் பையன் கொஞ்சம் கொள்ளை சாப்பிட்டு விட்டால் அது திருட்டா? உலகத்தில் யார் யாரோ எதை எதையோ திருடுகிறார்கள்...

திரு: சரிதான் பாளையக்காரர் சொத்தை நீயே பசி காரர்களுக்கு பங்கு போட்டு கொடுத்திடுவ போலிருக்கு.

முத்: நான் கொடுக்காவிட்டாலும். அந்தக் காலம் வரத்தான் போகிறது. இந்தா தம்பி நீ ஓடிப்போ.....

(கொள்ளை எடுத்துக் கொடுக்கிறான்)

திரு: காவேரி எவ்வளவு நல்லவ, அவ வயத்திலே வந்து இப்படி ஒரு புள்ளே பொறந்துதே!.....

(போகிறான்—ஒரு வீரன் வருகிறான்.)

வீர: முத்தா!...வாள் வித்தை கற்றுக் கொள்ள — குமார ராஜா வருகிறார்.....

முத்: யாரது! குமார ராஜாவா? அது சரி!.....

வீர: ஆமாம்! இளவரசன் சுகதேவ்.....

முத்: இளவரசன், குமாரராஜன்!...இவன் வேறல்ல புதுப் புது பட்டமா அள்ளி வீசுகிறான்.....எப்பா கொஞ்சம் தகுதி பார்த்து கொடப்பா பட்டத்தை; எது...இப்ப என்னு வாள் பயிற்சி கத்துகிட்டு பழு தூருக்கு விடுதலை வாங்கித் தரப் போகிறூராக்கும்..... பெரிய வீராதி வீரர்...சரி...சரி...போ... இதோ வர்றேன்.

வாள் பயிற்சிக் கூடம்

★

சுக: வீராதி வீரன் நான்—எதிரிகள் எந்தப் பக்கம் இருந்து வந்தாலும் சரி—அவர்களை எதிர்த்து முறியடிப் பேன்...அக்ரோணிக் கணக்கிலே சேனைகள் வந்தாலும் சரி! அவைகளைப் பானைகளைப் போல் அடித்து நொறுக்குவேன், கோட்டைகளை முற்றுகையிட்டாலும் சரி...கொலு மண்ட பத்தில் நுழைந்துவிட்டாலும் சரி...எதிர்த்து...விரட்டி... அடித்து...உதைத்து பகைவர்களைத் தாக்கித் தவிடு பொடி யாக்கி...சத கஜ துரக பதாதிகள் எல்லாவற்றையும் படு சூரணமாக்கி விடுவேன், உம்...ஆமாம்...எந்தக் கையிலே கேடயம் வச்சிக்கிறது, எந்தக்கையிலே கத்திவச்சிக்கிறது... அடேய் அதை மட்டும் சொல்லிவிடடா,

(முத்தன் வருகிறான்

ஆ!...இவனைக் கேட்டால் தெரியும்...முத்தா!...இன் னும் இரண்டு நாளில் நான் பெரிய வாள் வீரனாகிவிட வேண்டும்.

முத்: ஓ...வால் வீரனாகி விடலாம்.

சுக: என்ன! வால் வீரனா?...

முத்: அடடே தவறி வந்துவிட்டது.பரவா இல்லை... வால் வீரர் அனுமாரைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர் களே?.....

சுக : ஆமாம்... ஆமாம் அசோகவனத்தில் சீதையிடம் போனவர்...

சரி...சரி...வா...

(வாள் வீச ஆரம்பிக்கின்றனர்; முத்தன் கொஞ்சம் வேகமாகச் சுழற்ற.....)

ம்... இவருகிட்டயா நடக்கும்.

(மீண்டும் சண்டை)

ஏய்...இரு...இரு எங்காவது படாத இடத்தில் பட்டு உயிர் போய்விடப் போகிறது...கொண்டா அதை...

[அவனே போய் நீண்ட வாள்ஒன்றும் கட்டாரி ஒன்றும் எடுத்து வருகிறான் அங்கு நிற்கும் வீரனைப் பார்த்து.]

சுக : டேய்...நீ போ,

(முத்தனிடம்)

இந்தா...இதைப்பிடி...இப்போது பார்ப்போம் யார் ஜெயிப்பது என்று...

முத் : இருங்கள் இது போர் செய்யும் இலக்கணமே அல்ல.....

சுக : இலக்கணமே எனக்குத் தேவை இல்லை.

(முத்தன் மீது வாளை வீச, அது பட்டு விடுகிறது. இதை கவனித்த பூங்காவனம் ஓடி வருகிறாள்.....)

பூங் : சுகதேவ்!.....என்ன இது விபரீதமான விளையாட்டு.

சுக : கத்தி விளையாட்டு. நீ ஏன் அத்தை இதில் தலையிடுகிறாய்! முத்தா! காயத்துக்கு மருந்து போடு நான் வருகிறேன்.

[சுகதேவ்போகிறான் உடனே பூங்காவனம் துணியைக் கிழித்து கட்டுகிறாள்...]

(திகிலுடன்) முத் : இளையராணி...

பூங்: பாவா இல்லே முத்தா, நானே கட்டி விடு கிறேன்.

[அவள் கண்களில் நீர் கலங்குகிறது...]

முத்: யுவராணி ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்...

பூங்: ஒன்றுமில்லே முத்தா...இந்தா இதை சாப்பிடு கான் வருகிறேன்—யாராவது வந்து விடுவார்கள்...

மறைத்து வைத்திருந்த பழங்களை கொடுத்துவிட்டு போய் விடுகிறாள் முத்தன் பழங்களுடன் திகைத்து நிற்கிறான்.

சுகதேவன் அறை.

[சுகதேவ் கண்ணாடியில் தன் அழகை ரசித்துக் கொண்டிருக்கிறான். திரிசங்கு கடிதத்துடன் அங்கு வருகிறான்]

சுகதேவ்: என் அழகைக் காண இந்தக் கண்ணாடி போதாதே ஹாம்---திரிசங்கு: எனக்கா ஓலை?

திரிசங்கு: இல்லே தம்பி. எனக்குத்தான்.

சுகதேவ்: யாரிடமிருந்து?

திரிசங்கு: அவன் ஒரு வேலையற்றவன். பொழுது விடிந்தால் என் உயிரை வாங்குவதே அவனுக்கு வேலை.

சுகதேவ்: உயிரை வாங்குறானா? யாரப்பா அந்த எமன்?

திரிசங்கு: அதை ஏன் தம்பி கேட்கிறீங்க. எனக்கு ஒரு மருமகப் பயல் இருக்கிறான். அவனுக்குப் பெண் வேண்டுமாம்.

சுகதேவ்: ஏன்? பிறப்பதெல்லாம் ஆணாகப் பிறக் கிறதோ?

திரிசங்கு: இல்லே தம்பி இல்லே. கல்யாணத்துக்குப் பெண் வேண்டுமாம்.

சுகதேவ்: கல்யாணத்துக்குப் பெண்ணுதான் வேணும். வேறே என்ன வேணும்; அதுதானே திருமணத் துக்கு மூலப் பொருள்.

திரிசங்கு : தம்பி! மரம் பழுத்தால் வௌவால்களே வா என்று அழைக்கிறது.

சுகதேவ் : ஆமாம்! ஆமாம்! பழுத்த மரமும், பாழடைந்த மண்டபமும் வௌவாலே வா என்று அழைப்பதில்லே. சரி! அதுபோல.....

திரிசங்கு : என் மகள் பருவமடைந்து விட்டாள். பயல்கள் வலே வீசுகிறார்கள், அதற்குத்தான் ஓலே எழுதியிருக்கிறான் இந்த உதவாக்கரை. என் மகளின் அழகென்ன, குணமென்ன—அத்தான் முறைக்காக மட்டும் இத்தப் பயல் உரிமை கொண்டாடி விட முடியுமா தம்பி,

சுகதேவ் : ஓஹோ! அவ்வளவு அழகா உன் மகள்-

திரிசங்கு : நீங்கள் பார்த்ததே இல்லேயா?

சுகதேவ் : இல்லேயே உன் மகளின் பெய்ரென்ன?

திரிசங்கு : முத்தாயி — முத்தாயி என்றால் முத்தாயிதான்.

சுகதேவ் : உம் — காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சுதானே.

திரிசங்கு : இல்லேதம்பி. இது காக்கை அடை காத்த குயிலின் குஞ்சு.

சுகதேவ் : திரிசங்கு! வாயேன் உன் வீட்டுக்குப் போகலாம்.

திரிசங்கு : விளையாடாதீங்க — அரண்மனைக் காவல் காரன் வீட்டுக்கு இளவரசர் வருவதாவது ... வேடிக்கை வேடிக்கை.

சுகதேவ் : என்னிடத்திலே அந்த உயர்வு, தாழ்வு இல்லேயென்பது உனக்குத் தெரியாதாக்கும். நீ என் தந்தைக்குத்தான் வேலேக்காரன். எனக்கு ஒரு வயதான தோழன். சரிதானே?

திரிசங்கு : நான் பாக்கியசாலி.

சுகதேவ் : வா போவோம்.

[முத்தன்-முத்தாயி காதல் கீதம் பாட்டு முடியும் தருவாயில் சுமதி தன் இடையில் இருபுறங்களிலும் இரண்டு குடம் தண்ணீருடன் வருகிறாள். குடங்களை தூரத்தில் வைத்துவிட்டு முத்தன், முத்தாயி இருவரையும் பார்த்து தன் இரு கண்களையும் பொத்திக் கொண்டு அவர்களிடம் வந்து]

சுமதி : முத்தாயி! போகலாமா?

முத்தாயி : என்ன சுமதி! கண்ணை மூடிக்கொண்டாய்?

[கண்ணைத் திறந்து கொண்டு]

சுமதி : கார்யமாகத்தான். நேரமாகிறது. வா போகலாம்

முத்தாயி : போய் வரட்டுமா?

சுமதி : அந்த உத்திரவுமட்டும் அங்கே கிடைக்காது.

முத்தாயி : ஏது உன் தோழி பெரிய கைகாரிதான் போலிருக்கு.

சுமதி : கைகாரி மட்டுமல்ல-கால்காரி-சுழுத்துக்காரி-தலைகாரி.

முத்தன் : போதும்! போதும்! நீ வேறு காரி காரி முகத்திலே துப்பாதே.

முத்தாயி : சரி! நான் வருகிறேன். ஏ சுமதி! கொஞ்சம் அந்தப் பக்கம் திரும்பிக் கொள். இதோ வந்து விடுகிறேன்.

[சுமதி திரும்பி நிற்க, "இச்" என்ற ஒரு ஒலி சுமதியின் முகத்தில் எதிரொலிக்கிறது]

திருசங்கு வீட்டின் கொல்லைப்புறம்.

★

[முத்தாயி தண்ணீர் குடத்துடன் வருகிறாள்.

திரி : முத்தாயி !...முத்தாயி !

முத் : என்னப்பா ?.....

திரி : எங்கம்மா போயிட்டே? உன்னை நான் எங்கெல் லாம் தேடறது...யாரு வந்திருக்கான்னு பாரு ... தம்பீ வாங்க. சீ...சீ... உன்னையாரு கூப்பிட்டது...?

(ஆடுவருகிறது; அதைத்தொடர்ந்து சுகதேவ் வருகிறான்.)

நீங்க வாங்க தம்பீ !...வெட்கப் படாதேம்மா... யாரு மில்லை... இளவரசர் சுகதேவ் இவர்தான்.

முத் : வணக்கம் ...

சுக : வாழ்க! ... வாழ்க!... ஆஹா! ... கைகள் குவி வதும் விரிவதும் கமல மலர்போல் காட்சியளிக்கிறது. திரி சங்கு; நீ சொன்னது அவ்வளவும் உண்மைதான் ... ஐயோ பாவம்! வெட்கத்தால் கன்னங்கள் சிவந்தே விட்டன, மிள காய் பழம்போல—

[முத்தாயி உள்ளே போய்விடுகிறாள்]

திரி : பார்த்த உடனேயே இப்படி பரிகாசம் செய்ய லாமா தம்பி நீங்கள்.

சுக : ஆங்...என்ன சொன்னேன்?...எனக்குத் தெரி யாமலே ஏதாவது சொல்லிவிட்டேனா என்ன?...ம்...திரு சங்கு உன்னை ஒன்று கேட்கிறேன்...மறுக்க மாட்டாயே...

திரி : நீங்கள் மாளவயக்காரர் பலதேவரின் மகன் ... இளவரசர்...நான் கேவலம் உங்கள் வேலைக்காரன். கேட்கா மலேயே எடுத்துப் போகும் உரிமை இருக்கிறது உங்களுக்கு ...

சுக : ஆஹாஹா ...த்சு...த்சு...கண்கள் சுழலுகின் றன...காது கேட்க மறுக்கிறது ... நா அசைய மாட்டேன் என்கிறது... அய்யய்யோ! இருதயம் ஓடவே இல்லை.....

திரி : தம்பீ! ... தம்பீ! ... என்ன இது ... நான்போய் வைத்தியரை அழைத்து வரட்டுமா ..... ?

சுக : வேண்டாம் வேண்டாம், இது வைத்தியமில் லாத வியாதி...கண்ணெடு கண்நோக் கொக்கின் ... அதா

வது காதல் எனும் கள்மொந்தையில் ஒரு ஈ போல வீழ்ந்து விட்டேன்!

திரி : தம்பீ!...இன்றுபோய் நாளை வாருங்கள்; காரியம் வெற்றி.....

சுக : "இன்றுபோய் நாளைவா" ... அடடே! இந்த வார்த்தையை எங்கேயோ கேட்டமாதிரி இருக்கிறதே ... உம்...ஆமாம், கம்பராமாயணத்தில் ...இராமன் இராவணனை அப்படித்தான் வரச்சொல்கிறான்...அய்யோ! மறுநாள் வந்த இராவணனுக்கு வெற்றி கிடைக்கவில்லையே; மரணமல்லவா கிடைக்கிறது.....

திரி : மறுநாள் வந்த ராமனுக்கு வெற்றிதானே... தம்பி...

சுக : ஓ!...அப்படியானால் இந்த ராமன் கட்டாயம் நாளை வருவான்...

திரி : கட்டாயம் வாருங்கள்...

சுக : வராமல் இருப்பேனா?—திருசங்கு வீடு ஒரு தாமரைத் தடாகம்; அங்கு பறந்து வரும் வண்டு இந்த சுக தேவ்...வருகிறேன். திருசங்கு...

திரி : சரி தம்பி!...

(போகிறான். திருசங்கு கோபமாக)

திரி : முத்தாயி!...முத்தாயி!...

முத் : என்னப்பா! போய்விட்டாரா அந்த மனிதர்?..

திரி : மனிதரா?...

முத் : இல்லை...இல்லை...மன்னிக்கவும்; தவறிச் சொல்லி விட்டேன்...

திரி : மன்னிப்பதா...இளவரசே வீட்டுக்கு வந்திருக்கிறார்...இப்படித்தான் அவமானப் படுத்துவதா?...

முத் : இளவரசர்...ம்...மோசமான வாலிபன்...

திரி : யார் மோசம்? அவனுக்கென்ன அழகிலே குறைவா?..அந்தஸ்திலே குறைவா?..அசட்டுப் பெண்ணே-அவனுடைய அறிவை நீ உணரமாட்டாய்..

முத்: உனை முடியாத அளவுக்கு இந்த உத்தமரின் அறிவு ஊசி முனையைவிடச் சிறியது போலும்! இல்லையா அப்பா?...

திரி: போதும் நிறுத்து-அவன் நினைத்தால் ஊர்வசி ரம்பையெல்லாம் ஓடிவருவார்கள்...

முத்தாயி: இதிலென்னப்பா ஆச்சரியம்? ஆஸ்ரமத்து முனிவர்களிடமே ஓடிவந்தவர்கள் அரண்மனைக்காரர்கள் அழைத்தால் அட்டியா சொல்லப் போகிறார்கள்! வருவார் கள் அப்பா வருவார்கள்—

திரிசங்கு: வாயைமூடு வாயாடி! நான் கெஞ்சிக் கூத்தாடி அவளை வீட்டுக்கு அழைத்து வந்தேன்: நீ அவர் முகத்தில் கரி பூசி அனுப்பி விட்டாய்.

முத்தாயி: இல்லையே-அதற்குள்தான் போய் விட் டாரே—அப்பா! அப்பா! அவர் முகத்தில் கரி பூசினால் இன்னும் அழகாக இருப்பார் கார்மேக வண்ணன் போல.

திருசங்கு: ஜாக்கிரதை-காதில் விழுந்தால் கண்ணைப் பிடுங்கி விடுவார்.

முத்தாயி: கண்ணப்ப நாயனாரோ?

திருசங்கு: சீ! பேச்சுக்குப் பேச்சு பதில் பேசிக் கொண்டு.

[முத்தாயி சிரித்தபடி உள்ளே ஓடி விடுதல்]

பலதேவர் மாளிகை

பலதேவர்: ஆயிரக் கணக்கிலே படை வீரர்கள் இருக்கும் போது, வீர தளபதி வேலழகர் நீங்கள் இருக் கும் போது; வேங்கை நகரத்து அரசர் யாருக்காகப் பயந்து கொண்டு படையை இன்னும் பெருக்குகிறார்?

வேலழகன்: படையைப் பெருக்குவது பயத்திற் காக அல்ல...பாதுகாப்புக்காக பலதேவரே. சிறுத்தை பூரான் வேங்கை நகரின் மீது எப்போது பாயலாம், எந்தக் காரணம் கிடைக்கும் களம் அமைக்க என்று காத்துக் கிடக்கிறான். அதனால் தான் படை பெருக்கும் முயற்சியில் கிறிதும் தடைகூடாதென நம் மன்னர் உத்தர விட்டுள்ளார்.

பலதேவர் : என்னுல் இயன்றதைச் செய்யக்காத்துக் கிடக்கிறேன்.

வேலழகன் : நீர் செய்வீர், ஆனுல் உமது ஊர் மக்களுக்கு வேங்கை புரத்து படையிலே சேர்வதென்றுல் வெறுப்பாய்த் தானிருக்கும். ஏனெனில் அவர்களை அடிமையாக்கி வைத்திருக்கும் அரசனன்றே அவர்?

பலதேவர் : அதெல்லாம் ஒன்றுமில்லை. முதல் அடிமையாகிய நானே அவரை முழுந்தாளிட்டு வணங்குகிறேன். முழுமனதோடு அவர் வாழவேண்டுமென்று ஆண்டவனை பிரார்த்திக்கிறேன். தாங்கள் எதிர்பார்ப்பது போல் படையில் பலர் சேர்வர். சந்தேகமே இல்லை.

வேலழகன் : சரி! நான் தங்குமிடத்துக்குச் செல்ல வேண்டும்.

பலதேவர் : தங்களுக்காக தெற்கு ராஜ வீதியிலுள்ள தென்றல் மாளிகை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வேலழகன் : சந்தோஷம்

பலதேவர் மாளிகை

திரிசங்கு : தம்பி! தம்பி! நீங்கள் என் வீட்டுக்கு வந்ததும் போதும்... அப்பப்பா! அதிலேயிருந்து முத்தாயிக்கு உங்கள் பேச்சேதான்.

சுகதேவ் : என்ன—எது--இருஇரு-அப்படியா இந்தா திரிசங்கு! இந்தா--இந்தா! இதிலே நூறு பொன் இருக்கு... வச்சுக்க...ம்...என்னு சொல்லுது-என்னு சொல்லுது—

திருசங்கு : முத்தாயி சொல்லுது தம்பி, உங்க நடையிலே ஒரு வீரம் இருக்கிறதாம்-கண் பார்வையிலே ஒரு கம்பீரம் இருக்கிறதாம்-பேச்சிலே இனிமை இருக்கிறதாம். கையிலே என்னமோ இருக்குதுன்னு சொல்லுச்சே.

சுகதேவ் : விரல்—விரல்!

திரிசங்கு : இல்லை தம்பி...

சுகதேவ் : விரல்லே மோதிரம் இருக்கு...

திரிசங்கு : அது இல்லே தம்பி–போங்க நீங்க-எனக் கென்ன இந்த எழவு காதல் வர்ணணேயெல்லாமா தெரியுது.

சுகதேவ் : அப்படியானுல் முத்தாயிக்கு என் மீது காதல். ஆஹா! திரிசங்கு! உன்னேப்போல ஒரு அப்பனும் அந்த அப்பனுக்கு முத்தாயி போல ஒரு மகளும் இருந் தால் உலகம் வெகு விரைவில் எதிர்ப்பில்லாத காதல் சோலையாக மாறிவிடும். முத்தாயி! நீயும் நானும்...அய்யோ எப்படி வர்ணிக்கிறதுன்னே தெரியலியே திரிசங்கு! நம்ப நூல் நிலையத்திலே கம்பராமாயணம் இருக்கிறதா?

திரிசங்கு : என்ன தம்பி! காதலுக்கும், கம்பராமா யணத்துக்கும் என்ன சம்பந்தம்?

சுகதேவ் : அய்ய்ய்யோ! முக்கால் வாசி ராமாயணமே அது தான், ஆஹா! கவிச்சக்கரவர்த்தி கம்பர் காதலேப் பற்றி எப்படி வர்ணித்திருக்கிரூர் தெரியுமா... ஒரு பாட்டு கேளு திரிசங்கு...

கோமுனியுடன் வரு கொண்டல் என்றபின் தாமரைக கண்ணினுன் என்ற தன்மையால்...ஆம்...அவனே கொல் என்று ஐய நீங்கினுள்...வாமமேகலேயி வளர்ந்தது...ம் போச்சு, அதற்கு மேல் மறந்து விட்டேன்...வா வா அதைத் தேடலாம்.

ஆற்றங்கரை

முத்தாயி : தேடக் கிடைக்காத தங்கம் நீங்கள்... உங்களிட மிருந்து என்னேப் பிரித்துவிட முயலுகிரூர் அப்பா.

முத்தன் : உன் அப்பா நினேப்பதும் சரிதானே. இளவரசன் சுகதேவ் எங்கே? நான் எங்கே? அரண்மனே யிலே குதிரை தேய்ப்பவன் நான்... தாயை இழந்தவன்... தகப்பன் யாரெனத் தெரியாதவன்...உற்ரூர், உறவினர் அற்றவன்... தனி மனிதன்.

முத்தாயி : தனி மனிதர்...நட்சத்திரங்கள் கூட்ட மாய்த்தான் இருக்கின்றன. நிலவு தனியாகத் தானிருக் கிறது. ஆனுல் அல்லி மலர் எதிர்பார்ப்பது நிலவைத்தானே?

முத்தன் : என் அல்லி-பாலையக்காரர் சம்மந்தியாக ஆசைப்படும் உன் அப்பா—இந்தப் பாரிக்கா உன்னை அளிக்கப் போகிறார்? கனவு...கனவு..

முத்தாயி : கனவையும் பலிக்க வைக்கிறேன் கண்ணுளா...கவலையை விடுங்கள்...எங்கே என்னைப் பாருங்கள்; பார்க்க மாட்டீர்களா? என் முகம் உங்கள் கவலையைத் தீர்க்கும் மருந்தாக இல்லையா?

[முத்தன் பார்த்தல். இருவரும் புன்னகை]

முத்தன் : மருந்துதான்..என் மாணிக்கவல்லி! கவலை தீர்க்கும் மருந்துதான்...இந்தக் கள்ளமிலா வெள்ளி நிலவு. துன்பச் சுவை குவிந்துவிட்ட எத்தனை எத்தனை பொல்லாத இரவுகள் சொல்லாமல் ஓடியிருக்கின்றன, சுந்தரி... உன் சோபித முகத்தை நினைப்பதாலேயே...ஏழைதானே நான் என எண்ணி ஏங்குவேன்...ஏழடுக்கு மாளிகைக்காரனுக்கும் கிடைக்காத ரத்தினத்தைப் பெற்றிருக்கும் நீயா ஏழை என்று அதட்டிக் கேட்கும் உன் அழகின் எல்லையை இன்னும் அறிய முடியாத என் கண்கள். இன்பமே! நீ எனக்கு வேதனை தீர்க்கும் மருந்துதான்...இணையில்லா விருந்துதான்...

[தழுவுகிறார்கள்]

முத்தாயி : ஸ்...பறக்காதீர்கள்.

முத்தன் : வசந்தத்தின் ஸ்பரிசத்திலே வானம்பாடி பறக்காமலிருக்குமா?

முத்தாயி : பறப்பதற்கு ஒரு இறக்கை போதாது.

முத்தன் : அதற்குத்தான் உன்னையும் அழைக்கிறேன்.

முத்தாயி : ஆமாம்! எங்கே பறப்பது?

முத்தன் : நீலநிற வானத்தின் விளிம்பிலே, கோலஞ் செய் மேகக் கூட்டத்தின் இடையிலே-அருவியின் மேலே-அழகுச் சோலையின் சுறுசுப் புறங்களிலே—

[சிரிக்கிறாள்]

என்ன முத்தாயி சிரிக்கிறாய்?

முத்தாயி : கேள்விப்பட்டிருக்கிறேன்...கவிஞன்... காதலன்...பித்தன்...மூவரும் ஒரே வகை என்று. கவிஞன் வானத்துத் தாரகையைப் பார்த்து 'ஏ, விண்மீன்களே! யாரைப்பார்த்து கண் சிமிட்டுகிறீர்கள்' என்று சண்டைக்கு போவானும். காதலனே வெண்ணிலாவைப் பார்த்து-'என் காதலி எங்கே என்று' கேட்டுப் புலம்புவானும். நிலவைத் தூது போகச் சொல்வானும். அந்த இருவருமே பித்தர்கள் என்பார்கள் வேடிக்கைக்கு...அது உண்மையாகத்தான் தெரிகிறது, உங்களைப் பார்க்கும்போது...

[தொடுகிறாள்]

முத்தன் : உஸ்...தொடாதே...நான்தான் பித்தனுயிற்றே.

முத்தாயி : பித்தனுனுலும் என் முத்தனல்லவா? பித்தா! பிறைசூடி! பெருமானே!

[தொடுதல்]

முத்தன் : ஸ்...அம்மா. இரு முத்தாயி.
முத்தாயி : ஏன்! தீண்டினுல் திருநீலகண்டமா?
முத்தன் : யார் சொன்னது அப்படி...முத்தாயி...
முத்தாயி : அத்தான்!

[சுகதேவ், திரிசங்கு]

சுகதேவ் : ஆ! சரிதான்..சரிதான்..மாலை நன்னேரம்.. சோலையின் ஓரம்...

திரிசங்கு : இளவரசே! நீங்கள் தவருக நினைக்கா தீர்கள், என் பெண்ணை பலாத்காரம் செய்ய ஆரம்பித்திருக் கிறான் இந்தப் பயல். ஏ அறிவு கெட்ட பயலே! என்ன காரியமடா?

முத்தாயி : அப்பா!
திரிசங்கு : நீ பயப்படாதேயம்மா-அவன் என்னை ஒன்றும் செய்துவிடமாட்டான்-சும்மா பெண்களை மிரட்டு கிற சோம்பேரிப் பயல்.
முத்தாயி : இல்லையப்பா.

[திடுக்கிட்டு]

திரிசங்கு : எனக்குத்தான் எல்லாம் புரிகிறதே...நீ ஏன் இங்கெல்லாம் தனியாக வருகிறாய்?

முத்தாயி : சொல்வதைக் கேளுங்கள்.

திரிசங்கு : நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்; நீ போம்மா வீட்டுக்கு...இந்தப் பாவிக்கு நேராக நிற்காதே... தவறு...போம்மா-போகிறாயா இல்லையா? உம்...போ...

[முத்தாயி போகிறாள் கலங்கியபடி]

கடவுளே! என் பெண்ணின் மானத்தைக் காப்பாற்றினாய்...உனக்கு கோடி நமஸ்காரம்...இளவரசே! பார்த்தீர்களா இவன் அக்கிரமத்தை...

[முத்தன் முதுகில் தட்டி]

சுகதேவ் : ஏ முத்தா! முணு முணுக்கிறதா முதுகு? அரைப்பட்டினி ஆண்டிப் பயலே! அணுகாதே.

முத்தன் : தீர்ந்ததா அகாதி?

சுகதேவ் : பேசாதே...பேடி நாயே! அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழி இல்லை. காதல் பண்ணுகிறாயும் காதல்.

முத்தன் : சீமான் மகனே! இருதயத்துக்கும், இரைப்பைக்கும் வித்தியாசம் தெரியாதவனே! உனக்கு காதல் இலக்கணம் சொல்லித் தருகிறேன்...கேள்...

பன்னீரிலே குளித்து, பழரசத்திலே நீந்தி, கன்னியர் புடைசூழ கட்டிலறைக்கு சென்றுதான் வருவேன் என்று சொல்வதல்ல காதல்...காதல் ஒரு நிலவு...அது ஒரு தென்றல்...மாளிகைக்கு மட்டுமல்ல.மண் குடிசைக்கும் வரும்...காதல் பணமல்ல; உன் பளிங்கு மண்டபத்தோடு நின்றுவிட...

திரிசங்கு : சரிதாண்டா; அதிகப் பிரசங்கித்தனத் திலே அயோக்கியத்தனத்தை மறைக்க முடியாது.

முத்தன் : அது எப்படி முடியும்...அதற்கு பாலையக் காரர் மகளைப் பிறக்க வேண்டுமே...

சுகதேவ் : சீ! தகப்பன் பெயர் தெரியாத தறுதலை.

முத்தன் : உனக்குத் தெரியுமா தகப்பன் பெயர்?

[இருவருக்கும் சண்டை]

சுகதேவின் தொப்பி மேலே சென்று விடுகிறது. முத்தனின் அடியால் கீழே விழுகிறான் சுகதேவ். பின் எழுந்து திரிசங்கு வைத்திருக்கும் கைத் தடியை வீரத்தோடு வாங்கி முத்தனைத் தாக்குவதுபோல் சென்று மரத்தில் தொத்தி இருந்த தன் குல்லாவை எடுத்துக் கொண்டு முத்தனிடம் 'ஏய் முத்தா' ஜாக்கிரதை; ஜாக்கிரதடா என்று தண்ணீரில் வீழ்ந்து விடுகிறான்.

தென்றல் மாளிகை

வீரன் : வாங்க...வாங்க...நீங்க தானே வேதாளம்?

வேதாளம் : ஆமாம்.

வீரன் : அது என்ன, வேதாளம் என்று பெயர் வச்சிருக்கீங்க, உங்க அப்பா, அம்மா விக்ரமாதித்தன் கதை படிக்கிறது உண்டா?

வேதாளம் : உண்டு; உண்டு—ஏன்?

வீரன் : விக்ரமாதித்தன் கதையிலே ஒரு வேதாளம் வருது—அதைப் படிக்கும் போது நீங்க பொறந்திருப்பீங்க அதனாலே உங்களுக்கு வேதாளம்னு பேரு வச்சிருப்பாங்க. நல்ல வேளையா கிஷ்கிந்தா காண்டம் படிக்கும் போது நீங்க பொறக்காமே இருந்தீங்களே. வாங்க! வாங்க!

[வேலழகன் வருதல்; வேதாளம், வீரன் வணங்குதல்]

வீரன் : பிரபு! இவர்தான் தாங்கள் கூப்பிட்டு அனுப்பிய வேதாளம்.

வேலழகன் : ஓ! வேதாளம்! வாரும். உம்மைப் பற்றி நான் நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். பலதேவரும் சொன்னார் மிகுந்த திறமைசாலி என்று. நான் வந்திருக்கிற காரியம் உமக்குத் தெரியும்; படைக்கு ஆள் திரட்ட என்று. அதற்கு நீரும்...

வேதாளம் : நானு! அய்யோ! எனக்கு வாளைத் தூக்கக்கூட சக்தியில்லே.

வேலழகன் : நீர் படையில் சேர வேண்டாமய்யா... கொஞ்சம் ஆட்கள் பிடித்துக் கொடும். வேலையில்லாதவர்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள்.

வேதாளம் : படையில் சேருவதென்றால் பயப்படு வார்களே.

வேலழகன் : பலி பீடத்திற்கு வருவதற்கு ஆடு கூடத்தான் பயப்படும். அதற்காகத்தான் மஞ்சள் நீர் தெளித்து, மலர் தூவி, ஆகாரத்தையும் எதிரே நீட்டி ஆசை காட்டுவது; முயற்சி பண்ண வேண்டும்.

வேதாளம் : சரியான பேச்சு; தங்கள் உத்தரவுப் படியே வேலையை ஆரம்பிக்கிறேன். இன்னொரு விண் ணப்பம்.

வேலழகன் : என்ன?

வேதாளம் : இந்த ஊரில் ஒரு பெரிய சாமியார் இருக்கிறார். அவர் பேச்சை தெய்வப் பேச்சாக எல்லோரும் எண்ணுவார்கள். அவரிடம் சொல்லி படைக்கு ஆள் சேர்க் கும் பிரச்சாரத்தை செய்யச் சொன்னால் நமது வேலை சுலப மாக முடிந்து விடும்.

வேலழகன்: பொருள் எதுவும் தர வேண்டுமோ அவர் அருளைப் பெற.

வேதாளம் : பொருளா? அவர் வாங்கவே மாட்டார். அவர் கையால் பொருளைத் தொடுவதேயில்லை. மடத்தில் ஒரு உண்டியல் இருக்கிறது. அதில் போட்டுவிட வேண்டும்.

பலதேவர் மாளிகை

[பலதேவர் மனைவி, பூங்காவனம் இருவரும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். சுகதேவ் மாடியிலிருந்து இறங்கி வருகிறான். திரிசங்கு ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கிறான்.]

சுகதேவ் : திரிசங்கு! காரியம் வெற்றி! ஜெயம்... ஜெயமே ஜெயம்

திரிசங்கு : என்ன தம்பி?

சுகதேவ் : அப்பா சம்மதித்து விட்டார். முத்தனை வேலையை விட்டு விலக்க உத்திரவு கொடுத்து விட்டார்.

பூங்காவனம் : என்ன! முத்தனை விலக்கவா? ஏன்? எதற்காக?

சுகதேவ் : உம்...எதற்காகவா? நமது திரிசங்குவின் மகள் முத்தாயியின் கையைப் பிடித்து இழுத்தான். நான் அதைக் கண்டித்தேன். கன்னத்திலே சரியான அறை.

ராணி : என்ன?

சுகதேவ் : ஆ! ஆ! நான் கொடுத்தேன் அவனுக்கு.

பூங்காவனம் : அதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறாயா? ஏழையை அடிப்பதில் ஒரு உற்சாகமா உனக்கு?

[முதுகைத் தடவிக் கொண்டு]

சுகதேவ் : உம்—நடந்த விஷயம் உனக்குத் தெரியாது அத்தை. தெரிந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாய்.

பூங்காவனம் : சுகதேவ்! முத்தனை விலக்க வேண்டாம். அவனுக்கு நம்மைத் தவிற வேறுயார் இருக்கிறார்கள்? பாவம் அனுதை—அவன் எங்கு போவான்.

சுகதேவ் : அத்தே! கல்யாணமே வேண்டாமென்று கன்னியாக இருக்கும் நீ கடவுளை நினைத்துக் கொண்டு ஜபமாலை உருட்டுவியா? இந்த வம்புக் கெல்லாம் ஏன் வருகிறாய்?

பூங்காவனம் : பார்த்தீர்களா அண்ணி உங்கள் மகன் பேசுவதை.

ராணி : சுகதேவ்! சும்மா இரு.

சுகதேவ் : சரிசரி! வா; திரிசங்கு

[பூங்காவனம் முகவாட்டம்]

குதிரைக் கொட்டடி

முத்தன், வாளை சரிபார்த்துக் கொண்டிருக்கிறான். அங்கே பூங்காவனம் வருகிறாள்...

பூங் : முத்தா!...

முத் : இளையராணி! என்னவேண்டும் தங்களுக்கு?...

பூங் : ஒன்று மில்லை...உனக்கும் சுகதேவனுக்கும்...

முத் : ஆமாம் ராணி...ஏதோ ஆத்திரத்தில்...

பூங் : உம்...யார் அந்த முத்தாயி...?

முத் : (திகைப்பு; மௌனம்...)

பூங் : சொல்ல மாட்டாயா?...உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவள்யார்?...அழகிதானு?...அருங் குணவதியா?...உனக் கேற்ற சுந்தரிதானு?...சொல்ல மாட் டாயா?...முத்தா!...அத்தப் பெண்ணுக்காக—நீயும் இள வரசனும் பெரிய யுத்தமே நடத்தி இருக்கிறீர்களா?...

முத் : அம்மணீ!...

பூங் : உங்கள் தகாறின் விளைவு என்ன ஆகி விட் டது தெரியுமா...?உன்னுடைய வேலைக்கே ஆபத்து வந்து விட்டது...

உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் பாக்கியத்தை யும் இந்தப் பாவி இழந்து விட்டேன்...

முத் : இளையராணி!...

பூங் : அப்படி அழைக்காதே...

[சுகதேவின் குரல் கேட்கிறது. பூங்காவனம் மறைந்து கொள்கிறாள். திரிசங்கு வருதல்...

சுக : என்ன எதிர்ப்பதா?...என்னை எதிர்க்க ஈரேழு பதினாலு லோகத்திலும் மனிதர்கள் உண்டா? என்ன திரு சங்கு...

திரி : ஊகூம்...

சுக : பதினாலு லோகத்தில் என்ன? சந்திரமண்ட லத்திலும் மனிதர் கிடையாது..சூரியமண்டலத்திலும் கிடை யாது...நட்சத்திர மண்டலத்திலும் கிடையாது...

திரி : கிடையாது தம்பி ... கிடையாது ... உங்களை எதிர்க்க ஒருத்தரும் கிடையாது...

சுக : ஒருத்தன் இருக்கான்—அவனும் அழிஞ்சான்; ...யாரு?...அவன்தான் இந்த முத்தன்...ஏ, முத்தா!...நீ செய்த குற்றத்திற்காக வழக்கு...விசாரணை...தீர்ப்பு...எது வும் கிடையாது ... தண்டனையை ஏற்றுக் கொள் ..... உனக்கு இனி இங்கு வேலை கிடையாது...

முத் : நன்றி...

சுக : நன்றியா?... அங்கீகரிக்க முடியாது. திருப்பப் பெற்றுக் கொள்!... திரிசங்கு... அரண்மனை வேலை மட்டு மல்ல ஊர்முழுதும் அறிவித்து விடு!... நமது அதிகாரத்திற்கு உட்பட்ட எந்த இடத்திலும் யாரும் இந்தப் பயலுக்கு வேலை கொடுக்கக் கூடாது... வேலை கொடுத்தால் — வாலை நறுக்கி விடுவேன்... தோலை உறித்து விடுவேன் ... காலை முறித்து விடுவேன்... ஓலை கிழித்து விடுவேன்...

முத் : ஏன்! ... இனிமேல் சொல்ல "லை" கிடை யாதா?... மாலையைப் பிய்த்து விடுவேன் என்று சொல்லுமே!

சுக : என்ன...என்ன...மாலையைப் பிய்க்கிறதா?... நான் என்ன குரங்கா? உம்...டேய் முத்தா! மறுபடியும் உனக்கும் எனக்கும் பெரிய போர் ஆரம்பமாகப் போகிறது ...மரியாதையாக உடனே அரண்மனையை விட்டு வெளி யேறு!... தகப்பன் பெயர் தெரியாதக் கழுதை!...

[முத்தன் கோபத்தைக் கண்டு சுகதேவ் வேக மாகப் போய் விடுகிறான்...]

சுக : வா!... திருசங்கு!...

[முத்தன் திகைத்து நின்கிறான். பூங்காவனம் வந்து]

பூங் : முத்தா! ... போகும்போது என் மாளிகைப் பக்கம் வந்து விட்டுப் போ!... மறந்து விடாதே... அவசியம் வரவேண்டும்... கட்டாயம் வா ...

[போகிறாள். முத்தனுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது... பூங்காவனம் சொல்லிய வார்த் தைகள் அவனுக்கு திரும்பத் திரும்ப ஒலிக் கிறது...]

முத் : என் வாழ்க்கையே குழப்பமாகி விட்டது...

பூங்காவனம் அறை

குரல் : இங்கென்ன வாழ்கிறது! இங்கேயும் குழப் பம்தான்! காதல்புரு ... கன்றைநாடும் பசு ...மான்தோல் வேங்கை! எத்தனைச் சிறப்பான கருத்து கலையின் அழகே அழகு... அந்தக் கருத்துக் கலைகள் அவளுக்கு ஒரு ஆறு

தலா என்ன? ...அந்த உயிர்நிறை ஓவியங்களை பூங்காவனம் பார்த்திருக்கிறுள்...

—ஆனலும் இப்போதும் அவைகளை அவள் பார்த்துக் கொண்டே இருக்கிறுள்... அவள் கண்கள் அடிக்கடி வாயிற் புறத்தை வட்டமிட்டு திரும்பியபடி இருக்கின்றன. காலடி யோசை கேட்கிறதா என்று கவனித்தபடி இருக்கின்றன

முத்தன் வருவானு என்ற ஆவலை வெளிட்டபடி துடிக் கிறது இருதயம்... ஆ!... அதோ வந்து விட்டான். முத்தன் வந்தே விட்டான்.

(முத்தன் வருகிறுன் தயங்கியபடி)

பூங் : வா...முத்தா வா...

முத் : ஏன் கூப்பிட்டீர்கள்?...

பூங் : சொல்கிறேன் வா!...

முத் : வேண்டாம் இங்கேயே இருக்கிறேன்...

(அவனிடம் ஓடி)

பூங் : என் கண்ணு; என் அருகே வா!...

முத் : ஆ! ...

பூங் : முத்தா...முத்தா...

முத் : இளையரானி! உங்கள் தகுதிக்கு இது அழ கல்ல... கல்யாணமே வேண்டாம் என்று கன்னிப் பெண் ணுக வாழ கங்கணம் கட்டிய நீங்கள் கண்ணு வாராய் என்று என்னை அழைக்கிறீர்கள்?...

பூங் : முத்தா!...என் கண்ணு!...

முத : போதும் யுவாணி! ஞாபகமில்லையா உங்க ளுக்கு?...என் தாயார் என்னைத்தனியே விட்டுவிட்டு அரண் மனை வேலைகளைக் கவனிக்கும் போது—சிறுவனுக விளை யாடிய என்னை சீவி சிங்காரித்து வாரி அணைத்து மகிழ்வீர் களே—அப்பேற்பட்ட தாங்களா இந்த அக்ரமத்துக்குத் துணிந்து விட்டீர்கள்...

பூங் : இன்பமே!...இதைக்கேள்...

முத்: கேட்க வேண்டாம்...கோமானின் தங்கை நீங்கள்...ம்...நானே குதிரைகாரன் ... ராஜாபர்த்ருஹரி கதைதான் அம்மா கேள்விப் பட்டிருக்கிறேன்...இது அதை விடவேடிக்கையாயிருக்கிறது...

பூங்: முத்தா?...

முத்: சரி சரி...இனியும் நான் இங்கே இருந்தால், அடங்கிக் கிடந்து இவ்வாறு அலைமோதும் உங்கள் ஆசை வெள்ளத்திலே எங்கேயோ ஒரு ஆபத்தான மூலைக்கு அடித்துச் செல்லப் படுவேன்...ம்...இந்த அடங்காத பிரியத்தை உங்களை அடைய முடியாமல் தவித்து பிரமச் சரிய விரதம் பூண்டிருக்கும்...வேங்கைநாட்டு மன்னனிடம் காட்டிஞல் இந்த நாட்டுக்கு விடுதலையாவது கிடைக்கும் ... நான் போய்வருகிறேன்...

பூங்: முத்தா...நில்...

முத்: கூடாது...பூங்காவனத்திலே புயல் புகுந்து விட்டது, அதை எதிர்த்து நிற்க என்னால் முடியாதம்மா முடியாது; வருகிறேன்!

திருசங்கு வீடு

திருசங்கு: உம்...முத்தன் ... சத்தற்ற சக்கைதான் இனிமேல் —; அரண்மனையில் மட்டுமல்ல — பாளையக்காரர் அதிகாரத்திற்குட் பட்ட எந்த இடத்திலும் வேலை கிடையாது அவனுக்கு.

முத்தாயி: அப்பா! அவருக்கு வேலை கிடைக்கும் வரையில் அவர் நம் வீட்டில் இருந்தால் என்ன?

திரிசங்கு; சரிதான்! சர்ப்பத்தோடு விளையாடாதே என்கிறேன் நான்; நீ அதையே கொண்டு வந்து எனக்கு மாலையாகவும் போடுவேன் என்கிறாய். முத்தாயி! நான் சொல்வதைக்கேள். கண்ணைத் திறந்து கொண்டு கள்ளிக் காட்டில் நடக்க எவனும் துணிய மாட்டான்.

முத்தாயி: கள்ளிக்காடல்ல அப்பா-காதற் சோலை.

திரிசங்கு: வாயை மூடு-இல்லாவிட்டால் நாளைவது காதை மூடிக்கொள்கிறேன். தரித்திர நாராயணனிடம்

காதலாம் காதல்; சேளம்மா கொஞ்சம் தயவு செய்து. கடன் பட்ட குடும்பம் நம்முடையது. அது மட்டுமல்ல.

கடமையும் பட்டிருக்கிறேன் இளவரசருக்கு-தேவை யான போதெல்லால் எனக்குப் பொருள் கொடுத்திருக் கிறார்-நானும் கைநீட்டி வாங்கியிருக்கிறேன்- அன்றைக்குக் கூட திருமண முன் செலவுக்காக சிறு பொன் கொடுத்தி ருக்கிறார்.

[பெட்டியைக் காட்டி]

முத்தாயி : அப்பா! பொருளுக்காக என் வாழ்வு பாழாகி விடுவதா? வாழ்வுக்கேற்றவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்குக் கிடையாதா அப்பா?

திரிசங்கு : உன் வாழ்வுக்கேற்றவனைத்தான் மாட மாளிகை, கூடகோபுரத்தோடு தேர்ந்தெடுத்திருக்கிறேன். இரும்புப் பெட்டியே நம்மை நாடி வருகிறது-நீ திருவோட் டைத் தேடி ஓடுகிறாய்,

முத்தாயி : அப்பா! சுதந்திரமாக வளர்ந்த என்னை பாளையக்காரரின் சொத்துக்களைப் பிடிக்கும் சூதாட்டக் காரியாக; உங்கள் கடனை அடைக்கும் அடமானப் பொரு ளாக ஆக்கிவிடாதீர்கள் அப்பா.

திருசங்கு : போதும் முத்தாயி போதும்—நீ அந்த அன்னக காவடிக்கு மாலையிட என் உயிர் உள்ளவரை சம்மதிக்க மாட்டேன். நீ மறுத்தால் என் பிரேத ஊர்வலம் போன பிறகுதான் உங்கள் கல்யாண ஊர்வலம் போக முடி யும். ஆமாம்! ஞாபகம் வைத்துக் கொள்.

அஞ்சல் மனை

[முத்தனும், நண்பர்களும் இருக்கிறார்கள்]

முத்தன் : ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்— இன்று; நான் நாளை நீங்கள்; இப்படி வயிற்றில் அடிக்கப் படலாம்.

நண்பன் : இதற்கு வேறு என்னதான் வழி...?

முத்தன் : நாமெல்லாம் அடிமைகளாய் இருக்கும் வரையில் நாளுக்கு ஒரு அதிகாரம் ஆளுக்கு ஒரு நாட்

டாண்மை இருக்கத்தான் செய்யும்...தேளுக்கு இடம் தேடிக் கொடுத்துவிட்டு தேன் துளிகளுக்கு ஆசைப்பட முடியுமா?...வேங்கை நாட்டான் பழுதூர் பாளையக்காரரை மிரட்டுகிறான்... பாளையக்காரர் நம்மை மிரட்டி அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கிறார்...வீட்டு ரோஜாக்களைக் கசக்கி எறியும் காட்டு ராஜா தர்பார் நடத்துவானும் பாளையக்காரரின் மகன்...அதை நான் கேட்பது தவறும்?... குதிரைக் காரனும் நான்! கோபுர மேறிகளாம் அவர்கள்! உம்...கொஞ்சம் உயர்ந்த அடிமைகள்; அவ்வளவுதான்!

[நண்பர்கள் சிரிக்கிறார்கள்...]

சிரித்துப் பயனில்லை நண்பர்களே—சிந்திக்க வேண்டும், சிலந்திக்கூடாக மாறிவிட்ட நம் பழுதூரை சிங்காரப் பூக் காடாக மாற்ற வேண்டும்!...

[வேதாளம் வந்தபடி]

வேதாளம்: மாற்றுவப்பா; மாற்றுவ!...இந்த உள்ளங்கை இடத்துக்கு உள்ள வாடகையைக் கொடுக்க உன்னால் முடியவில்லை...நீ பழுதூரை பூக்காடாவும் மாற்றுவ!...புஷ்பக் காடாகவும் மாற்றுவ-ஏய்!...யாரப்பா நீங்களெல்லாம், ம்... உங்களுக்கு இங்க என்ன வேலை?...உம்...உப்... போங்க... போங்க...

[போகிறார்கள்]

ஏ,...முத்தா! முதல்ல என் வாடகையைக் கொடு...

முத்தன்: வாடகையா? இந்த சமயத்திலா கேட்கிறீர்கள்?...

வேதாளம்: வேறு எப்போது கேட்பது?... பொருள் இருக்கும்போதுதான் நீயே கொடுத்துவிடுவாயே, இல்லாதபோது கேட்டுத்தானே வாங்க வேண்டும்...

முத்: ஒரு வேலையும் கிடைக்கவில்லை...

வே: ஆமாம்!... இனிமேலும் கிடைக்காது... அதற்காக...

முத்: கொஞ்சம் பொறுங்கள்.

வே: ஏ, முத்தா! புத்தியற்ற வாலிபனே! இந்த உலகத்தில் பொருள் தேடவா வழி இல்லை...

முத்: திருடவா?...

வே: சே! ஆள் திடகாத்திரனுய் இருக்கிறுய்... தேகத்தில் நல்ல வலு இருக்கிறது...

முத்: டலதேவனை ஒரேயடியாக அடித்து வீழ்த்தி விடலாம்; இல்லையா?...

வே: பைத்யக்காரா!...அதுவல்ல நான் சொல்வது. வேங்கைபுரத்தாரின் படையில் சேர்ந்து விடு என்கிறேன்!

முத்: என்ன? படையிலா?!...

வே: ஆமாம்! பாளையக்காரர் அதிகாரம் தடுக்க முடியாது...புகழ் வாய்ந்த வேலை...போர் வீரன் வேலை...

முத்: போதும்...போதும்...நம்மை அடிமைப் படுத்தி இருக்கும் ஆதிக்கக்காரரின் சேனையிலே நான். சே! அதைவிட சாகலாம்!

வே: ஊரில் இருப்பவர்கள் எல்லோரும் முட்டாள் கள். நீதான் அறிவாளியா?...மாய்கைநாத சாமியாரே யுத்தப் பிரச்சாரம் செய்யப் போகிறார்...

முத்: சாமியார்! செய்வார் சண்டையில் சாகப் போவது அவர் அல்லவே...அகலல்!

வே: போதும்...நீ படையிலும் சேர வேண்டாம். ஒன்றும் வேண்டாம். எனக்கென்ன வந்தது? என் வாடகையை மாத்திரம் எப்படியாவது கொடுத்து விடு. நல்லவன் கேட்டுப் போகாதே—நான் போகிறேன்...பிரசங் கம் கேட்க.

[போகிறுன்]

மடாலயம்

[ஊர் மக்கள் கூடியிருக்கிறார்கள். தளபதி, வேலழகர், மருத்துவர் பூபதி, வேதாளம் மற்றும் பலர் இருக்கிறார்கள். மாய்கை நாத சுவாமிகளின் சொற்பொழிவு நடை பெறுகிறது.]

மாய்கை நாதர் : அன்பர்களே! இதுவரை தளபதி வேலழகர் படையின் பயன்கள் பற்றி அரியதோர் உரை நிகழ்த்தினர். நானும் அதைத்தான் சொல்லப்போகிறேன். பகவான் பரந்தாமனே பார்த்திபனே பாரதப் போரில் கலந்து கொள்ளச் சொல்லியிருக்கிறார். போர்கூடாது, அது ஒரு வெறியென்றெல்லாம் போதனை செய்கிறார்களே இன்று, அவர்கள் பகவத் கீதையைப் படிக்கட்டும். போரின் அவசியம் பற்றி அந்தப் புல்லாங்குழலூதி எவ்வளவு கூறியிருக்கிறார் என்பது புலனாகும். சிவன் கை சூலமும், சிவ குமாரனின் வேலும், விஷ்ணுவின் சக்கரமும் எதைக் குறிக்கின்றன? சமாதானத்தையா? சமரையா? ஆகவே, அன்பர்களே! எல்லோரும் போர் வீரர்களாக மாறுங்கள்...சாவுக்குப் பயப்படாதீர்கள். வாள் பிடிப்பதால் மட்டுமல்ல, வாழைப் பழத்தோல் சறுக்கி விழுந்து வாழ்வு முடிந்தோர் பலருண்டு; வீரனுக்கு மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் புகழ்தான். வளர்ந்து போன தோள்களிலே வாகைமாலை ஏந்துங்கள். அதற்காக கைகளில் வாளேந்துங்கள். தெய்வமே துணையென தின் தோள் தட்டிக் கிளம்புங்கள்... அம்மையப்பா! அறநெறி வாழ்க!...

மக்கள் : அம்மையப்பா! அம்மையப்பா!

[கூட்டத்தினர் கலைந்து போகிறார்கள். தளபதியும், சாமியாரும் தனியிடத்தில் சந்திக்கிறார்கள்]

தளபதி : மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

மாய்கை : கடமையைச் செய்தேன்.

தளபதி : தங்களைப் போன்ற மடாதிபர்கள் நாட்டுத் தொண்டு செய்யக் கிளம்பி விட்டால் இருண்ட உலகு வெளிச்ச மடைந்துவிடும். பின்னர் சந்திக்கிறேன். வருகிறேன்.

மாய்கை : அம்மையப்பா! அருள் நெறிவாழ்க.

[மாய்கை நாதர் தன் பீடத்தருகே வருகிறார். மருத்துவர் பூபதி மட்டும் அங்கேயே அமர்ந்

திருக்கிறார். அவரைக் கண்ட மாய்கை நாதர் திடுக்கிட்டு]

மாய்கை நாதர் : என்ன பூபதி! நீர் இன்னும் போக வில்லையா ?

பூபதி : என்னையே நான் மறந்து விட்டேன், சாமி யாரே! உமது சொற்பொழிவில் உள்ளத்தையே தொலைத்து விட்டேன். ஹரி...ஹரி...ஹரி...வாளையும், வேலையும் தொடாதே—வைகுந்தவாசனே தொழு...கையிலே கேட யம் ஏந்தாதே—கைலாச நாதனின் திருநீறை ஏந்து...அது எங்கே இப்போது? வளைந்துபோன தோள்களிலே வாகை மாலை யேந்துங்கள்...அதற்காகக் கைகளிலே வேலேந்துங் கள்...இது எங்கே? எல்லாம் மாயை...மாயாஜாலம்...இல் லையா சாமியாரே?

மாய்கை நாதர் : பூபதி! போதும், போய்வாரும்.

பூபதி : புகழ்கிறேன் சாமியாரே, புகழ்கிறேன்! ஆகாகா! ஆண்டவனே! உன்னை எது எதற்கெல்லாந்தான் பயன் படுத்துகிறார்கள். உலகத்திலே தோன்றும் மாகான் கள் எல்லாம், உன் அவதார மென்கிறார்கள். பரமாத்மாவாக அவதரித்து அர்ச்சுனனே போர் புரியச் சொன்னையாம். பிறகு பகவான் புத்தராகவும் நீயே அவதரித்து போர்புரிவது தீது என்று அசோகனுக்கு நல்வழி காட்டினையாம். உன்னையே இப்படி முரண்படுத்தி இருக்கும்போது இந்தச் சாமியார் எம்மாத்திரம் ?

மாய்கை நாதர் : பூபதி! சாது மிரண்டால் காடு கொள்ளாது பூபதி!

பூபதி : மிரள்வது சாது அல்ல... சூது, வாது, தீது இவைகள்தான் மிரள்கின்றன.

மாய்கை நாதர் : நமக்குள் என்னய்யா வம்பு...

பூபதி : நமக்குள் என்ன, அந்த ரகசியத்தைச் சொல்லி விடுமே.

மாய்கை நாதர் : பூபதி; உம்மைக் கும்பிடுகிறேன். போய்விடும். அந்த ரகசியத்தை மட்டும் கேட்காதீர்!

பூபதி : சாமியாரே! போகிறேன். சாமியாரே! ஒன்றுமட்டும் நினைவிருக்கட்டும். பொய் கொஞ்சம் கொஞ்சமாகப் போதாகி மலரும்...ஆனல் உண்மை திடீரென்று வெடித்துவிடும்...ஹ...ஹ...ஹ...வருகிறேன்.

[பூபதி போகிறார். சாமியார பெருமூச்சு விட்டு பீடத்தில் உடலைப் போடுகிறார்.]

அஞ்சல் மனை

[முத்தன் பாடிக் கொண்டிருக்கும்போது அஞ்சலோடி ஏதோ பைகளைத் தூக்கிக் கொண்டு வெளியே போகிறான் திரிசங்கு வருகிறான்.

திரிசங்கு : எங்கே முத்தன்? முத்தா!

முத்தன் : ஆ!

திரிசங்கு : பயப்படாதே முத்தா.

முத்தன் : பயமென்ன! அரண்மனையிலே ஏதாவது புதிய ஆணை பிறந்திருக்கும்.

திரிசங்கு : அரண்மனைக்கும், நான் வந்ததற்கும் தொடர்பே இல்லை...முத்தா, இங்கு யாருமில்லை அல்லவா?

முத்தன் : இல்லை...என்ன விஷயம்?

திரிசங்கு : உனக்கும், என் மகளுக்கும் உண்மையான அன்பு இருப்பது எனக்குத் தெரியும்.

முத்தன் : இப்போதாவது தெரிந்ததே!

திரிசங்கு: கேள் முத்தா! முத்தாயி உன்னைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்று கூறிவிட்டாள். நீ வீசிய வலையில் வீழ்ந்து விட்டாள்.

முத்தன் : நான் வீசவும் இல்லை. அவள் விழவும் இல்லை...நாங்கள் இருவருமே காதல் வலையில் சிக்கி விட்ட புறுக்கள்!

திரிசங்கு : அந்த வலையை அறுத்து என் மகளை விடுவிக்க வேண்டும். விடுவித்த பிறகும் அவளைத் துரத்தும் வல்லூறுக நீ இருக்கக்கூடாது.

முத்தன் : தூரத்தவேண்டிய தூரத்தில் அவள் இருக்க மாட்டாள். முத்தாயி என் தோளிலே தொத்தும் கிளி! என்னடா இது, மருமகப் பிள்ளை இப்படி கூச்ச மின்றி பேசுகிறான் மாமனாரிடம் என்று எண்ணுகிறீர்களா? மன்னிக்கவும்.

திரிசங்கு : கேள் முத்தா; நீதான் என் மானத் தைக் காப்பாற்ற வேண்டும். என் மகள் எப்படி வாழ வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன் தெரியுமா?

முத்தன் : உங்கள் எண்ணம் போலவே எங்கள் வாழ்க்கை நடக்கும்!

திரிசங்கு ; நடக்காது முத்தா, நடக்காது. வீணுகக் கெடுக்காதே ஒரு குடும்பத்தை.. நீ வாழ வகையற்றவன், வாழ முடியாதவன். என்னை விட்டுத் தள்ளு...உன்னைப் போல ஒரு ஏழைக்குப் பெண்கொடுக்க எந்த பித்துப் பிடித்த தகப்பனுவது ஒப்புக் கொள்வானு? உன்னால் நடத்த முடியுமா ஒரு குடும்பத்தை? நீயும் மனிதனுயிற்றே; கல்யாணம் பண்ணிக்கொண்டு மாமனார் வீட்டை எதிர் பார்த்துக் கிடக்க உனக்கு மானமில்லாமலா போய் விட்டது!

முத்தாயி சின்னப்பெண். உலகம் தெரியாதவள்..... காதல் பேசுகிறுள் இப்போது. கல்யாணமான பிறகு காதல் கீதம் எல்லாம் கதையைக் கட்டிவிடும். காதுக்கு வைரத் தோடு, கழுத்துக்கு முத்துமாலை—இப்படி மாறிவிடும் பெண்களுடைய புத்தி. முடியுமா உன்னால் அவைகளை வாங்கித்தர என்பெண்ணுக்கு. குடும்பம் இருக்கட்டும் திருமணத்திற்கு நிச்சயம் செய்ய ஒரு பொன் நாணயம் வைத்து புரோகிதருக்கு தட்சணை கொடுக்க வழியிருக் கிறதா உன்னிடம்? முத்தா! ஆத்திரமாகப் பேசுகிறேன் என்று நினைக்காதே; இன்னுன்றையும்சொல்லிவிடுகிறேன்.

அஞ்சல் மனையிலே வேலை பார்த்தாய். அதுவும் போய் விட்டது... அஞ்சல் மனைக்கு குதிரை தேய்த்து, அதற்குக் கூலியாக இந்த உள்ளங்கை போன்ற அறையிலே வசிக் கின்றாய். அந்த வேலையும் நீ பார்க்க முடியாது இனிமேல்;

அரண்மனை உத்தரவு தடுக்கிறது. இனி வீட்டு நிழல்கள், மரத்தின் நிழல்கள் இவைதான் உனக்கு வாசஸ்தலம்! முத்தா! உன்வறுமையைப் பரிகசிக்கிறேனென்று கவலைப் படாதே, கவலையோடு கவலையாக இன்னும் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நீ உணர்ந்து பார்ப்பதற்காக. உனக்கு வயதாகி இருந்து; உலகத்தோடு ஒட்டி ஒழுகும் பழக்க மிருந்து; உனக்கும் ஒரு மகள் இருப்பதாக வைத்துக்கொள் அந்தமகளை தகப்பன் பெயர் தெரியாத ஒரு மணமகனுக்கு மணம் செய்து கொடுப்பாயா? நீ செய்வாயோ என்னமோ. என்னால் முடியுமா? என் வைதீக மனம் இடம் கொடுக்குமா? யோசித்துப்பார்! உன் அம்மா காவேரி என்று தெரியுமே தவிர, அவள் உன்னை யாருக்குப் பெற்றாள் என்பது.....

முத்தன்: போதும்! போதுமையா போதும்!

திரிசங்கு: காதைப் பொத்திக் கொண்டு பயனில்லை. கண்ணை அகலமாகத் திறந்தும் பயனில்லை. கருத்துக் கதவைத் திற... கொஞ்சமாகத் திற, போதும். சிரும், சிறப்பும் சிங்கார மாளிகையும் அழைக்கிறது என் மகளை. நீ அதை மறுக்கிறாயா? மறுக்கிறாயா முத்தா? நீ மறுத்தால், அது அவள் மேல் உனக்குள்ள காதலுக்கு அடையாளமல்ல அவளை சீரழிக்க வேண்டு மென்ற உன் கொடிய எண்ணத்துக்குத்தான் அடையாளம். முத்தா! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். அவளை மறந்து விடு... அவளை மறந்து விடு.

முத்தன்: [அழுதபடி] ஆ! அய்யோ! மறக்கமுடியாத மாணிக்கம், இழக்க முடியாத செல்வம்... அதையா மறந்து விடுவது?

திரிசங்கு: நீ மறக்கா விட்டால் முத்தாயி தன் தகப்பனை மறந்துவிட வேண்டும். அப்படி மறந்து விட்டால் மரக்கிளையிலே அழகாக அந்தரத்திலே தொங்கும் இந்த திரிசங்குவின் பிணம் உன்னை சபிக்கும்... பிணம் உன்னை சபிக்கும்!

முத்தன்: அய்யா! என் உயிரை மறக்கச் சொல்கிறீர். மறந்து விடுகிறேன்.

திரிசங்கு : முத்தா!

முத்தன் : போய் வாருங்கள்.

[திரிசங்கு பூரிப்புடன் அதை விட்டுப் போகிறான். முத்தன் குழப்பமடைகிறான்.

தென்றல் மாளிகை

[படையில் சேருவதற்காக ஆட்கள் வரிசையாக நின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவன் கையொப்பமிடுகிறான் தளபதியின் முன்னால். அருகே வேதாளமும், அவன் எதிரே குறும்பனும் நிற்கிறார்கள்.]

குறும்பன் : உம்...கையெழுத்து போட்டாகி விட்டது. நீ படையில் சேர்ந்து விட்டாய் என்று அர்த்தம்.

[அடுத்து ஒரு ஆள் கையெழுத்துப் போட வருகிறான்.]

தளபதி : இனிமேல் விலகுவதாயிருந்தால் நூறு பொன் தண்டம் செலுத்த வேண்டும்.

ஆள் : நான் ஏங்க விலகப் போறேன்!

தளபதி : பெயர் என்ன?

ஆள் : சமாசம்!

தளபதி : சண்டையில் சேருகிறாயா?

ஆள் : ஆமாம்.

குறும்பன் : தகப்பனார் பெயர்?

ஆள் : தீன தயாளர்; தாயார் அன்புக்கரசி.

தளபதி : கையெழுத்திடு!

(தளபதி எழுந்து மற்றவர்களை நோக்க ஆள் வரிசை காட்டப்படுகிறது.)

தளபதி : சபாஷ்! வேதாளம்! இன்று நிறையத்தான் ஆட்களைக் கொண்டு வந்திருக்கிறீர்.

வேதாளம் : ஆமாம்! முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் பிரபு.

[வேதாளம் ஒரு ஆளைக்காட்டித் தொட்டு]

வேதாளம் : இவன் மிகவும் தைரியசாலி.

தளபதி : அப்படியா! சைன்யத்தில் ஒரு சரியான இடம் காத்திருக்கிறது.

வேதாளம் : இவனைப் பார்த்தீர்களா பிரபு? நூறு அடி விழுந்தாலும் நொறுங்காத மண்டை. தலைக்கனம் அதிகம்.

[பக்கத்திலே உள்ள ஒரு ஆள்]

ஆள் : அப்ப யுத்த மந்திரியாக்கூட வரலாம்.

[வேதாளம் அவன் மார்பில் அடித்து]

வேதாளம் : இவனுடைய நெஞ்சுறுதி அபாரம் பிரபு.

[இருவரும் சிரித்துக் கொண்டே இருக்கிறார்கள். திடீரென வேதாளம் பார்க்கிறான். முத்தன் நிற்கிறான். திடுக்கிட்டு]

வேதாளம் : யார் முத்தனா?

முத்தன் : ஆமாம்!

வேதாளம் : நீ.....

முத்தன் : படையில் சேர வந்திருக்கிறேன்.

வேதாளம் : பேஷ்! பேஷ்! பெருமை தருதும்பும் பிரபு அவர்களே! இவன் மிகவும் நல்லவன். இவனையும்...முத்தா! வா...வா...கையொப்பமிடு.

[வேதாளம் மேசையிடம் ஓடி கையெழுத்துப் போட வேண்டிய ஏடுகளை எடுத்து வருகிறான். முத்தனிடம் அவைகளை நீட்டி]

வேதாளம் : உம்...இதிலே கையெழுத்துப் போடு.

தளபதி : பெயர் என்ன?

முத்தன் : முத்தன்.

தளபதி : ம்...தகப்பனார் பெயர்?

[முத்தன் விழிக்கிறான்]

வேதாளம் : ம்...அது ஒன்றும் தேவையில்லை பிரபு.

தளபதி : ஓ! தாயார் பெயராவது...

முத்தன் : தாயார் காவேரியம்மாள். இறந்து விட்டார்கள்.

தளபதி : ம்...கையொப்பமிடு...

[கையொப்பமிகிறான், "முத்தாயி" என தவறிப் போடுதல்.]

தளபதி : என்ன? முத்தாயியா? ஹ...ஹ...ஹ... பயப்படாமல் போடு.

[முத்தன் கையொழுத்திடுகிறான்]

ஆற்றங்கரை சோலையோரம்

[முத்தாயி, சுமதி இருவரும் தண்ணீர் குடத்துடன் வருதல்]

சுமதி : பாவம்...இரண்டு மூன்று நாட்களாக கூத லனைக் காணுமல் ஒரே சங்கடமாய்த்தான் இருந்திருக்கும்... எங்கே...கை வளையல் கழலுகிறதா என்று பார்ப்போம்.

முத்தாயி : சுமதி, போதும்!

சுமதி : என், சொல்லச் சொல்ல வேதனையாயிருக் கிறதோ?

முத்தாயி : அது எத்தகைய வேதனையென்று நீ அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும்.

சுமதி : ஆண்டவனே! இந்த மாதிரி அனுபவங்கள் எனக்கு வாவேண்டாம்.

முத்தாயி : ஆண்டவனுக்கே வந்திருக்கிறதடி.

(முத்தன் வருகிறான்)

சுமதி : அதோ வந்துவிட்டார் உன் காதலர்.

முத்தாயி : சரி! சரி...சுமதி, நீ ஓடிவிடு.

சுமதி : வாட்டுமே...எனக்கு ஒன்றும் வெட்கமில்லை.

முத்தாயி : எங்களுக்கு இருக்குமடி...போய்விடடி.

சுமதி : சரி! போகிறேன்...நான் குளித்து முடிவ தற்குள் வந்துவிடு.

முத்தாயி : வரும் வரையில்தான் குளித்துக் கொண்டிரேன்...வெல்லத்தாலா செய்திருக்கிறது உன் உடம்பு... தண்ணீரில் கரைந்துவிட...

சுமதி : என் உடம்பு வெல்லமல்ல...இப்போதுவந்து வர்ணிப்பார் பார்...அப்போது தெரியும் யார் உடம்பு வெல்லமென்று ... (ஆண்போல) கற்கண்டே! தேனே! காய்ச்சிய பாலே!

முத்தாயி : போடி வாயாடி.

(கையை ஓங்குதல். சுமதி ஓடிவிடல். முத்தன் வருதல் முகவாட்டத்துடன்]

முத்தாயி : ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்? இதை சாப்பிடுங்கள்.

முத்தன் : வேண்டாம்.

முத்தாயி : ஓ! இரண்டு நாட்களாக வரவில்லையே— நான் கோபித்துக் கொள்வேன் என்று முந்திக் கொள்கிறீர்களா?

எனக்கொன்றும் கோபமில்லை. கையிலே இருக்கும் மை எழுதும் கோல் புருவத்துக்கருகே வந்துவிட்டால் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுமாம். அதுமாதிரி நீங்கள் என்னருகே வந்துவிட்டதும் நீங்கள் செய்த தவறெல்லாம் எனக்கு மறைந்து விடுகிறது.

முத்தன் : முத்தாயி! இரண்டு நாள் வராததற்கே இப்படி வருந்துகிறாயே—நாம் சந்திக்கவே முடியாத அந்த இருண்ட நாட்களை நினைக்கவே பயமாக இருக்கிறது.

முத்தாயி : என்ன...என்ன சொல்கிறீர்கள்?

முத்தன் : என் சோலைக் குயிலே! நீ கூவமுடியாத பாலைவனமாகிவிட்டேன் நான்.

முத்தாயி : நீங்கள் பாலைவனமானால் நான் அதிலே வளரும் பேரீச்ச மரம்.

முத்தன் : விளையாடாதே முத்தாயி விளையாடாதே.. விண்மீனைப்போல் கண்சிமிட்டி, வெள்ளி முத்துப் பல் காட்டி, அள்ளிவரும் புள்ளி மயில் சாயல் காட்டி,

வேடிக்கை காட்டி, என் மடியில் விளையாடி, என் விழியில் சதிராடும் மரகதமே! மாணிக்க மலர்க் கொத்தே! அந்த விளையாட்டெல்லாம் மண்மூடிப் போக வேண்டிய காலம் வந்துவிட்டது கண்மணி.

முத்தாயி : என்ன...யார் பேசுவது இப்படி...என் முத்தனு? என் முத்தனு?

முத்தன் : உன் முத்தனில்லை...முத்தன் பேசவில்லை; வேங்கை புரத்து வீரன் பேசுகிறான் கண்ணே, வேங்கை புரத்து வீரன் பேசுகிறான்.

முத்தாயி : ஆ! வேங்கைபுரத்து வீரன்!

முத்தன் : ஆமாம்!

முத்தாயி : என்ன ஆமாம்?...யாரைக் கேட்டுக் கொண்டு வேங்கைபுரத்து வீரனாக மாறினீர்கள்?

முத்தன் : நான் யாரைக் கேட்பது?...ஏழை முத்தனைக் கேட்டேன்...முத்தாயி மாளிகை ராணியாக வேண்டியவள்...அவள் எண்ணத்தை விட்டு விடு என்றான்...காதல் முத்தனை கண்ணீர் விட்டான்...காகரத்த குரலிலே, கம்மிய தொனியிலே ஏழை முத்தன் கட்டளை யிட்டான்... முத்தாயியை மறந்துவிடு என்று...மறந்து விட்டேன்... என் சிங்காரியை மறந்துவிட்டேன்...என் சிந்தையில் குடியேறிய செல்வத்தை மறந்துவிட்டேனை...உன் தந்தைக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேறு வழி இல்லை... வழி இருந்தால் பழுதூரை அடிமையாக்கி யிருக்கும் பகைவனின் படையிலே சேருவேனா நான்.

முத்தாயி : நீங்கள் மறக்கும்படியாக நான் என்ன குற்றம செய்துவிட்டேன், போராசைக்காரத் தகப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்ததைத் தவிர,...காதல் என்றால் என்ன? கண்டவர் உருவத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியா? கலைத்து எழுதும் சித்திரமா? அழியாத ஓவியம்— அசையாத இமயம் காதல் என்று எண்ணியிருந்தேன்— அது பைத்தியக்காரத்தனந்தானு? சந்தைப் பொருளென என்னை எண்ணிவிட்ட தந்தைக்கும் உங்களுக்கும் என்னதான் வித்தியாசம்? என் சிலையாகி

விட்டீர்கள்? காதலன் மறந்துவிட்டான். காதலி வேறிடம் பறந்துவிட்டாள்; என்று என்சரித்திரம் முடியாது துரையே...அம்பிகாபதி காவியத்தை அழித்தெழுத எண்ணுதீர்கள். அரசன் மகள் அமராவதி மட்டுமல்ல காதலே; அடிமையின் மகள் முத்தாயிக்கும் காதல் உள்ளம் இருக்கிறது! அதைக் காட்சியாக்கிக் காட்டுகிறேன் அதோ, அந்த ஆடும் மரக் கிளையில்...ஓடும் வெள்ளத்தில்...இரண்டிலொன்றில் என் பிணத்தைப் பார்க்கத் தயாராகிக் கொள்ளுங்கள்!

முத்தன்: முத்தாயி; பட்டாளத்தில் பெயரைப்பதிவு செய்து விட்டேனே...என்ன செய்வது?

முத்தாயி: செய்தால் என்ன? நூறு பொன் அபராதம் செலுத்தினால் விலகிக் கொள்ளலாம் என்பது எனக்குத் தெரியும்.

முத்தன்: அபாதமா?

முத்தாயி: ஏன் அபராதங் கட்டுவது அவமானம் என்கிறீர்களா? எதிர்நாட்டுக்குக் கூலிப்பட்டாளமாகச் செல்வதைவிட இது ஒன்றும் அவமானம் அல்ல...சிறைச்சாலைக்குப் பயந்து கட்டும் அபாதம் அல்லவே இது.

முத்தன்: முத்தாயி!

முத்தாயி: நான் சொல்வதைக் கேளுங்கள்; என் திருமணத்துக்காக நூறு பொன் அப்பா சேர்த்து வைத்து யாருக்கும் தெரியாமல் பூட்டி வைத்திருக்கிறார். அது இதற்கில்லாமல் வேறு எதற்கு? சுமதியிடம் கொடுத்து அனுப்புகிறேன். அதை வாங்கி கட்டி விலகிக் கொள்ளுங்கள்.

முத்தன்: இதைக் கேள்...

முத்தாயி: எதையும் கேட்க மாட்டேன்...நீங்கள் விலகவேண்டும்...இல்லாவிட்டால் நான்...

முத்தன்: முத்தாயி; விலகி விடவா?

முத்தாயி: என்னிடம் இருந்தல்ல...படையிலிருந்து இதை சாப்பிடுங்கள்.

தென்றல் மாளிகை

(வேலழகனும், வேதாளமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)

வேதாளம்: தாங்கள் சந்தேகப்பட்டது மிகவும் சரிதான். என்ன இருந்தாலும் ஒரு நாட்டுக்குத் தளபதி அல்லவா? அவன் கை யொப்பமிடும்போது "முத்தாயி" வன்று தவருக எழுதினன் என்றீர்களே, அது தவறுதல் அல்ல. அப்படி ஒரு தய்யல் இருப்பது உண்மை.

வேலழகன்: பார்த்தீரா? எனக்குத் தெரியும் அப்போதே. என் வேதாளம்; இருவருக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமல்லவா?

வேதாளம்: இருக்கும், இருக்கும்; நிச்சயம் இருக்கும்!

வேலழகன்; தொடர்பு இருக்கிற அளவுக்கு துடியிடை உடைய அழகியோ அவள்?

வேதாளம்: அழகிதான். நல்ல அழகு.

வேலழகன்: சந்தனச் சோலையிலே நான் தங்கியிருக்கும்போது இப்படித்தான் ஒரு அழகியை எனக்குஅறிமுகப் படுத்தி வைத்தான் ஒரு அந்தரங்க நண்பன்.

வேதாளம்: அப்படியா?

வீரன்: நண்பனுயிருந்தாலும் அந்த நல்ல வாப்பையய் ஏற்படுத்திக் கொடுத்ததற்காக அவனுக்கு இருபது பென்னா பரிசளித்தோம் பிரபு.

வேலழகன்: பொன் மட்டுமா; அந்தச் சோலைக்கே அவனைத் தலைவனுக்கிவிட்டேன்.

வேதாளம்: ஓஹோ!

வேலழகன்: முடியுமானால் முத்தாயியை ஒரு முறை சந்திக்க முயற்சிப்போம், என்ன வேதாளம்?

வேதாளம்: அதைத்தான் நானும் யோசிக்கத் தொடங்கிவிட்டேன்.

வீரன்: யோசிக்கிறார்னு முகமே சொல்லுதே பிரபு.

வேலழகன் : வேதாளம்; குறிப்பறிந்து செயல் புரிவதில் உமக்கு நிகர் நீரேதான்.

[அப்போது முத்தன் வருகிறான்]

வேலழகன் : என்னப்பா! என்ன வேண்டும்?

முத்தன் : என்னை மன்னிக்க வேண்டும்.

வேலழகன் : விஷயத்தைச் சொல்.

முத்தன் : சந்தர்ப்பம் சரியில்லை, படையிலிருந்து விலகிக் கொள்வதற்காக...

வேலழகன் : என்ன விளையாடுகிறாய்? என்னை யாரென்று எண்ணிவிட்டாய்? படையில் சேரவும், விலகவும் உன் இஷ்டப்படி நடக்கவும் அனுமதி கிடையாது இங்கே! ஆளைப்பார் மலைபோல் இருக்கிறான்...எலிபோல் பயப்படு கிறான் கோழை...

முத்தன் : தயவு செய்து அந்த வார்த்தை சொல்லா தீர்கள். நான் ஏழையாயி நக்கலாம். ஆனால் கோழையல்ல.

வேலழகன் : வால் நீட்டாதே! வாள் நீளும் மரியாதையாக நில்! மரியாதையாகப் பேசு.

முத்தன் : படையில் சேருவதற்கு கட்டாயம் எதுவு மில்லையல்லவா?

வேலழகன் : சேருவதற்குக் கட்டாயமில்லை ஆனால் சேர்ந்து விலகுவது உன் இஷ்டமில்லை.

முத்தன் : அதற்குத்தான் நூறு பொன் தண்டம் செலுத்திட வேண்டுமென்று நிபந்தனை பிருக்கிறதே.

வேலழகன் : [வேதாளத்திடம்] நிபந்தனையை இவன் எனக்கு நினைவூட்டுகிறான் திமிர் பிடித்தவன். (முத்தனிடம்) இத்த தேகத்தை வளர்த்து என்ன செய்யப்போகிறாய்? தேசத்திற்காகத்தான் பலிகொடேன்.

முத்தன் ; பலிகொடுக்கலாம்; எமக்கென்று ஒருதேசம் இருந்தால்! எமது நாட்டைக் காக்க வேண்டுமென்ற போர் மூளுமானால் அந்த முன்னணியிலே முத்தனின் பெயர்தான் முதல் இடம்பெறும். பழுதூர் அடிமை பூமி; அதைக் காலில் போட்டு மிதித்து கப்பம் வாங்கும் நாட்டுக்குத்

தளபதி நீர். அந்தப் படையிலே நான் இருப்பதும் ஒன்று தான்...

வேலழகன் : என்ன சொன்னாய், ராஜதுரோகி?

முத்தன் : சகோதரத் துரோகிக்கே ஆழ்வார் பட்டம் கிடைத்திருக்கிறது. தளபதி அவர்களே; நான் துரோகி இல்லை! எமது நாட்டை அபகரித்தவரின் அணி வகுப்பில் பணிபுரிய மாட்டேன் என்பது துரோகமா?

வேலழகன் : ஆ! என்னை எதிர்த்துப் பேசிய முதல் ஆள் இவன்தான். இவனுக்கு ஒரு முடிவு தேடாமல் விட மாட்டேன். வேங்கை புரத்து அரசாட்சிக்கு எதிராகக் கிளம்பும் இம்மாதிரி விஷவித்துக்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும், இவனுக்கென்று ஒரு தேசமாம்; அந்த தேசத்தின்விடுதலைக்குத்தான்பாடுபடுவதாமும். வெளியிலே உலவுகிறான், பைத்தியக்கார விடுதியிலே இருக்க வேண்டி யவன்,

முத்தன் : உங்களைப் போன்றவர்களுக்கு வைத்தியம் செய்வதற்காக்

வேலழகன் : சீ! காட்டுமிராண்டி!

முத்தன் : காட்டுமிராண்டி! நிலைக்கண்ணுடியைப் பார்த்து நீரே சொல்லிக்கொள்ளும் அந்த வார்த்தையை!

(வேலழகன் பதட்டம்-துடிப்பு)

வேதாளம் : கொஞ்சம் இப்படி வாருங்களேன்.

[தனியாக இருவரும்]

வேதாளம் : பயலை விடாதீர்கள். விட்டால் தண்டப் பொருளை கட்டி தப்பிவிடுவான். பிறகு முத்தாயியைப் பிடிக்க முடியாது,

வேலழகன் : என்ன செய்யலாம்?

வேதாளம் : காவலில் போடுங்கள் கழுதையை... ஆலல் ஒன்று ...நான் இந்த நாய்க்குட்டியிடம் நல்லவனுக நடந்து கொள்கிறேன். அதாவது நடிக்கிறேன் என்கிறேன்.

[பிறகு இருவரும் முத்தன் இருக்குமிடத்திற்கு வருகிறார்கள். வரும் போதே]

வேலழகன் : வேதாளம்! இது பட்டாளத்து விஷயம், உமது சிபார்சுக்கு இங்கு இடமேயில்லை.

வேதாளம் : தயவு செய்து மன்னித்து விடுங்கள்... முத்தன் ஏழை.

வேலழகன் ; வேதாளம்! திரும்பத் திரும்பசொல்லுகிறேன். நீர் இதில் தலையிடக்கூடாது.

வேதாளம் : ஏன் தலையிடக்கூடாது? தங்களுக்குத் தரவேண்டிய நூறு பொன்னைக் கொடுத்துவிட்டால் முத்தனை நீங்கள் என்னசெய்யமுடியும்? ஏன் முத்தா! நூறு பொன் கொடுத்துவிடேன்.

முத்தன் : காலையில் தந்து விடுகிறேன்.

வேதாளம் : அங்! தளபதி அவர்களே! முத்தன் போகலாமல்லவா இப்போது!

வேலழகன் : கூடாது...தண்டப் பொன்கள் வந்து சேரும் வரையில் அவன் இங்கேபதான் இருக்கவேண்டும்.

வேதாளம் : அய்யோ! பெருமைக் குரிய பிரபு அவர்களே! அவனை விட்டு விடுங்கள். நானே நாளை காலையில் பொன்களைத் தந்து விடுகிறேன்.

வேலழகன் : முடியாது...வேலழகன் உத்தரவிடுகிறேன். ஏய், யாரங்கே! இவனைக் காவலில் வையுங்கள்.

முத்தன் : இப்படித்தான் சொல்லுகிறதா உங்கள் அரசாங்கத்தின் பாசறை நீதி? நன்றுயிருக்கிறது.

வேலழகன் : பேசவிடாதீர்கள். கூணுக்குள் போட்டு மூடுங்கள் இந்தக் குறும்பனை.

[முத்தன் கைகளில் விலங்கு மாட்டப் படுகிறது. வேதாளம் தன் முகத்தை மூடிக் கொண்டு வெளிக்கிளம்புகிறான். அவன் போகும் போது முத்தனை வருத்தத்துடன் பார்த்துக் கொண்டே]

வேதாளம் : முத்தா! முன் ஜென்ம கர்மவினை முடிசூடிய மன்னனையும் விடாது.

[என்று கூறிவிட்டுப் போகிறான். முத்தன் தென்றல் மாளிகையின் ஒரு அறையில் அடைக்கப்பட்டு— வெளியேகாவல் போடப்படுகிறது.]

தோட்டம்

[முத்தாயி பொன் மூட்டையுடன் வருகிறாள். சுமதியைப் பார்த்து.]

முத்தாயி : சுமதி! வா வா! நல்ல நேரத்தில் வந்தாய்!

சுமதி : என்ன அமிர்த யோகமா?

முத்தாயி : ஏய், ராகு காலம்! சொல்றதைக் கேளு!... இதிலே நூறு பொன் இருக்கிறது. எப்படியாவது அவரிடம் சேர்த்துவிட வேண்டும்...

சுமதி : முத்தனிடம் தானே...

முத்தாயி : வேறு யாரிடம்—? சீக்கிரம் போ, சுமதி!.....

சுமதி : ஆகா...ஆகா!...என்ன அவசரம்!

(போகிறாள்)

முத்தாயி : (தனக்குள்) பொன் கிடைத்ததும் என் கண்ணாளர் படையிலிருந்து விலகி விடுவார்...விலகியதும் அப்பாவிடம் எப்படியாவது கெஞ்சிக்கேட்டு எங்கள் விவாகத்தை நடத்திக் கொள்வோம். விவாகம் ஆனபிறகு...ஆகா! அந்த விருந்தை நினைக்கவே நெஞ்சு இனிக்கிறதே...

தென்றல் மாளிகை

[தென்றல் மாளிகையில் முத்தன் அடைபட்டுக் கிடக்கிறான். வேதாளம் நுழைகிறான்.]

வேதாளம் : முத்தா! என்ன முட்டாள்தனம் செய்து விட்டாய்! முதலிலேயே யோசித்துச் செய்யக் கூடாது? உன்னை என்ன பலவந்தமாகவா படையில் சேர்த்தேன் நான். வேலழகன் ஒரு மூடன். நீயோ பாபம் மிகவும் நல்லவன். நியாயப்படி உன்னைக் காவலில் வைக்கக்கூடாது. இந்த அநியாயத்தை யார் கேட்பது? போலீசுக்காரரிடம் ஓடிப்போய் சொன்னேன். அவர் என் பேச்சை லட்சியம்

செய்யவே இல்லை, ஏழையின் குரல் ஏழடுக்கு மாளிகையில் எப்படிக் கேட்கும்?

[அப்போது வேலழகன் வருகிறான்]

வேலழகன் : என்ன வேதாளம்! என்ன மலைக்கிறீர்? நீர் பார்த்து விட்டுத்தான் போகலாம் ஆசையிருந்தால். அவனுடன் நீர் பேசுவதற்கு அனுமதியில்லை. முத்தன் இப்போது கூண்டுப் பறவை.

வேதா : முத்தன் என்னுடனேயே இருந்தவன் பிரபு. மேன்மை தங்கியவரே! பழகிய பாசம் மிகவும் பொல்லாதது அல்லவா! எப்படியாவது மன்னித்து.....

வேலழ : ஹா...ஹா...மன்னிப்பதா? இதோ பாரும் அரசாங்க உத்தரவை. இதுவரை சேர்ந்துள்ள படைவீரர்களோடு நான் உடனே தலைநகருக்குப் புறப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பித்துள்ளார் மன்னவர். இன்றே புறப்படவேண்டும்.

வேதா : முத்தனுமா?

வேலழ : ஆமாம்! ஆயிரம் தண்டப்பணம் நூறு பொன் வந்துவிட்டால் இவன் விடுதலை பெறலாம்... ஹூம்...இவனுக்கேது நூறு பொன்...குப்பையில் கிடப்பவன்!

[வேலழகன் போகிறான். வேதாளம், முத்தன் தன்னை நம்புவதற்காக நடிக்கிறான்]

வேதா : ஹூம். முத்தா! உன்னைப் பார்க்கவே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது அப்பா.

முத் : ஐயா! எனக்கு ஒரு உதவி செய்கிறீர்களா?

வேதா : என்ன உதவி? சொல்...செய்து முடிக்கிறேன்.

முத் : என்னிடம் கொடுக்கச் சொல்லி நூறு பொன் வரும். அதை வாங்கி கட்டி எப்படியாவது என்னை விடுதலை செய்து விடுங்கள்.

வேதா : அதைவிட எனக்கு வேறு வேலை? பொன் கட்டாயம் வருமல்லவா?

முத் : கட்டாயம் வரும்.

வே : முத்தா! இனி பயமில்லை. நீ கவலை இல்லாமல் இரு. எது நடந்தாலும் சரி. பொன் வரட்டும். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.

அஞ்சல் மனை

[பொன் மூட்டையுடன் சுமதி நுழைகிறாள்]

வேதாளம் : அடே நாய்குட்டிப் பயலே, வெளியிலே என்னடா வேலை...போ...உள்ளே!...யாரம்மா நீ என்ன வேண்டும்?.

சுமதி : ஓ...நீங்களா!...ம். முத்தனை பார்த்தீர்களா?

வேதா : நானும் முத்தனுக்காகத்தான் அலைந்து கொண்டிருக்கிறேன்.

சும : அவரை நான் பார்க்க வேண்டுமே.

வேதா : ஊகூம். அவனைப் பார்க்கவே முடியாது... அவனை பாசறைச் சிறையில் போட்டுவிட்டார்கள். அவனை விடுவிப்பதாயின் நூறு பொன் வேண்டும்...

சும: அதைத்தான் கொண்டு வந்திருக்கிறேன்... இதோ இதை தயவு செய்து அவரிடம் கொடுக்க முடியுமா?...

வேதா : கொடுக்க முடியுமாவா?... அதைவிட எனக்கு வேறு வேலை? அன்பான பெண்ணே! நல்லகாரியம் செய்தாய்...முத்தன் சார்பாக உனக்கு என் நன்றி... இதோ இப்போதே போய் அவனை மீட்கிறேன்...

[போகிறான்]

தென்றல் மாளிகை

[வேலழகனின் சிப்பாய்கள் மூட்டை முடிச்சு பேழைகளுடன் வேங்கைபுரம் போக புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனது கூண்டின் கதவு திறக்கப்படுவதைக் கண்டு முத்தன், அந்த வீரனைப் பார்த்து]

முத்தன் : என்ன! எனக்கு விடுதலையா?

வேலழகன் : (சிரித்தபடி வந்து கொண்டு) விடுதலை தான், இங்கிருந்து உனக்கு விடுதலைதான், வீணனே! இந்த விடுதலைக்குப் பிறகு நீ போகவேண்டிய இடம் எது தெரியுமா? வீடல்ல—வேங்கைபுரம்!

முத் : என்ன! ஏன் இப்படி கொடுமை புரிகிறீர்கள்? உங்கள் அபராதத் தொகையை வாங்கிக்கொண்டு என்னை விடுதலை செய்யவேண்டியதுதானே நியாயம்?

வேல : அபராதப் பணம்—அரைக்காசுக்கு வழியற்ற உன்னிடம் ஏது அபராதப் பணம்? ஹா...ஹா...ஹா...

முத் : என்னை இப்படி சிறையிலே அடைத்து வைத்தால் எப்படி செலுத்த முடியும் உங்கள் அபராதத்தை? வெளிலே விடுங்கள்...விரைவில் கொண்டு வருகிறேன்.

வேல : முடியாது—இங்கே வரவேண்டும்! இப்போது வந்தாலும் சரி; உன்னை விட்டுவிடுவேன்.

[வேதாளம் வருகிறான்]

முத் : (வேதாளத்திடம்) என்ன ஆயிற்று? கிடைத்ததா? வந்து சேர்ந்ததா?

வேதா : ஊஹூம்! காத்துக் காத்து காலும் ஓடிந்து விட்டது. கண்ணும் பூத்துவிட்டது. காரியம் ஆகவில்லை. (வேலழகன் பக்கம் திரும்பி) பிரபு அவர்களே! அபராதப் பணம் விரைவில் வந்துவிடலாம். கொஞ்சம் தாமதித்து...

வேல : சேவல் கூவவில்லையே என்று சேங்கதிரோன் காத்திருப்பதில்லை. கடமையை நான் செய்ய வேண்டும்—இல்லையேல் காவலன் சீறுவார்...ம்...புறப்பட வேண்டும். விடுதலை வீரனே! நீயும் நட பின்னால்.

முத் : நடக்கமாட்டேன்! ரத்தச் சகதியிலே தங்கள் தலைகளை செந்தாமரை மொட்டுகளாக ஆக்கிவிடத் தீர்மானித்து விட்ட விடுதலை வீரர்கள், ஆதிக்க வெறியர்களின் பின்னால் ஆடுபோல் நடக்கமாட்டார்கள்! பழுதூர்

என் நாடு—எனக்குத் தேன்கூடு—நீரோ தீக்காடு—சாக்காடு வரினும் சரியென்பேனே தவிர, பூக்காட்டில் புகுந்துவிட்ட புயலாம் உன்பின்னுல் நான் நடக்க மாட்டேன்! சுந்தர பூமியின் பிரஜை நான்—அதைச் சுரண்டி வாழும் பிரபு நீர்; புத்தி சுவாதீன மற்றவனும் கூட ஒத்துக் கொள்ள மாட்டான், புலியைத் தொடர்ந்து மான் நடக்கலாம் என்ற உமது புதிய திட்டத்தை—தத்துவத்தை!

வேல : பேசாதே...யாரங்கே! இந்த வீராதி வீரனுக்கு விலங்கிடுங்கள்! நமது அணிதேர்ப்புரவி, ஆட்பெரும் படை முன்னே செல்லட்டும்—இந்த அடிமை நாயும் பின்னே இழுத்து வரப்படட்டும்.

முத் : என்ன?

வேல : உம்...உடனே...

[முத்தனுக்கு விலங்கிடப்படுகிறது]

பழுதூர் வீதி

[வேலழகனும் வேதாளமும் ஒரு ரத வண்டியில் செல்லும்போது முத்தாயியை பார்த்து விடுகின்றனர்.]

வேலழகன் : குறும்பா!...

வேதா : நிறுத்து!

[ரதம் நிற்கிறது]

வேதா : பிரபூ! அதோ;...அந்தப் பொன் வாத்து தான் நான் கூறிய முத்தாயி!...

வேல : ஆகா!...பொன் வாத்து என்று கூறுகிறீரே...புலவர் மொழியிலே அன்னம் என்று கூறும்:... சொர்ணம் என்று சொல்லும், வேதாளம்—இவளை நான் எப்படியும் அடையவேண்டும்...நானும் முத்தாயியும் விசையில் காதல் கீதம் பாடவேண்டும்!

வேதா : கவலையை விடுங்கள்...உங்கன் கீதத்துக்கு நான் தான் தாளம்!

[ரதம் போகிறது. பின்னல் முத்தன். இழுத்துவரப் படுகிறான்]

[முத்தாயி ஓடிவருகிறுள் குறும்பனைப் பார்த்து]

முத்: அய்யா... அய்யா!... நீங்கள் வேங்கை நாட்டு வீரர்தானே?

குறு: ஆமாம்... என்ன வேண்டுப்?...

முத்: அவரை விடுதலை செய்து விட்டார்களர்?...

குறு: யாரை?:

முத்: முத்தனை!

குறு: ஓ!... விடுதலை செய்து விட்டார்களே!... அவனை விடுதலை செய்து, பிரமாதமான மரியாதைகளோடு அதோ அழைத்து வருகிறார்கள்!...

முத்: ஆ!... என்ன?...

[முத்தாயி ஓடுகிறுள் மகிழ்ச்சியுடன். முத்தன் அடிபட்டு கீழே கிடக்கிறுன்...]

முத்தன்: அடியுங்கள்!... நன்றுக அடியுங்கள்!... என் இருதயத்தில் எழுச்சிக் கனல் பொங்கப் பொங்க அடியுங்கள்!... இப்படித் தவறு செய்யாதவர்களை அடித்து அடித்துத் தானய்யா தரைமட்டமாகப் போயிருக்கிறது பல தான் தோன்றிகளின் தர்பார் மண்டபங்கள்!... அடியுங்கள்; பாதகர்களே அடியுங்கள்!...

[கூட்டத்தை விலக்கிக்கொண்டு முத்தாயி பார்க்கிறுள்.]

முத்: அத்தான்!...

முத்தன்: முத்தாயி!...

முத்: அத்தான்... அத்தான்!... என்னத்தான் இப்படிச் செய்து விட்டீர்கள்?... நான் அவ்வளவு சொல்லியும் கேட்கவில்லையே!... ஐயோ, அத்தான்... இந்த அலங்கோலக் காட்சியை நான் காணவேண்டும்என்று எத்தனை நாளாகக் காத்திருந்தீர்கள் அத்தான்?...

முத்தன்: அழாதே முத்தாயி, அழாதே!... இது ஒன்றும் அலங்கோலக் காட்சியல்ல... கத்திமுனைகளையும்,... கட்டாரி வீச்சுக்களையும் நம்பி வாழும் காட்டு மிராண்டிகளின் கொலுமண்டபத்திலே எத்தனை எத்தனை வீரர்கள் தங்கள் உயிர்களையே காணிக்கையாக தந்திருக்கிறார்கள்...

வீங்கிய தோளும், விடுதலை வாளும் கொண்டு, ஓங்கிய கையைத் தாழ்த்தாமல், ஒழிந்திடுவோம் எனத் தெரிந்திடினும்...ஒளி சிந்தும் விழியில் ஒருதுளி பயமும் படாமல், 'இன்பமணம் பெறத் திரும்பவும் கூடும்-அல்லது எந்தன் பிணம் அந்தக் களத்திலே நாறும்', என்ற மொழியுரைத்து...எதிரியை வெல்லப் பழியுரைத்து—படையினர்க்கு வழியுரைத்துக் கிளம்பிய எத்தனை எத்தனை விடுதலைக் குமரன்கள்.....சுதந்திர அன்னையின் மடியிலே சமாதிக் குழந்தைகளாய்—கல்லறை செல்வங்களாய்—தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்! அந்த வீரத் தியாகிகள் எற்றிருக்கும் தழும்புகளை நினைத்தால், என் தங்கமே; இந்தத் தண்டனை மிகக் முறைவு!...

[வேலழகன் வருகிறான்.]

வேல: என்னடா இங்கே...யார் இந்த நிலாப் பதுமை? யாரம்மா நீ?...

முத்தான்: தோகி...தொடாதே!

வேல: ஏன், இந்தத் தோகை மயிலுக்கு நீ தான் சொந்தக்காரனோ?...

முத்தன்: வெறியனே!... பெண்களிடம் பழகத் தெரியாத பண்பற்ற மிருகமே!...

வேல: என்ன? (அறைகிறான்)-முத்தாயி? அத்தான்!...

முத்தன்: காதலும் கடமையும் ஒன்றுக பின்னிக் கிடக்கும் எங்கள் ஆனந்த வாழ்விலே குறுக்கிட்ட கண்ய மற்றவனே!...கட்டுண்டு கிடப்பவனை அடித்து மகிழும் வீராதி வீரனே!...

[சிரிக்கிறார்கள்]

சிரியுங்கள்!...சிரியுங்கள்!...நன்றுகச் சிரியுங்கள்!... உரக்க உரக்கச் சிரியுங்கள்!...

சித்திரச் சோலையிலே சிலந்திவலை பின்னிவிட்ட வேலழகன் கும்பலே...வீணர்களின் கூட்டமே...நன்றுகச் சிரியுங்கள்!...ஹா...ஹா...

[முத்தன் சிரித்துக் கொண்டே விழுகிறான்...இழுத்துச் செல்கின்றனர்.]

முத்: அத்தான்...அத்தான்...அய்யா!...நல்வர்களே, அவரை விட்டுவிடுங்கள்! என் இருதயத்தின்நட்சட்திரத்தை எடுத்துக்கொண்டு போகாதீகள்!...சாவாலும் பிரிக்க முடியாத எங்களைப்பிரித்து என்ன லாபம் காணப்போகிறீர்கள்? வேண்டாம்; என் உயிரை எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்! அய்யா...அய்யா...உங்களுக்குக் கோடி புண்யம் உண்டு... என் அத்தானை விட்டுவிடுங்கள்... அத்தான்!... அத்தா!

[திருசங்கு வருகிறான்.]

மானங்கெட்ட பெண்ணே!

முத்தாயி: அத்தான் ... அத்தான்! ... அப்பா ! ... அப்பா!...

[திரிசங்கு முத்தாயியை இழுத்துக்கொண்டு போகிறான்]

திரிசங்கு வீடு

[முத்தாயி கொல்லைப்புறம் இருக்கிறாள். சுமதி வருகிறாள்]

முத்தாயி: யார்? எங்கே வந்தாய்?

சுமதி: முத்தாயி!

முத்: பாவி! வேண்டுமென்று கேட்டிருந்தால் நூறு என்ன, ஐநூறு பொன் எப்படியாவது தேடித் தந்திருப்பேனே.....

சும: என்ன—நீ என்ன சொல்லுகிறாய்?

முத்: இன்னும் புரியும்படியாக சொல்லவேண்டுமா? நன்றாக நடிக்கிறாய், நாசக்காரி! கேவலம் நூறு பொன்னுக்கு ஆசைப்பட்டு கூறு போட்டு விட்டாயே எங்கள் காதலை!

சும: பொன்னுக்கு ஆசைப்பட்டேனா? நானா? முத்தாயி! சொல்வதைக் கேள்...நீ கூறியபடி முத்தனை அஞ்சல் மனையில் போய் தேடினேன். கிடைக்கவில்லை.

முத் : கிடைக்கவில்லை-கிடைத்ததை வாயில் போட்டுக் கொண்டாய்.

சும : என்னையும் கொஞ்சம் பேசவிடேன்.....

முத் : பேசியது போதும். பேசியும் பலனில்லை. போ...போய் விடு...உம்...போய்விடு பாவி...போ.....

சும : இப்போது :என்னை உணராவிட்டாலும், எப் போதாவது உணராமலா இருக்கப் போகிறாய்? நான் வருகிறேன்.

முத்தாயி : வரவே வேண்டாம்—வஞ்சகி!

சுகதேவ் மாளிகை

சுகதேவ் : நானும், முத்தாயியும் காந்தர்வ மணம் புரிந்து கொண்டோம். என்னை மறக்கமாட்டேன் என்று கடவுள் மேல் சத்தியம் செய்தாள்.

திரிசங்கு : அப்படியா!

சுக : நந்தவனத்திலே ஓடினேம்—நதியிலே நீராடினேம்—'முத்தாயி' என்றேன்—அவள் 'நாதா' என்று கூப்பிட்டாள்—கண்ணை அசைத்தாள்...கழுத்துக்கு வைர மாலை—அவள் இடை நெளிந்தது...இரத்தின ஒட்டியாணம் பூட்டினேன்—நகைகளைப் போட்டுக் கொண்டு ஒரு சிரிப்பு சிரித்தாள்...சிங்காரி! ஓய்யாரி! கண்ணே! மயிலே! கட்டிலறைக்கு வாடி என்றேன்—வரவும் இசைந்தாள்...அதற்குள் விழித்துக் கொண்டேன்...எல்லாம் கனவு திரிசங்கு! எல்லாம் கனவு!

திரி : கனவாகாது தம்பி; இந்தத் திரிசங்கு இருக்கும் வரையில்!

சுக : தங்கமும், வைரமும் தயார்.....அதை சங்கிலியாக்குவதற்கு என் தகப்பனார் சம்மதிக்க வேண்டுமே....

திரி : அதற்குத்தான் கொஞ்சம் கஷ்டப்படவேண்டும்.

சுக : கஷ்டமா?

திரி : ஆமாம்!...அர்ச்சுனன் பாம்பாளன் அல்லியை மணக்க...வேலன் கிழவனனன் வள்ளியை மணக்க...

சுக : நான் என்ன ஆகவேண்டுமோ தெரியவில் லையே!

வேதாளம் : நீங்கள் அடுத்த பாளையக்காரர் ஆக வேண்டும்... அதிலென்ன சந்தேகம்?

சுக : அடடே! வேதாளமா! நல்ல சமயத்தில் வந்தீ ரய்யா நாரதர் போல...அப்படி உட்காரும்.

வேதா ; பாவா இல்லை—பரவாயில்லை—என்ன மந் திராலோசனை நடை பெறுகிறது,

சுக : சுருக்கமாகச் சொல்லி விடுகிறேனே; திரிசங்கு வின் மகள் முத்தாயிக்கும், எனக்கும் காதல்! அது இப் போது கொம்ப முற்றிவிட்டது!

வேதா : பார்க்கும் போதே தெரியுது.

சுக : முத்தாயியை நான் மணக்க அப்பா சம்மதிக்க மாட்டார்—ஏன் தெரியுமா?

வேதா : அவர் உங்க அப்பா...அதனால்!

சுக : வேதாளம்! இந்த முக்கியமான நேரத்தில் ஒரு முதல் தரமான வழி சொல்லும்.

வேதா : இந்த வேதாளத்தின் வழி எல்லாமே குறுக்கு வழி தான். இளவரசே! நான் திருமண ஏற்பாட்டை செய்கிறேன், எப்படியாவது திருட்டுத்தனம் செய்து கல் யாணத்தை முடித்துவிட்டால் அப்புறம் அப்பா ஒத்துக் கொள்ளத் தானே வேண்டும்? உம்...அது தான் சரி... இள வரசே! ஐநூறு பொன் எடுங்கள்...உம்...சீக்கிரம் எடுங் கள் யுவராஜ்!

சுக : உம்...இந்தாரும் (கொடுக்கிறான்)

வேதா : சபாஷ்! இனி திருமணம் முடிந்த மாதிரி தான்...திரிசங்கு! என் கூட வா. எல்லா ஏற்பாடுகளையும் எது எது எப்படி நடக்க வேண்டுமென்பதை நான் சொல் லித் தருகிறேன். வருகிறேன் குமார ராஜ்!

திரி : வருகிறேன் தம்பி!

சுக : திரிசங்கு! வேதாளம்! உம்... அவசரத்தில் தாலி செய்ய மறந்துவிடாதீர்கள். முதலில் அதைச் செய்து

விட்டு பிறகு மற்ற ஏற்பாடு நடக்கட்டும்; ஆமாம்!

[முத்தாயி வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறாள். திரிசங்கு வருகிறார்]

திரிசங்கு : முத்தாயி! முத்தாயி! என்னம்மா இப்படி வருத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறாய்?

முத் : காரணமா கேட்கிறீர்கள்?

திரி : நீ சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தானே நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன்.

முத் : அப்பா! போதும்! [அழுகிறாள்]

திரி : இப்போது என்னம்மா வந்து விட்டது? ஆறுதலாக இரு!

முத் : மல்லிக்கைக் கொடியின் வேரை அறுத்து விட்டு அதன் மலருக்கு நீர் ஊற்றி என்னப்பா பயன்?

திரி : வேரை நான் அறுக்க மாட்டேனம்மா. உற்சாகமாயிரு, மடத்திலே குருபூஜை வேறு நடக்கப் போகிறது. ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருக்கும். நீயும் குதூகலமாயிரம்மா...

முத் : ஒளிக்குப் பக்கத்திலே இருந்தாலும் நிழல் இருளாகத்தானே இருக்கும். உற்சாக நிகழ்ச்சிகள் எவ்வளவு இருந்தாலும் என் உடைந்த உள்ளத்திற்கு மருந்தேது தந்தையே?

திரி : கவலைப்படாதே! எல்லாம் உன் இஷ்டப்படியே நடக்கும். நான் செய்த தவறுகளை மறந்துவிடு. பாழும் பொருளாசையால் பைத்தியக்காரன் போல் நடந்துவிட்டேன். உங்கள் தூய்மையான அன்பைத் துண்டாட நினைத்த இந்த துரோகியை மன்னித்துவிடம்மா.

முத் : அப்பா! அப்பா!

திரி : அழாதே! உன்னையும், முத்தனையும் சேர்த்து வைக்கத் தீர்மானித்துவிட்டேன்.

முத் : என்னப்பா சொல்கிறீர்கள்?

திரி : கேளம்மா-நீ முத்தனைக் காதலிக்கிற விஷயம் பானையக்காரருக்கு தெரிந்துவிட்டது, சுகதேவனுக்கும்,

உனக்கும் திருமணம் நடக்க விரும்பாத பாளையக்காரர், உன்னை உடனே முத்தனுக்கு மணமுடிக்கும்படி கட்டளை யிட்டு விட்டார்.

முத் : ஆகா! அவர்கள் சுயநலம் என் சோகத்தைத் துடைத்துவிட்டது.

திரி : முத்தனை விடுதலை செய்யுமாறு பாளையக்காரர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களும் அவனை விட்டு விடுவார்கள்.

முத் : வந்துவிடுவாரா அவர்?

திரி : இங்கு வரமாட்டான்...ஏன் தெரியுமா? சுக தேவன் உன்னைத் தூக்கிப்போய் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறான். அதிலிருந்து தப்புவ தற்கு உடனே நாமிருவரும் ஆனந்தபுரம் என்ற ஊருக்குச் செல்ல வேண்டும் என்பது பாளையக்காரர் யோசனை. அங்கே முத்தன் வருவான். உங்கள் திருமணம் உடனே முடிந்துவிடும். எல்லா ஏற்பாடுகளையும் உன் நன்மைக்காக பாளையக்காரர் ஆட்களே கவனிக்கிறார்கள்.

முத் : அப்பா! என்னையே என்னால் நம்ப முடிய வில்லையே! இன்பமான செய்தியைக் கொண்டுவந்த உங்களை வணங்குகிறேன். நான் ஏதாவது வேகத்தில் பேசியிருந் தால் என்னை மன்னித்து விடுங்கள் அப்பா.

திரி : சரியம்மா! உடனே ஆனந்தபுரம் புறப்பட ஏற்பாடுகளைக் கவனிப்போம்...

முத் : வேறு என்ன வேலையப்பா அதைவிட எனக்கு?

பாசறை சமையல் கூடம்

[பழுதூர் வீரர்கள் சமைத்துக் கொண்டிருக் கின்றனர். அதுபோது முத்தன் வருகிறான்]

வீரன் 1 : முத்தண்ணே!...வாண்ணை வா!

முத் : உம்.,பழுதூரில் சுதந்திர ராஜ்யத்தை சமைக்க வேண்டிய நீங்கள்...பகைவனின் ஊரில் உணவு சமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.....

வீரன் 2 : உம்...என்ன பண்றது?...நம்ம அம்மா நம்மை பெத்த நேரம் அப்படி!

வீரன் 3 : அடிமையாய் வாழணும்னு தலையில் எழுதி இருக்கு!

முத் : பெற்ற நேரத்தை குறைகூறாதே தம்பி!... நாமெல்லாம்—விடுதலை வீரர்களாய் வாழவேண்டும் என்ற கவலை நமது தாய் மார்களுக்கு ஏற்படவில்லை...உம்... அதெல்லாம் புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த காலத்தில்...

வீரன் 4 : புறநானூறு...புறநானூறுன்னு அடிக்கடி சொல்றியே அது என்ன அண்ணே?...

முத் : தமிழகத்துத் தாய்மார்களின் வீரக்காதை அது...அதைப்பற்றி எளிய நடையில் நானே எழுதிவைத் திருக்கிறேன் ஒரு கவிதை...சொல்கிறேன் கேள்...

குடிசைதான்! ஒருபுறத்தில் கூறிய வேல், வாள் வரிசை யாய் அமைத்திருக்கும். வையத்தை பிடிப்பதற்கும் வெம் பகை முடிப்பதற்கும் வடித்து வைத்த படைக்கலம் போல் மின்னும் மிளிரும்...புலியின் குகையினிலே அழகில்லை.....புதுமையல்ல! கிலியும் மெய்சிலிர்ப்பும் கிழிறங்கும் தன்மையும் தலை காட்டா மானத்தின் உறை விடம்; மறவன் மாளிகை! இல்லத்து வாயிலிலே கிண்ணத் துச் சோற்றோடு வெல்லத்தைச் சிறிதுகலந்து வயிற்றுக்குள் வழியனுப்ப பொக்கை வாய்தனைத் திறந்து பிடியன்னம் யெடுத்துப் போட்டாள்; பெருநரைக் கிழவி யொருத்தி ... ஓடிவந்தான் ஒரு வீரன் ஓர் சேதி பாட்டி என்றான்...ஆடி வந்த சிறுமிபோல் பெரு மூச்சு வாங்குகின்றாய்; ஆண்மகனே நீ தம்பி?..மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்;பின்பு பேச்சுக்குத் துவக்கம் செய்: என்றாள்; அந்த கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி... வேடிக்கை நேரம் இது வல்ல பாட்டி; உன் வாடிக்கை கேலியை விட்டுவிடு. மடிந்தான் உன் மகன் களத்தில் என்றான்...மனம் ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஓர் முறை...தரியம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு... களமும் அதுதான்...காயம்

மார்பிலா முதுகிலா என்றுள்! முதுகிலென்றுன்...கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனள்; வானை எடுத்தனள் முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினுள்வேகம்... கோழைக்குப் பால் கொடுத்தேன்—குப்புற வீழ்ந்து கிடக்கும் மோழைக்குப் பெயர் போர் வீரனும்!... அன்றொரு நாள்...பாய்ந்து வந்த ஈட்டிக்கு பதில் சொல்ல மார்பைக் காட்டி சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணுளர் அவருக்குப் பிறந்தானை?... அடடா மானம் எங்கே?... குட்டிச்சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான்... இமயவரம்பினிலே வீரம் சிரிக்கும் இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும்...அதுவும் மானம் மானம் என்றே முழக்கும்— மதுவும் சுரைவும் உண்டு வாழும் மானமற்ற வம்சமா நீ... ஏடா, மறத்தமிழ் குடியிலே மாசு தூவிவிட்டாய்...தின்று கொழுத்தாய்?— திமிர்பாய்ந்த தோள்கள் எங்கே?... திணவெடுக்க வில்லையோ—அந்தோ என்று அலறினுள். எண்பதை நெருங்கிய ஏழைக்கிழவி—சென்றங்கு செறு முனையில் சிதறிக் கிடந்த செந்தமிழ்க் காளைகளைப் புறட்டிப் பார்த்தாள்...அங்கு நந்தமிழ் நாட்டைக்காக்க ஓடிட்டு ரத்தவெள்ளம்! பிணக்குவியலிலே பெருமூச்சவாங்க நடந்தாள்...மணப்பந்தலிலும் அந்த மகிழ்ச்சி இல்லை...மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு அவன் இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்புகாட்டி! அறுத்தெரிய இருந்தேன் அவன் குடித்த மார்பை—அடடா கருத்தரியப் பொய் சொன்ன கயவனெங்கே?... வாளிங்கே...அவன் நாக்கெங்கே?

வீரர்கள் : த்சு...த்சு...த்சு...

முத் : இப்போது சொல்லுங்கள்...மானமும், வீரமும் எவ்வளவு மதிப்பு வாய்ந்தவை...அவைகளை மாற்றுனின் காலடியில் மிதிக்க விடலாமா?

வீரர்கள் : கூடாது!...கூடாது!

முத் : அப்படியானால் பழுதூரை விடுவிக்க என் தலைமையில் ஒன்று சேருங்கள்.

வீரன் : அண்ணே! உன் தலைமையில் பணி புரிய இந்தத் தம்பி எப்போதும் தயார்...

வீரர்கள் : தயார்.

நான் தயார்..
நானும் தயார்.
நானும் தயார்...

(வேலழகன் சிரித்தபடி வருகிறான்)

வேல : எல்லோரும் தயார்...ஆனால் நான் தான் தயார் இல்லை...விடுதலை வீரர்களாகிய உங்களை வெளியில் விட!...ஏ? அடிமைநாயே! மலைப்பாம்பின் வாயில் இருந்து கொண்டு விடுதலை மகுடியா ஊதுகிறாய்?... அதன் வயிற்றுக்குள்ளேயே உன்னைப் போட்டு விடுகிறேன்...பார்... இதோ தெரிகிறதாடா உன்னைச் சித்திரவதை செய்யப் போகும் சிறைச்சாலை...

முத்து : சிறைச்சாலை!...புரட்சிக் கவிதை புரியாதே உமக்கு!...அறிவீர்... மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை... எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை...

வேல : எதிர்த்துப் பேசாதே...மூடு வாயை!.....

[இழுத்து உள்ளே தள்ளுகிறான்,]

பழுதூர் வாழும் பூச்சிகளே! புழுக்களே!... புலியை இடறுதீர்கள்—ஜாக்ரதை;...'இம்' என்றால் சிறைவாசம்; 'ஏன்' என்றால் வனவாசம்!

[வேகமாகப் போகிறான்.]

கண்ணாடி மாளிகை

(வேதாளம் சுகதேவ்)

சுகதேவ் : வேதாளம்! நீர் சொன்னபடி எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டேன். இரண்டாயிரம் பொன் சில வழித்து...ஆபரணம்...ஆடை அது...இது.... எல்லாம் வாங்கி விட்டேன்...என் முத்தாயி வந்து விடுவாளா?...வேதாளம்...என் கண்ணாட்டிக்காக இந்த கண்ணாடி மாளிகை காத்துக் கிடக்கிறதே...வருவாளா அந்த ஆணங்கு?...

வேதாளம் : (சிரல்களைக் காட்டி) நிச்சயமாக தம்பீ!... இரண்டிலே ஒன்று தொடுங்க! (தொடுகிறான்)

வேதா : ஆ!...கட்டாயம் வருவாள் தம்பீ...

சுக : வருவாளா?...

வேதா : சரி!...ஒரு பூ சொல்லுங்க தம்பீ!...

சுக : பூ!...இதுதானே? புளியம்பூ...

வேதா : ஏன் இந்த வம்பு!...நானே போய் முத்தாயினை அழைத்துக் கொண்டு வருகிறேன்...நீங்கள் இங்கேயே இருங்கள்...இப்போதே வருகிறேன்.

வேங்கைபுர பாசறைச் சிறை

[முத்தன் சிறையில் இருக்கிறான்...அவனது தோழர்கள் பதுங்கிப் பதுங்கி வந்து அவனை விடுவிக்கிறார்கள்...அவன் அவர்கள் காதில் ரகசியம் கூறி செல்கிறான் முத்தனை விடுவிப்பதை மறைந்து இருந்து கவனித்த வேங்கைபுரவீரர்கள்...பாய்ந்து வந்து அவனை பிடித்து விடுகின்றனர். உடனே வேலழகனிடம் இழுத்துக் கொண்டு போகிறார்கள்]

தளபதி மாளிகை

வேலழகன் : என்ன?...

குறும்பன் : வேதாளம் வந்திருக்கிறான்...

வேல : வேதாளமா?...வரச் சொல் வரச் சொல்...

வேல : வாரும் வேதாளம்...வெற்றியோடுதான் வந்திருப்பீர் என எண்ணுகிறேன்...

வேதா : வெற்றியின் ஆரம்பம்தான் பிரபு!—நமது புரு புதிய வேடனிடம் சிக்கி இருக்கிறது!

வேல : என்ன?...என்ன?...

வேதா : சொல்கிறேன்...சுகதேவனுக்கும் முத்தாயிக்கும் — ஆனந்தபுரம் கண்ணுடி மாளிகையிலே திருமணம்...

வேல : ஆ!...

வேதா : நான்தான் ஏற்பாடு செய்தேன்...

வேல : (கோபமாக) என்ன?...

வேதா : வாருங்கள்.....முத்தாயியை உங்களிடம் சேர்ப்பதற்காகவே இந்த சூழ்ச்சியை ஆரம்பித்திருக்கிறேன்...

வேல : புரியும்படி சொல்லும்...

வேதா : நான் சொல்கிறபடி நீங்கள் செய்ய வேண்டும்...சுகதேவனுக்கும் முத்தாயிக்கும் திருமணம் நடக்கப் போகிறது...தாங்கள் முத்தனை உடனே அங்கு அனுப்ப வேண்டும்... முத்தன் போனால் முத்தாயி அவனுடன் ஓடி வருவாள்...இருவரும் தப்பி வரும்போது நாம் முத்தனை துரத்தி விட்டு முத்தாயியை மட்டும் அபகரித்துவிட வேண்டும்...

வேல : நல்ல யோசனை...முத்தன் நம் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டால்?...

வேதா : உம்..காதல் மயக்கத்தில் எதையும் யோசிக்க மாட்டான்...ஓடுவான் கழுதை வீரன் (வருகிறான்.)

வீரன் : பிரபு! முத்தன் சிறையிலிருந்து தப்பியோடி னான்...பிடித்து வந்திருக்கிறோம்...

வேல: எங்கே?...கொண்டு வாருங்கள்...வேதாளம்; நீர் சற்றுமறைந்திரும்...

[முத்தன் இழுத்துவரப்படுகிறான்.]

வேல : சரி! நீங்கள் போகலாம்...ஹி...ஹி...ஹி... முத்தா!... நீ சிறையிலிருந்து தப்பி ஓடாவிட்டாலும் நானே உன்னை விடுவித்து அனுப்புவதாக யோசித்துக் கொண்டிருந் தேன்...நல்ல வாலிபனே!... உன்னை நான் மிகவும் கஷ்டப் படுத்திவிட்டேன்...வருந்துகிறேன், அதற்காக...

முத்: அய்யா! திடீரென்று மாறிவிட்டீர்களே... நான் திக்கற்றவன் என்பதை எப்படி உணர்ந்தீர்கள்?..... தெய்வமும் வந்து சொல்லி இருக்க முடியாதே!

வேல : மனிதனுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறது. மனிதன் மிருகமாக மாறும் போது அந்த

மனச்சாட்சி புழுவாக மாறி அடங்கிக் கிடக்கும். மிருகத் தன்மை தோல்வி அடையும் நேரத்தில் புழுவாகிப்போன மனச்சாட்சி புள்ளி மயிலாக எழுந்து நடனமாடும்...அந்த ஆட்டத்திலேதான் உண்மையின் அழகு ஒளிவிட ஆரம்பிக்கிறது.

முத்: ஆகா! சிறப்பான கருத்து இந்த இடத்திலேயும் முளைக்கிறது, சேற்றிலே செந்தாமரை முளைப்பதைப் போல...

வேல: முத்தா! என் கண்ணைத் திறந்துவிட்ட செய்தி எது தெரியுமா?...உன் அன்புக் காதலி முத்தாயியை அந்த சுகதேவன் பலவந்தமாக மணம் புரியப் போகிறான்...

முத்: உண்மையாகவா?...

வேல: ஆமாம்! ஆனந்தபுரம் கண்ணுடி மாளிகையிலே திருமணம்...அவள் ஆவி பிரிவதற்கு முன்னுள் நீ ஓடு...முத்தா! எனக்கென இப்போது இவ்வளவு அக்கறை என்று கருதுவாய்...லலாபஜ்னு கதை படித்திருப்பாயே நீ...லலாவின் கணவன் அவளை அவன் காதலன் கயசிடம் திருப்பி அனுப்பிய நிகழ்ச்சிக்கும் இதற்கும் அதிக வேறுபாடில்லை... முத்தா! ஒன்று சொல்கிறேன்...நீயும் முத்தாயியும் என் பாதுகாப்பிலேயே குடும்பம் நடத்தலாம்...அதற்கென்ன இப்போது, அவசரம்!.....உடனே போ... உன் உயிரிணையாளைக் காப்பாற்று...[உள்ளேபோய் சிறந்த ஆடைகளை எடுத்து வந்து] இளைஞனே! இப்போதே ஓடு...இழந்த காதலை பெற்றிடு...இந்தா அழகான உடைகள். அணிந்து கொள்...ஆனந்தமாக திருமணத்தை முடித்துக் கொண்டுவா!...

முத்: மிகவும் நன்றி உடையவனய்யா நான்...

[வேகமாகப் போகிறான். அதற்குள் சிரிப்பொலி கேட்கிறது. மறைந்து கவனிக்கிறான்.]

வேதாளம்: சபாஷ் பிரபுவே! மிகவும் நன்றாக நடித்து விட்டீர்கள்.

வேல : சரியானபடி ஏமாந்து விட்டான் பயல்... வேதாளம்!... அடுத்த ஏற்பாடு என்ன?...

வேதா : அடுத்த ஏற்பாடு!... ஐந்தாறு குதிரை வீரர்களை அடியேனுடைய தலைமையில் அனுப்புங்கள். அந்த அழகியுடன் வந்து சேருகிறேன்.

வேல : ஆயிரம் பொன் தருவேன்... அவளுடன் வந்தால்...

முத்தன் : [தனியாக] சதி செய்கிறார்கள்... அந்தச் சதியை எனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறேன்.

பாசறை சமையல் கூடம்

முத்தன் : தோழர்களே! முத்தாயியை அடைகிற் பதற்காக என்னை கருவியாக உபயோகிக்கிறான் தளபதி. நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு மறைந்து விடுகிறேன்.

வீரன் : அப்படியானால் நாங்கள் என்ன ஆவது அண்ணே?

முத் : நீங்களும் எப்படியாவது இங்கிருந்து தப்பி என்னிடம் வந்து விடுங்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து பழுதூர் விடுதலைக்கு பாடுபடுவோம். வரட்டுமா நான்?

வீரன் : ஜாக்ரதையாகப் போங்கள் அண்ணே! நாங்கள் எப்படியும் வந்து சேருகிறோம்.—தந்திரமாக வெளியேற வேண்டும்.

கண்ணாடி மாளிகை

முத்தாயி : என்னப்பா யாருமே காணவில்லை? எங்கேயப்பா அவர்?...

திரிசங்கு : அடடடடா! அதற்குள் அவசரமா? இலை போட்ட பிறகு சோறு போடாமலா இருந்து விடுவார்கள்? வாம்மா வா.....

முத் : ஆமாம் ... திருமணத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம்...

திரி: மேளதாள மில்லையே; பந்தல் இல்லையே; பந்தி இல்லையே; என்று பார்க்கிறாயா?... இது பெண் வீடுதான். முகூர்த்தம் நடைபெறுகிற இடம் வேறிடம். அதுவுமில்லாமல்... இந்தத் திருமணம் சுகதேவுக்குத் தெரியாமல் நடைபெற வேண்டுமே...

முத்: ஆமாம்... ஆமாம்... அந்த சுகதேவ்...

[சுகதேவ் வருவதைக் கண்ட திரிசங்கு]

மிகவும் அழகானவர்—உனக்குப் பிடித்தமானவர் என்று கூறுகிறாய்.....

முத்: அப்பா...என்ன உளருகிறீர்கள்...!

[திரும்புகிறாள். சுகதேவை கண்டுவிடுகிறாள். மயங்கி வீழ்கிறாள்.]

சுக: என்ன?...என்ன?...

திரி: ஒன்றுமில்லை ... ஒன்றுமில்லை ...உங்களைப் பார்த்த அதிர்ச்சியில் மயக்கம் வந்துவிட்டது... சந்தோஷத்தால் இருதயம் படபடக்குமல்லவா...தம்பி...?

சுக: ஆமாம்!...ஆமாம்! எனக்குக்கூட இப்போது அப்படித்தான் அடித்துக்கொள்கிறது...

திரி: சரி; நீங்கள் மேலே போங்கள். நான் பிறகு வருகிறேன்.

[சுகதேவ் போகிறான். முத்தாயி மயக்கம் தெளிந்து எழுகிறாள், திரிசங்கு விலையுயர்ந்த நகைகளையும் உடைகளையும் எடுத்துக் காட்டுகிறான்.]

திரி: முத்தாயி! இவைகளைப் பார்...முத்தும், பவளமும், ரத்தினமும், வைரமும் பதித்திட்ட ஆபரணங்கள்! பளபளக்கும் பட்டாடை!...ஜொலிக்கும் வைரம்! மதிப்பு வாய்ந்த ரத்தினம்! ஆஹா...ஹா...இவைகள் எல்லாம்....

முத்: உங்கள் மானத்திற்கு தரப்படும் விலை! உங்கள் மகள் மீது வீசப்படும் வலை!...

திரி: சொல்வதைக் கேள்...

திரி: எதுவும் சொல்லவேண்டாம். எல்லாம் விளங்கி விட்டது. சிப்பியே முத்தைக் கொண்டு வந்து சேற்றில்

போடுகிறது!...செந்தாமரைக் கொடியே இதழ்களை உதிர்த்து எருமைக்குத் தருகிறது! அப்பா உங்கள் மகளிடமா இப்படி சூழ்ச்சி செய்வது!...

திரி: மகள்!...மகளா இருந்தால் ஒரு தகப்ப னுடைய மனதை இப்படி எரியவிடுவாளா? நீ மகளா இருந்தால்—ஒரு வயதான தகப்பன்—வாழ்நாளுள்ள தகப்பன்—வறுமையிலே பலநாள் கஷ்டப்பட்டவன்—இப்போது வாழ்ந்து பார்க்கலாம் என நினைக்கிறேனே, அதற்கு துணைபுரிவோமென்று எண்ணமாட்டாயா?... நான் வாழ்வதற்காக உன்னையென்ன தியிலா குதிக்கச் சொல்கிறேன்? பெரிய தியாகமா பண்ணச்சொல்கிறேன்?... தேடக் கிடைக்காத இடம்... அந்த இடத்து தெய்வமாக வைத்துப் போற்றுகிறேன் என்கிறான்...நீ தேம்புகிறாய்; விம்முகிறாய்; புலம்புகிறாய்; புத்தியற்றவளே! எத் தனையோ ஆசைகளை உனக்கு நான் நிறைவேற்றித் தந் திருக்கிறேனே, நீ எனது முதலும் கடைசியுமான இந்த ஆசையை பூர்த்தி செய்யக் கூடாதா?...

முத்: பல முறை உனக்கு நான் இளநீர் வழங்கி இருக்கிறேன்; ஒரு முறை உன் தலையில் விழுகிறேன் என்று தென்னைமரம் சொல்வதற்கும், நீங்கள் சொல்வதற்கும் என் னப்பா வித்யாசம்?...

திரி: சீ, அதிகப்பிரசங்கி! அடங்கிக்கிட! காலையிலே உனக்கும் இளவரசருக்கும் திருமணம்!...தயாராகிக் கொள் அதற்கு...

[வேகமாகப் போகிறான். வெளியில் வரும்போது வேதா எத்தை காண்கிறான்.]

திரி: வாருங்கள்...நல்ல சமயத்தில் வந்தீர்கள்...

வேதா: என்ன திரிசங்கு? எப்படி எனது ஏற்பாடு கள் எல்லாம்.....

ரி: ஏற்பாடுகள் எல்லாம் சரி! ஒரே ஒரு குறை தான்

வேதா: என்ன அது?

திரி: ககதேவை மணந்திட முத்தாயி மறுக்கிறாள்..

வேதா : சரிதான் போ! சாப்பாடு தயார்; சோறு தான் இல்லை என்பது போல் இருக்கிறதே! ஏனப்பா...இரு வருமே ஒன்றுபட்ட காதலர்கள் என்றீர்களே முன்பு...

திரி : முத்தாயி ஒரு முரட்டுப்பெண். அவள் பிடி வாதத்தை என்னால் மாற்றமுடியவில்லை...நீங்கள் தான் எப் படியாவது...

வேதா : உம்...முயற்சிக்கிறேன்...இப்போது அவள் எங்கே இருக்கிறாள்?

திரு : உள்ளேதான் இருக்கிறாள்.

வேதா : சரி நீங்கள் யாரும் வாதீர்கள்; நான் அவ ளைச் சரி செய்கிறேன்!...

[வேதாளம் உள்ளே போகிறான். முத்தாயியைப் பார்த்து]

வேதா : முட்டாள் பெண்ணே! எழுந்திரு! ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?...பேசமாட்டாயா?...ம்...தக் கப்பட இது தான் நேரம் போலிருக்கிறது...கடல் குமுறிக் கொண்டிருக்கிறது...நீ என்னமோ கட்டு மரத்தில் இருந்து ஒப்பாரி பாடிக்கொண்டிருக்கிறாய்!...ஆக வேண்டியதைப் பார், அன்புள்ள சிறுமியே! அழுவதால் ஆபத்தை தடுத்து விடமுடியாது.....ஏன் அழுகிறாய்?

முத் : ஊர் சிரிக்கிறது; நான் அழுகிறேன்...

வேதா : உண்மை தான். ஆனாலும் கொழுந்து மனம் படைத்த கோதையே! கொந்தளிபபிலிருந்து மீள்வதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கிற தென்பதை உணருவாய்...

முத் : மீள்வதற்கு வாய்ப்பா!...

வேதா : ஆமாம்...வாய்ப்புத்தான்...உன் விதலை தான்...வேதனை விலகுகிறது என்ற அறிகுறிதான், வேதா ளத்தின் வடிவத்திலே வந்திருக்கிறது...

முத் : என்ன சொல்கிறீர்கள்?...

வேதா : முத்தனும் நானும் எவ்வளவு நேசமுடன் பழகினோம் என்பது உனக்குத் தெரியாது...நீ கொடுத்த பொன்னை சுமதி வாயில் போட்டுக் கொண்டு விட்டாள்... முத்தன் பாசறைச் சிறையில் அடைக்கப்பட்டு விட்டான்... நான் வெகு நாளாக அருப்பாடுபட்டு சேமித்து வைத்

திருந்த திரவியத்தை கொடுத்து இப்போது அவனை மீட்டு விட்டேன்.

முத் : ஆ!...என் முத்தன் விடுதலை யடைந்து விட்டாரா?

வேதா : அய்யோ! பரிதாபத்துக்குரிய பாவையே!... இன்னும்கேள் இன்பச் சேதியை. உன் தகப்பன் கொடிய வன்; உன்னை ஏமாற்றி இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய் தான் என்பது எனக்கு தெரிந்தது...உடனே ஓடிவந்தேன், உன்னைக் காப்பாற்ற!...கலியாண விருந்தினன்போல் வந்து என் நண்பனின் காதலியை விடுவிக்க நான் முயலுகிறேன்.

முத் : அய்யா! நீங்கள் பல்லாண்டு வாழ்க!

வேதா : இந்த அக்கிரம உலகத்தில் ஏனம்மா ஆயுள் நீடிக்க வேண்டும்? அது கிடக்கட்டும்...இதைக் கேள், இளஞ் சிட்டே!... இன்றிரவே முத்தன் இங்கு வருவான்; நீ அவனுடன் புறப்பட்டு வந்துவிடு.

முத் : அவர் வருவாரா?...

வேதா : வராமல் இருப்பானு?...ஜாக்கிரதை, நீங்கள் இருவரும்!

[வேதாளம் போகிறான். அறைக்குள்ளே கிழவன் வேஷத்தில் முத்தன் நுழைகிறான்]

முத்தாயி : அத்தான்! நீங்கள் வருவீர்கள் என்று வேதாளம் சொன்னார்.

முத் : வேதாளம்! விஷம்பாம்பு அவன்! முத்தாயி, எப்படியாவது சுகதேவனை நீ இங்கே வரும்படி செய்ய வேண்டும்.

முத் : சுகதவனையா? ஏன்?

முத் : ஏன் தெரியுமா? நாம் இப்போது வெளியேறு வது என்பதென்றால் சாதாரணமல்ல, நம்மைச்சுற்றி ஆபத்து காத்திருக்கிறது!

[திரிசங்கு வருகிறான் முத்தன் ஒளிந்து கொள்கிறான்]

திரி : முத்தாயி! இன்னும் தூங்கவில்லே?...

முத் : தூக்கம் வரவில்லையப்பா!... யோசனையில் ஆழ்ந்திருக்கிறேன்.

திரி : என்னம்மா யோசனை?...

முத் : அந்த வேதாளம் வந்து எனக்கு அறிவு புகட்டிவிட்டார்...இத்தனை நாளும் புத்திகெட்டுப் போய் அந்த முத்தனை நம்பி இருந்தேன்...

திரி : மகளே! நீதான் பேசுகிறாயா?...ஆகா! வேதாளம் சொன்னது சரிதான்...முத்தாயி உன்னைப் பெற்ற பயன் இப்போதே அடைந்தேன்...

முத் : அப்பா ஒரு உதவி செய்வீர்களா?...

திரி : ஆயிரம் செய்வேன், சொல்லு!

முத் : கூலியில் எனக்கும் சுகதேவருக்கும் திருமணம், இப்போது நான் அவரை சந்தித்து சில விஷயங்கள் பேசவேண்டும்! அவரைப் பார்க்க வேண்டுமென்று மனமும் துடிக்கிறது...

திரி : என் ஆசை மகளே!...இதுவா பிரமாதம்? இப்போதே அனுப்புகிறேன்...

[திரிசங்கு போகிறான் வேகமாக. முத்தன், முத்தாயியிடம் ரகசியம் கூறி செல்கிறான்]

[திரிசங்கு சுகதேவிடம் சென்று முத்தாயினுடைய ஆவலைச் சொல்லுகிறான்]

சுக : ஆகா! என் காதல் தேவி! இதோ வருகிறேன். நெருப்பும் பஞ்சும் நெருங்கி இருந்தால் சும்மா இருக்குமா? மாமா! நீர் போய் நன்றாகத் தூங்கலாம்—நான் இன்று முத்தாயியை தூங்கவிடப் போவதில்லை—பேசிக்கொண்டே இருக்கப் போகிறேன்!...

[சுகதேவ் முத்தாயி இருக்குமிடம் வருகிறான்]

சுக : கண்ணே! என்னை ஏன் அழைத்தாய்? அடடா! பேசமாட்டாயா? இவ்வளவு வெட்கமா உனக்கு?...

முத் : ஒரு சேதி பேசவேண்டும்.

சுக : சேதியா? காதலன் — காதலி—கட்டிலறை சிற்றின்பக் கூடாரமே தவிர சேதி பேசும் இடமல்ல கண்ணே!...

முத் : இந்தக் கிண்டல் எல்லாம் செய்யக் கூடாது...

சுக : என்ன பேசவேண்டும்? பேச!...

முத் : ஆண் பெண் சமத்துவத்தைப்பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?...

சுக : ஆண்பாதி—பெண்பாதி—ஆணும் பெண்ணும் அர்த்தநாரீஸ்வரர்களாகவே சிருஷ்டிக்கப்பட வேண்டுமென்பதே என் கொள்கை—நான் ஆண்டவனாய் இருந்தால் அப்படித்தான் செய்வேன்!...

முத் : ஆகா...சுருக்கமாகச் சொல்லிவிட்டீர்கள், சிக்கலான பெரும் விஷயத்தை!...உங்களை அடையும் பாக்கியம் பெற்ற பெண் அதிர்ஷ்டசாலிதான்—இன்னும் ஒன்று கேட்க வேண்டும்.

சுக : இப்படி எல்லாம் சில்லறையாகக் கேட்காதே — மொத்தமாகவே கேள்!

முத் : அதை நான் கேட்டு நீங்கள் உடனே சொல்ல முடியாது. நீண்ட நேரம் பேசவேண்டும்.

சுக : பேசுவோம்-பாவா இல்லை-உன்னுடன் பேசுவதைத் தவிர எனக்கு வேறென்ன இன்பம் இருக்கிறது!

முத் : அருமையான நிலவு — இருவரும் ஆற்றங் கரைப்பக்கம் போய் சுவையானக் கதைகளை பேசுவோமே!

சுக : ஆகா!...நினைத்ததைச் சொன்னாய் வா, புறப்படு என் கண்ணே!...

முத் : உஸ்...தொடக்கூடாது ... அதெல்லாம் நாளைக்கு! வாருங்கள் போகலாம்...

சுக : தயாராய் இருக்கிறேன்...

முத் : ஆணும் பெண்ணும் சமம் என்கிறீர்களே, நீங்கள் பெண் உடையிலும், நான் ஆண் உடையிலும்...

சுக : அய்யோ, பெண் உடையிலா?

முத் : பார்த்தீர்களா! பெண் என்றால் இழிவ ...

சுக : இல்லை...இல்லை...யாராவது ஆண் பிள்ளைகள் பார்த்தால் வெட்கமா இருக்கும்...

முத் : யாருக்கும் தெரியாமல் ரகசியமாகத் தானே போகப் போகிறோம்? நீங்களும் நானும் ஓர் உயிரும் ஈருடலும் என்கிற போது, நீங்கள் என் ஆடைகளையும் நான்

• உங்கள் ஆடைகளையும் அணிந்து கொள்வதில் என்ன தவறு?...

சுக : தவறே இல்லை, தங்கக் கட்டியே! நீ சொல்வது போலவே செய்கிறேன்...

[சுகதேவ் பெண்ணுடையிலும் முத்தாயி ஆண் உடையிலும் வருகிறார்கள்...வேலழகன் வீரர்கள் மறைந்து இருக்கின்றனர்]

சுகதேவ் : கண்மணி, முத்தாயி! எவ்வளவு இனிமையான நேரம்!...எவ்வளவு அருமையான காட்சி!...ஆகா! என்னருகே நீ இருப்பது...அய்யோ, நாம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்றே புரியவில்லையே!...

முத்தாயி : புரியாது...புரியாது!...ங்...பேசாமல் வர வேண்டும்.

[வீரர்கள் சுகதேவை முத்தாயி எனக்கருதி தூக்கிக் கொண்டு சென்று விடுகின்றனர்...முத்தாயி நிற்கிறாள். முத்தன் பின்னே வந்து படமுறுத்துகிறான்]

முத்தன் : டேய்! யார் அது?...

முத் : ஆ!...

(இருவரும் சிரிக்கிறார்கள்)

முத் : அத்தான் -- நமது அடுத்த திட்டம் என்ன?

முத்தன் : அடுத்த திட்டமா? உன் கணையாழியை இப்படிக் கொடு...உப்...விரலில் போடு!...இந்தா!...விரலை நீட்டு...

(தன் கணையாழியை அவள் விரலில் போடுகிறான்)

முத : என்ன இது?...

முத்தன் : காதலிருவர் கருத்தொருமித்து கணையாழி மாற்றிக் கொள்வதே கல்யாணம்...

முத் : சரி...கல்யாணமாகிவிட்டது...இனிமேல்?...

முத்தன் : இனிமேல்...கு...கு...குடும்பம் நடத்த வேண்டியதுதான்...

முத் : குடும்பம், காட்டிலேயே நடத்துவதா?...

முத்தன் : நடத்தக் கூடாதா?...ராமனும் சீதையும் பதினைந்து வருஷங்கள் காட்டில் வாழவில்லையா? ஆணும் பெண்ணும் தனியாக இருந்தால் ஆரண்ய வாசத்தைவிட

ஆனந்தமான வாசம் எதுவுவே கிடையாது...களிப்பில் ஆடும் மயிலேப்பார்! காதாரப் பண்பாடும் குயிலேப்பார்! ஆறு பார்! —அருவிபார்!— அதன் அழகுபார் !—கொஞ்சம் அருகே வந்துபார்!

முத்: உம்...

முத்தன் : என்றெல்லாம் சீதையிடம் ராமன் பேசி யிருப்பான்...காட்டு வாழ்க்கை அவர்களுக்கு கசப்பாகவா இருந்திருக்கும்?...லட்சுமணருக்கு வேண்டுமானால் கசப் பாக இருந்திருக்கலாம்...பாவம், அவர் கல்யாணம் பண்ணி யும் பிரமச்சாரி !

முத் : குறும்பு !

முத்தன் ; சரி, முத்தாயி வா ! நாம் மாறு வேடத் திலேதான் மறைந்து வாழ வேண்டும்...இல்லாவிட்டால் வேலழகன் எப்படியும் பிடித்து விடுவான்...வா...வா!...

தளபதி மாளிகை

தளபதி : முத்தாயி ! உனக்காக நான்மட்டுமா காத்திருக்கிறேன்?...அதோ, அந்த வானத்துச் சந்திரிகை யும் காத்திருக்கிறது...கோலப் பெண்ணே! குளிர் மொழிப் பாவாய்! ஏன் இன்னும் வராமல் இருக்கிறாய்?...அந்த குதிரை வீரர்கள் மண்டுகளா?...அல்லது இந்தப் புரவிகள் தான் என் அவசரம் புரியாதவைகளா? எவ்வளவு நேரம்... எவ்வளவு நேரம்...அப்போதே சொன்னேன்...ஆனந்த புரத்துக்கும், தலைநகருக்கும் இடையே ஒரு குறுக்குப் பாதை போட வேண்டுமென்று.....இந்த அசட்டு ராஜா கேட்டிருந்தால் இப்போது எவ்வளவு சீக்கிரம் வந்திருக்க முடியும் என் முத்தாயி!...

[வீரர்கள் பெண் வேடம் பூண்ட சுகதேவைக் கொண்டு வருகிறார்கள்]

தளபதி : முத்தாயி! வந்துவிட்டாயா?...முத்தாயி, பேசமாட்டாயா?... ஆகா! உனது பொன்பொழி சிந்தும் இதழ்களை யார் மூடியது?...இந்தக் குதிரைக்காரப் பயல்கள் முட்டாள்கள்!

[வாய்க்கட்டை அவிழ்க்கிறான்...சுகதேவ் 'ஓ' வென்று அலறுகிறான். வேலழகன் ஆத்திரம் அடைகிறான்]

சுக : அய்யா, பிரபுவே! என்னை அடிக்காதீர்கள்...

வேல : நீ எப்படி இங்கு வந்தாய்?...

சுக: நானும் முத்தாயியும், அவள் பெண்ணாகவும், நான் ஆணாகவும்...இல்லை.....இல்லை...அவள் ஆணாகவும்..... நான் பெண்ணாகவும்...வேஷம் போட்டுக்கொண்டு ஆற்றங் கரை மோகத்திலே ஆனந்தமாக விளையாடுவதற்குச் சென்றோம்...அப்போது ஏற்பட்டது பிரபு, இந்த ஆபத்து!...

தள : முட்டாள்! வெளியில் சொல்லாமல் ஓடு இதை விட்டு...

*

[தண்டோரா போடப்படுகிறது...மாறுவேட முத்தனும் முத்தாயியும் வருகிறார்கள்.]

பரையடிப்பவன் : இதனால் சகலமான பேர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்,...வேங்கைநாட்டுப் படையிலே இருந்து முத்தன் என்பவன் தப்பி ஓடிவிட்டான்... அவன் அடையாளமாவது—அரும்பு மீசை—அழகான வாலிபன்—சிகப்பு நிறம் — வெண்கலக் குரல் --- அவனைப் பிடித்துக் கொடுப்பவருக்கு சரியான வெகுமதி அளிக்கப் படும்!...இது வேங்கை நாட்டுத் தளபதி வேலழகர் உத்திரவு...டம்!...டம்!...

[முத்தனும் முத்தாயியும் வணிகர் வீட்டுப் பக்கம் வருகிறார்கள். வணிகர் குழந்தையிடம்]

வணி: பாத்தியாடா கண்ணு! டம...டமா...டமா... ஓடிப்போனவனை நீ புடிச்சு தர்ரீயா?.....[குழந்தை அழுகிறது.] ஏ!...அழக்கூடாது...அன்புக் காசே...அழகு மணி மாளிகையின் அலங்காரத் திரு உருவே...அழித் தெழுதா சித்திரமே ... ஆடிவரும் பொன்விளக்கே... ஆராரோ...

[முத்தன்-முத்தாயி வருவது தெரிகிறது.]

தன : யார்? யார்...நீங்க? என்னை வேணும்? உங்களுக்கு ஒண்ணும் பிச்சைபோட என்னால் முடியாது... நான் கைக்குழந்தைக்காரன்...

முத்: எதாவது வேலை தேடறத்துக்காக...

தன: அண்ணனும், தங்கச்சியும் பொறப் பட்டீங்களா?.....

முத்: அய்யோ!...நாங்க புருஷன் பெஞ்சாதி சாமி...

தன: ஊகூம்...என்னு வேலை பாப்பீங்க?...

முத்தாயி: இட்டவேலையைத் தட்டாமல் பாப்போம். அவருக்கு உடம்பு முடியாது...நான் மாத்திரம்...

தன: சரி...இந்தக் குழந்தையை—வளர்க்க முடியுமா உன்னால்?...

முத்: ஓ!...

தன: அனுபவம் இருக்கா?...

முத்: குழந்தைகூட என்கிட்ட தாவுதே...வாடா கண்ணு!.....

தன: தாயார் இல்லாத குழந்தை—வாழக்குலை மாதிரி வந்து பொறந்திருக்கு...இத பாத்துக்கனும்... ஊதியம் கிடையாது...உங்களெண்டு பேருக்கும் சாப்பாடு தான்...இதோ ஓலைக்குடிசை...அதில்...குடியிருந்துக்க லாம்...

முத்: சரி...

தன: உன் பேரு என்னு?...

முத்: என் பேரு பொன்னி...அவரு...

முத்தன்: ம்...புருஷன் பேரு சொல்லாதே...பாவம்...என் பேரு பொன்னனுங்க, சாமியோய்!

அஞ்சல் மூன

வேதாளம்: உம்...இரண்டும் புதிய பறவைகள்—பருவ மலர்கள்-எங்கே போய் காதல் கீதம் பாடுகிறார்களோ? திரிசங்கு! கவலைப் படாதே. உன் மகளுக்கேற்ற மன்மதனை தேடிப் பிடித்துவிட்டாய். இனி அவள் பாடு! அவன் பாடு!

திரிசங்கு: மன்மதன் என்பதற்காக அல்லவே, நான் இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இந்த திருமணத்தை ஏற்பாடு செய்தது. ஓட்டைக் குடிசையிலே கிடக்கும் நான்.....

வேதா: உப்பரிகையிலே உலவலாம் பாளையக்காரர் சம்மந்தியாக என்று எண்ணினாயா—அதுதானே! இப்போது

தான் என்ன—சுகதேவ், முத்தாயி இருவரும் தங்கள் காதல் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு விரைவில் வந்து விடுவார்கள்.

திரி: எப்போது? நான் சுடுகாட்டுக்குப் போகும் போதா?

வேதா: அப்படியாலுல்தான் என்ன? உனக்கு கொள்ளி வைக்கப் போகிற பேரன் எதிர்கால பாளையக் காரராக அல்லவா இருப்பான்.ஹி...ஹி...ஹி...திரிசங்கு! அதெல்லாம் இருக்கட்டும். இவ்வளவு மகத்தான திருமண ஏற்பாட்டுக்கு யோசனை சொன்னேனே—எனக்கு எங்கே பரிசு?

திரி: பரிசா?

வேதா: ஊதியம் என்று கேட்கட்டுமா?

திரி: விளையாடாதீர், என் வேதனையோடு.

வேதா: விளையாட்டா? இந்த வேதாளம் விளையாட் மாட்டான் திரிசங்கு...மரியாதையாக எனக்குத் தரவேண் டிய பரிசு வரவேண்டும். இல்லாவிட்டால்,.....

திரி: இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்?

வேதா: என்ன செய்வேனு? சுகதேவை ஏமாற்றி நீ கெடுத்து விட்டாய் என்று பாளையக்காரரிடம் கூறுவேன். ஜாக்ரதை!

திரி: பயறுத்தாதீர். பாளையக்காரர் முட்டாள் அல்ல ஆதாரமில்லாத உன் பொய்யை அப்படியே நம்பிவிட.

வேதா: ஆதாரமா இல்லை? முத்தாயி உன் வீட்டில் இல்லாதபோது எனக்கு பெரிய ஆதாரம் தெரியுமா?

திரி: போதும்! நிறுத்தும்! நீரும்தான் யோசனை சொன்னீர்.

வேதா: அது வாது அப்பனே இந்த வழக்குக்கு! இரு...இரு உன்னைப் பேசிக் கொள்கிறேன். ஒழுங்காக நடந்து கொண்டால் பிழைத்தாய். இலை....

திரி: இல்லை—செத்துவிடுவேன். அவ்வளவுதானே! ஒன்றும் மிரட்டாதீர். உம்மால் ஆனதைச் செய்யும்.

பலதேவர் மாளிகை

பலதேவர் : திரிசங்கு! வரட்டும் அவன்! நல்லவனைப் போல நடந்து நரிவேலை நடத்தி இருக்கிறானே, தரோகி!

வேதாளம் : நல்லவர்களை இந்தக் காலத்தில் நம்பக் கூடாது பிரபு.

பல : யாரங்கே? (சேவகன் வருகிறான்) உடனே போய் திரிசங்குவை கை கால்களைக் கட்டி இழுத்து வாருங்கள். எவ்வளவு பொருள் அழிந்தாலும் சரி-என் மகனை என்னிடம் அழைத்து வந்தால்போதும். அவன் வராவிட்டால் ராணி இறந்தே விடுவாள்.

வேதா : சுகதேவ் காணமற்போன செய்தி யாருக்கும் தெரியவேண்டாம். நானே அவனைத் தந்திரமாக கண்டுபிடித்து வந்து தங்களிடம் ஒப்படைக்கிறேன்.

பல : மிகவும் நன்றி. ஐநூறு பொன் தருகிறேன்— சுகதேவ் கிடைத்துவிட்டால் உமக்கு பரிசாக ஐநூறு பொன் தருகிறேன் இரும்—வருகிறேன்,

(பலதேவர் போகிறார்)

வேதா : துன்பம் துணையோடு வரும், இன்பம், தனியாக வரும் என்பார்களே, அது தவறு! வேதாளத்தின் மீது இன்பம் எறும்பு வரிசைபோல் அல்லவா படை எடுக்கிறது! உம்...ஒருவனை அடித்துத்தான் ஒருவன் சுகம் தேடமுடிகிறது! ஈ சிலந்திக்கு ஆகாரம்— சிலந்தி பல்லிக்கு ஆகாரம்—பல்லி பூனைக்கு ஆகாரம்-பூனை குறவனுக்கு ஆகாரம்--குறவன் எமனுக்கு ஆகாரம்-அதே வழிதான் என் வழியும்! வேகமாகப் போகும் என் வளர்ச்சி ஒருவேளை என்னை பழுதூர் பாளையக்காரராகக்கூட ஆக்கி விடலாம்!...

பல : (உள்ளிருந்து வந்து) வேதாளம்! இந்தாரும்!

வேதா : பெருமை மிகு பிரபுவே! உங்கள் அருமை மிகு மகனை எப்படியும் அழைத்து வருகிறேன். ஆண்டவனே துணை! அம்மையப்பா!

தனவணிகர் வீடு

[முத்தன் நண்பர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறான். முத்தாயி அதை கதவிடுக்கில் நின்று கவனிக்கிறாள்]

முத்தன் : எப்படியும் பழுதூர் விடுதலை பெறவேண்டும்...இந்த எண்ணம் மக்கள் உள்ளத்திலே பதிய வேண்டும்...விடுதலை உணர்ச்சி காட்டுத்தீ போல் பரவிவிடுமானால் பிறகு ஒரே நாளில் பழுதூரில் சுதந்திரக் கொடியை பறக்க விட்டு வெள்ளை நாட்டு ஆதிக்கத்தை விரட்டிவிடலாம்!

தோழன் 1 : மக்கள் மனதை மாற்றுவதென்றால்...

தோழன் 2 : யோசித்தால் நடக்காது...செயலில் இறங்க வேண்டும்...

தோழன் 3 : ஆமாம்...அது தான் என் அபிப்பிராயமும்...

முத் : மக்கள் எங்கெங்கே தங்கள் கவனத்தை செலுத்துகிறார்களோ, அத்தகைய எல்லாத் துறைகளிலும் நமது கருத்தைப் பரப்பவேண்டும்...

தோழ 2 : ஆங்!...அண்ணை சொல்வதுதான் சரி!...

முத் : நீங்கள் போங்கள்...மற்றவைகளை கவனிக்க நான் வருகிறேன்...

[போகிறார்கள். முத்தாயி வருகிறாள்]

முத் : முத்தாயி...!

முத்தாயி : ஆமாம்; இதெல்லாம் என்ன?

முத் : விடுதலைப் போருக்கு ஆரம்பம்! அவர்கள் என் தோழர்கள்...பழுதூர் விடுதலையடைய இது போல ஒரு படையே சேர்க்கிறேன்...

முத்தாயி : எனக்கு பயமாயிருக்கிறது...

முத் : பைத்தியம்! பயமா?...புறநானூறு சிரிக்கப் போகிறது உன்னைப்பார்த்து!...

முத்தாயி : விடுதலைப் போர் நடத்தினால் உங்கள் உயிருக்கே ஆபத்து வந்து விட்டால்...

முத் : பிறகென்ன-விடுதலை வீரனுக்கு விருந்தா வைப்பார்கள்...இதபார்..இந்தக் குழந்தைகூட என்னையே பார்க்கிறது...டேய்!...இதுபோல நமக்கு ஒன்று...

முத்தாயி : இன்னும் எட்டு, ஒன்பது மாதங்கள் பொறுத்திருங்கள்...

முத்: ஆ...அப்படியா? நீ சொல்லவில்லையே என்னிடம்...

அடைக்கலபுரி தேவாலயம்

[இளந்துறவி சுகதேவ், "முத்தாயி" ஜபத்துடன் நிஷ்டை இருக்கிறான். அப்போது துறவி வேடத்துடன் வேதாளம் வருகிறான்]

வேதாளம் : ஓம் சக்தி! சாமுண்டி, மகாகாளி, பரமேஸ்வரி, சோணுகாம்பா, சுந்தரி, சவுந்தரி, நிரந்தரி, துரந்தரி, ஜோதியாய் நின்ற உமையே!...சுக்ர வாரத்திலினைக் கண்டு தரிசித்தவர்கள் துன்பத்தை நீக்கி விடுவாய்...அம்பிகே! ஜகதம்பிகே! காளி!...

(சுகதேவைப் பார்க்கிறான்)

சுக : முத்தாயி...முத்தாயி...

வேதா : இளந்துறவியே! முதலில் என்னுடைய வாழ்த்துக்கள்...

சுக : வெண்காடிப் பெரியவரே!...உலகம் பொய்! உமக்கென்ன வேண்டும்?...

வேதா : பொய்யான இந்த உலகத்தில் மெய்யான இனைஞரே!...உமக்கு எவ்வூர்?...உம்மைப் பார்த்தால் ஏதோ உள்ளங் கவர்ந்த ஒரு பொருளை பறி கொடுத்தவர்போல் தெரிகிறதே!...

சுக : ஆஹா...ஹா...ஹா! அதிசயமனிதர் நீர்! அகத்தில் உள்ளதை எப்படிக்கண்டீர்? எவ்வாறு விண்டீர்? திரிகால முணரும் தேவாமிர்தமா உண்டீர்?...

வேதா : தம்பி!...காதலில் தோற்றவன் நீ என்பது என் ஞானக் கண்ணிலே தெரிகிறது...மெய் தானே?...

சுக : ஆமாம்! எப்படித் தெரியும் உமக்கு?...

வே : உத்தமர்களுக்கு உலகின் ஒவ்வொரு கோடியும் தெரியும்...நீர் ஓர் அரண்மனைவாசி!...ஆனால் மயக்கத்தால ஆசிரமத்துவாசியாகி விட்டீர்! இல்லையா?...

சுக : ஆமாம், ஸ்வாமி! ஆரணங்குகளின் மயக்கம் விட்டவர்களே. ஆஸ்ரமவாசியாக முடியு மென்பார்கள்... நானே அந்த மயக்கத்தாலே கட்டுண்டு ஆண்டியாகி யிருக்கிறேன்!...

வே : அதிசயமில்லை...அரண்மனையை விட்டு ஆசிரமம் வந்தான் விசுவாமித்திரன்...அங்கும் விட்டபாடில்லை, அழகிகளின் தொல்லை...அவன், தவத்தின் மேன்மைக்கோர் எல்லை...மேனகா பெற்ற பிள்ளை...

சுக : ஆகா! பழுத்த அனுபவமும், கொழுத்த பக்தியும் கொண்ட தவசிரேஷ்டரே! தங்களால்தான் நான் தன்யனாக வேண்டும். வாத்தைத் தாருங்கள்...

வே : புரிகிறது! அந்த நாலெழுத்து நங்கையை நீ அடையவேண்டும்...அவ்வளவுதானே...?

சுக : மு—த்—தா—யி! ஆகா!...த்சு...த்சு...சரியாகச் சொன்னீர், சற்குருவே!... நாலே எழுத்துதான் அந்தச் நாரீமணியின் பெயர்!...

வே : அவளை உனக்கு நான திருமணம் முடித்து வைக்கிறேன்...இளம்வயதில் இந்தக் கோலம் வேண்டாம் உமக்கு!...செய்யவேண்டிய அக்ரமமெல்லாம் செய்துவிட்டு, தள்ளாத காலத்திலே 'சிவசிவா' என்று கூவுவதே மனிதர்க்குத் தகுதியான செய்கை...

சுக : என் முத்தாயி கிடைத்துவிடுவாளா?...தேடாமல் வந்த என் தெய்வமே!...முருகனுக்கும், வள்ளிக்கும் நடுவிலே வந்த நாரதனைப் போல எனக்கும் முத்தாயிக்கும் இடையிலே வந்த இறைவனது திருவருள் பெற்ற என்னையனே! போற்றி...போற்றி...

வே : சரி வா...என்னுடைய இருப்பிடத்திற்குப் போவோம்...விரைவில் முத்தாயி கிடைப்பாள்...

கடற்கரை

[முத்தாயி தனவணிகர் குழந்தையை கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறாள். புயல் வீசுகிறது. பெரு

மழை பொழிகிறது. குழந்தையுடன் ஓடி வருகிறாள்!...ஆடிக்கொண்டிருந்த மரம் ஒன்று முறிகிறது. முறிந்த மரத்தடியில் முத்தாயி சிக்கி விடுகிறாள். குழந்தை தனியாக பிரிந்து விடுகிறது]

மண்டபம்

[புயல் ஓய்கிறது. வேதாளமும், சுகதேவும் ஒரு மண்டபத்தில் உட்கார்ந்திருக்கின்றனர்]

வேதாளம்: பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு பிடித்துன்னை...கண்ணால் மயக்கி...

(வணிகர் வருகிறார்)

வணிகர்: அய்யா...அய்யா! ஒரு பெண்ணையும் குழந்தையையும் பார்த்தீர்களா அய்யா?...

சுக: என்ன! பெண்ணும் குழந்தையுமா?...கடற்கரையிலே எத்தனையோ ஆணும் எத்தனையோ பெண்ணும்...

வணி: இல்லை அய்யா! வழக்கம்போல என் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடற்கரைக்கு வந்தாள் வேலைக்காரி...

வேதா: போ...போ...போய்த் தேடு!

(வணிகர் போகிறார்)

சுக: நாங்க தேடறதே கெடக்கிலேயாம். இவன் வேற... வாங்க சாமி போகலாம்.

ஊரின் வெளிப்புறம்

[தனவணிகர் குழந்தையைத் தேடிக் கொண்டு வருகிறார். ஒரு மரத்தடியில் நின்று அழுது கொண்டிருக்கும் குழந்தையை தூக்கிக் கொள்கிறார்]

தன: கடவுளே!...என்னைக் காப்பாற்றினாய். இந்த ஏழையைக் காப்பாற்றினாய்...

அதே சமயம்

[முத்தாயி மரத்தின் அடியில் மயங்கிக் கிடக்கிறாள்...அவ் வழியே சுமதி வருகிறாள்...முத்தாயியைக் காண்கிறாள்]

சுமதி : யாரது?...அய்யோ பாவம்! (பார்க்கிறாள்) ஆ!...முத்தாயி...முத்தாயி...

[அவளை அணைத்து நடத்திக் கொண்டு செல்கிறாள்]

தனவணிகர் வீடு

முத்தன் : பொன்னி எங்கே?

தனவணிகர் : நான் போகவில்லையென்றால் குழந்தை அவ்வளவுதான். காற்றில் மரக்கிளை முறிந்து விழுந்து...

முத் : பொன்னி எங்கே?

தன : அடடே! நான் அவசரத்தில் அவளை மறந்தே விட்டேன்!

முத் : மறந்து விட்டீர்கள்! எங்களைப் போன்ற ஏழைகளை மட்டுமல்ல; உங்கள் சீமான் இனம், இரக்க மெனும் ஒரு பண்பையே மறந்து பலநாளாயிற்று.

[முத்தன் ஓடுகிறான்]

சுமதி வீடு

[முத்தாயி, சுமதியுடன் அவள் வீட்டில் நுழைகிறாள். வேதாளமும் சுகதேவும் அதைப் பார்க்கிறார்கள்,]

சுக : இந்த வீட்டுக்குள் போகிறார்கள் ... சாமி, நாமும் போகலாமா?...

வே : பொறு அப்பனே!

சுக : பொறுக்குகிறேன்...

வே : வா...வா...நம் இடத்துக்குப் போவோம் ... முத்தாயி இருக்குமிடம் தெரிந்து விட்டது. இனி அவள் யாரைச் சேரவேண்டுமோ அவனிடம் அவளை சேர்க்க வேண்டியது என்கடமை...

சுக : கடமையை விரைவில் நிறைவேற்றுங்கள் ஸ்வாமி!

வே : அப்படியே ஆகட்டும்...சரி...சரி...வா...

வீட்டிற்குள்

முத்தாயி : அன்று உன்னைப் புரிந்து கொள்ளாமல் கோபமாகப் பேசிவிட்டேன். என்னை மன்னித்துவிடு...

சும : அதையெல்லாம் மறந்துவிடுவோம்!

முத் : கல்யாணமானதும் உன்னுடைய குறும்புப் பேச்செல்லாம் எங்கேயோ ஓடி ஒளிந்து விட்டதே...

சும : எங்கும் ஒளியவில்லை... அவர் உடல் நலம் பெறட்டும்...பிறகு கேளேன், என் பேச்சை! முத்தாயி, நீ என் பேச்சை குறும்பு என்கிறாய்; அவர் என்ன தெரியுமா சொல்லுகிறார்?...கரும்பு என்கிறார்!

முத் : உம், சரி சரி...உன்னுடையவரைப் பற்றியே பேசிக் கொண்டிருக்காதே ... கொஞ்சம் என்னுடைய வரையும் கவனி...

வேதாளத்தின் ஆசிரமம்

[சுகதேவ் கதவைத் தட்டுகிறான். உள்ளே வேதாளம் தளபதியுடன் பேசிக் கொண்டிருக்கிறான்]

சுக : ஸ்வாமி! ஸ்வாமி!

வே : பொறு. இன்னும் நிஷ்டை முடியவில்லை.

சுக : சுகதேவ் வந்திருக்கிறேன் சுவாமி! கதவைத் திறவுங்கள்.

வே : மூடபக்தா! இரு. கடவுளுடன் பேசிக் கொண்டிருக்கிறேன், முத்தாயி விஷயம் பற்றி...

சுக : (தனக்குள்) ஆகா! கடவுளோடு பேசுகிறாரா? நாம் தான் பகவானைப் பார்க்க முடியாது. பாப ஆத்மா! சாமியார் பேசும்போதாவது மறைவாக இருந்து பார்த்து விடுவோமே!

[ஜன்னல் கதவைத் திறந்து பார்க்கிறான். அனுக்கு தூக்கி வாரிப் போடுகிறது]

சுக : ஆ! அய்யய்யோ! தளபதி!...வேதாளம் மறுபடியும் முருங்க மரம் ஏறுகிறது. எங்கப்பா! நல்ல வேளை, நான் பிழைத்தேன்... (ஓடுகிறான்.)

சத்திரத்திற்குள்

வே : ஓடிப்போன முத்தன்கூட ஒரு விடுதலைப் பட்டாளத்தைச் சேர்த்துக் கொண்டு பழுதூரை விடுவிப்பதற்காக சதி செய்கிறான் என்று தெரிகிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் போல அந்தப் பயில் முத்தனையும் பிடித்துவிட வேண்டும்.

தள : அதிருக்கட்டும் - வேதாளம்! சுகம் எங்கே என்று தேடிஅலையும் என்னிடம் விடுதலைப் பட்டாளத்தைப் பற்றி இப்போது வீணாக ஏன் பேசுகிறீர்? முதலில் அந்த சுந்தர மேனியாளை எப்படியாவது கொண்டு வா!

வே : இதங்கள். வெற்றியோடு வருகிறேன்.

சுமதி வீடு

[முத்தாயி படுத்திருக்கிறாள். வேதாளம் அழைக்கிறான்]

வே : அம்மா!...அம்மா!...

முத் : யாரய்யா நீங்கள்?...என்ன வேண்டும்?...

வே : இங்கு முத்தாயி என்பது யார்?

முத் : என்!...என்ன விசேஷம்?

வே : முத்தன் என்பவருக்கு பகைவர்களால் தாக்குதல் ஏற்பட்டு மரணஸ்தையில் இருக்கிறார்.

முத் : ஆ!...அத்தான்!...

வே : நீங்கள்தானா முத்தாயி? என்னுடன் வந்தால் அவரை உயிரோடு பார்க்கலாம்...

முத் : அய்யா!...அவர் எங்கே இருக்கிறார்? என்னை அழைத்துப் போங்கள்...

வே : சரி வாருங்கள்; காட்டுகிறேன்.

[முத்தாயி வேதாளத்துடன் செல்வதை அங்கு வரும் சுகதேவ் பார்த்து விடுகிறான்]

ஆகா! என்காதலியை இந்தக்காதகனல்லவா அழைத்துப் போகிறான்? நிராயுதபாணியாகிய நான் எப்படி நேரடி நடவடிக்கை எடுக்க முடியும்?...ம்...பார்க்கலாம்...

கோவில் மண்டபம்

சுக : காதலியை காரிருளில் கைவிட்டுக் கதறுகின்றேன். எப்படி மீட்பேனே...என் அருமைக் காதலி, உன்னை! சாதுவேடத்தில் வந்து சூது செய்து விட்டானே! முத்தாயி! முத்தாயி! அந்த மூர்க்கனிட மிருந்து எப்படி மீட்பேன் உன்னை?...

[முத்தன் அவ்வழி போகிறான்]

சுக : ஏ முத்தா! நில்லு—நில்லு—நல்ல சமயத்தில் வந்தாய்! நீ எங்கிருக்கிறாய்—எப்படி இருக்கிறாய்—என்

றெல்லாம் கேட்பதற்கு நேரமில்லை இப்போது...என் ஆரு யிர் காதலி முத்தாயியை ஆண்டிவேடம் போட்ட வேதா ளம் எங்கேயோ ஏமாற்றி அழைத்துப் போகிறான்.

முத்: ஆ! எங்கே?

சுக: அவனுடைய சத்திரத்திற்குத்தான் போயி ருப்பான்...

சத்திரம்

[உள்ளே போர்வையால் ஒரு உருவம் மூடப்பட்டி ருக்கிறது...வேதாளம் முத்தாயியுடன் வருகிறான்].

வேத: அதோ ...உன் காதலன்!

[ஆவலுடன் 'அத்தான்' என்று போர்வையை இழுக்கிறாள் வேலழகன்...எழுகிறான்.]

முத்: ...ஆ!...

வேலழகன்: முத்தாயி!...முழு நிலவே!...ஏன் பயப் படுகிறாய்?...அத்தான் என்று அழைத்தாயே, அந்த அழகை முத்தனல்ல; தளபதி வேலழகன்! தெரிகிறதா என்னை?...

முத்: தளபதி வேலழகன்! நாடுகாக்க வேண்டிய நீங்கள் இப்படி நடுத்தெரு நாடோடியாகி விட்டீர்கள்... வேண்டாம். நான் உங்கள் சகோதரி...

வேல: மலரும் வண்டும் சகோதரர்கள் என்றால் மடையர்கள்தான் நம்புவார்கள் கண்ணே!...

(கையைப் பிடிக்கிறான்)

முத்: சீ!...விடு என்னை! வெட்கங் கெட்டவனே!... விஷப்புயலே! உன் காமச் சூறாவளியிலே கவிழ்ந்து விடும் மரமல்ல நான்...

வேல: திட்டு! நன்றாகத் திட்டு! எழுத்துக்கு எழுத்து தித்திக்கிறது...கூண்டிலே அடைபட்ட கிளி கத்துவது கோபத்தால் அல்ல!...பயத்தால்! அதுவும் பழ கப் பழக சரியாகி விடும்...

முத்: நெருங்காதே!...

வேல: இந்த நாட்டின் சேனைத் தலைவன் அழைக் கிறேன்...என் ஆணைக்கு அடங்காதவர்கள் என்ன ஆவார் கள் தெரியுமா?...

முத்: கொன்று விடுவாய்! அவ்வளவுதானே?... சாவுக்குப் பயப்படமாட்டேன்! சாவு உன்னை விடக் கோரமானதா? இல்லை...இல்லை...ஒருக்காலுமில்லை!

வேல: முத்தாயி!—இரும்பு போன்ற என் கரங்களிலேயிருந்து தப்பிய மலர்கள் எதுவுவே கிடையாது!... ஞாபகம் வைத்துக் கொள்!...

முத்: என்னை விட்டுவிடு, அக்ரமக்காரா!...

வேல: அக்ரமம் என்ற அச்சாணியில்தான் அகில உலகமும் சுற்றுகிறது!... முத்தாயி!...இனி நீ தப்பவே முடியாது...இணங்கி விடு நீயாகவே!...(நெருங்குகிறான்-முத்தாயி ஓட முயலுகிறாள்) எங்கே ஓடுகிறாய்? நீ எங்கு சென்றாலும் நான் விடமாட்டேன்...வானம்பாடியாக நீ பறந்தால், உன்னை வட்டமிடும் பருந்தாக மாறுவேன்!... புள்ளிமானாக மாறித் துள்ளினால், புலியாகச் சீறிடுவேன்! நீ கடைசியில் பிணமானால்கூட உன் சரீரத்தைத் தொட்டெரிக்கும் சந்தனக் கட்டையாக மாறுவேன் நான்! இன்பமே!...இணங்கிவிடு...வசந்தத்தில் புஷ்பிக்கும் வாசப் புது மலரே! வந்துவிடு என்னிடம். வண்ணத் தாமரையே! வர்ணஜாலப் பூங்கொத்தே!...என் வலிமை மிக்க தோள்களிலே உன்னை வாரி எடுத்துக் கொள்வேன்...பாய்ந்து விடு என்மேல், பைங்கிளியே!...

முத்: வீணாக அழிந்து போகாதே; விலகி நில்...

வேல: (பயங்கரச் சிரிப்பு) என்னை அழித்துவிட்டு உனக்கு யாரும் இப்போது அபயம் கொடுக்க முன்வரப் போவதில்லை!...கதைகளில் படித்திருப்பாய்; காதலிக்கு இன்னல் வரும்...கதாநாயகன் ஓடிவந்து காப்பாற்றுவான் என்று! அதெல்லாம் நடக்காதம்மா இங்கே!... அப்பேற்பட்ட சீதையையே அசோகவனத்திலிருந்து சாமான்யமாக மீட்க முடியவில்லை, அவதார புருஷர் ராமச் சந்திரமூர்த்தியால்! ஞாபகத்தில் வைத்துக்கொள்! பரிதாபத்துக்குரிய பெண்ணே!...உனக்கு யாரோ பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டார்கள், கண்ணகி போல கற்போடு நடக்கவேண்டும் என்று!...அதெல்லாம் சிலப்பதிகாரத்துக் காலம்...தடை விதிக்கப்படவேண்டிய இலக்கியம்...இந்தப் படைத் தளபதி அனுமதிக்க முடியாத தத்துவம்...ஆரணங்கே! வந்துவிடு அருகே...

முத்: வேலும் வாளும் தாங்கி போரிடும் வீரத் தலை வனே! ஒரு பெண்ணிடத்தில் இப்படிக் கோழைத்தன மாக நடந்து கொள்ளாதே...

வேல: வீரத்தனமாக நடந்து கொள்ளட்டுமா?...

முத்: விட்டுவிடு என்னை...

வேல: கையிலே கிடைத்த கனி—கண்ணில் அகப் பட்ட பறவை—கபோதிகள்கூட விடமாட்டார்கள்! முத் தாயி! எச்சரிக்கிறேன்; பொறுமையை சோதிக்காதே.....

(அணைக்க நெருக்குகிறான்)

முத்: சீ! (அறைகிறாள்)

வேல: ஆ!...

[வானை உருவுகிறான். முத்தன் மேலேயிருந்து குதிக்கிறான்.]

வேல: முத்தா!...வீணை சாகாதே! நீ யார் என் பதை நிதானித்துக் கொள்...

முத்தன்: நானா? நான்தான் உன் தான்தோன்றித் தனத்தின் தர்பாரிலே-சர்வாதிகாரச் சபா மண்டபத்திலே சிக்கிச் சீரழிந்த வீரன்!...ஆனால் இன்று அந்த வீரனை வரவில்லை...நான் சிந்திய ரத்தத்திற்கு-நான் அனுபவித்த சித்திரவதைகளுக்கு—உனக்குப் பரிசளிக்க வந்திருக் கிறேனடா, பரிசளிக்க வந்திருக்கிறேன்! பெண்வேட்டை யாடும் பித்தனே! மதுவும் மங்கையர் சுகமும் உங்கள் மகு டத்தின் நிழலிலே மறைந்து கிடக்கலாம்...ஆனால், அந்த மகுடத்தை தூள் தூளாக்கிப் போடும் புரட்சி சக்தி பொங்கி எழுந்துவிடும் என்பதை உணரமுடியாத மதோன்மத்தர்கள் நீங்கள்...

வேல: யாரோடு பேசுகிறாய் என்பதை மறந்து விடாதே முத்தா!

முத்: என் வாழ்க்கையோடு விளையாடுகிற உன் னோடு விளையாடுகிறேன்!

வேல: என் சுட்டுவிரல் அசைந்தால் நீ சுக்கு நூறு கப் போய்விடுவாய்...

முத்: ஆஹாஹா!...உன் சுட்டுவிரல் என்ன சுத் தியலா?—இல்லை, நான் தான் என்ன கண்ணுடிப் பாத்திரமா சுக்குநூறுகிவிட...பயமுறுத்தி வாழ்ந்த

காலம் மலையேறி விட்டது படைத்தலைவரே! இனி பண்புடையோர் மட்டுமே வாழ்வதற்கு இடமளிக்கும் பகுத்தறிவுக் காலம் வந்து கொண்டிருக்கிறது என் பதை நீர் நினைவில் வைத்துக் கொள்ளும்...உம்மைப் போல சர்வாதிகார அடிச்சுவட்டை பின்பற்றி வேக மாகச் சென்றவர்களின் ஆட்சி பீடம் ஓடாகி, மேடாகி, இருந்த இடம் தெரியாமல் சுடுகாடாகிப் போய் விட்டது!

வேல; கையிலே இருப்பது என்ன தெரிகிறதா?...

முத்தன்: நன்றாகத் தெரிகிறது ... கோழையிடத் திலே இருக்கிற கத்தியின் பளபளப்பு, வீரனுடைய கரத் தின் சொர சொரப்புக்கு முன்னே எம்மாத்திரம்? உன் னிடம் கத்தி!...இதோ என்னுடைய போர்க்கருவி! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பாசறையிலே தயாரான போர்க்கருவி! கயவர்களை—கத்திவீச்சுக்களை— கண்ணமற்ற செயல்களை — எதிர்த்து நிற்கும் போர்க் கருவி!...

வேல: அவ்வளவு பெரிய வீரனு? ... கத்தியைக் கையால் எதிர்க்கும் சூரனு?...இதோ பார்ப்போம் அதை யும்...

[இருவருக்கும் பயங்கரமான போர். குறும்பன் வருகி ருன். நிலைமையைக்கண்டு ஓடுகிருன். போரின் முடிவு? படைத்தளபதியின் மரணம்!]

முத்தாயி: அத்தான்!...

முத்: முத்தாயி!...

[குறும்பன் வீரர்களுடன் வருகிருன்]

குறும்: ஆ!...தளபதி!...அய்யோ, இறந்துட்டீங் களா? டேய், இவரைத் தூக்கிட்டு போங்கடா. டேய் முத்தா! நீதானே இவரைக் கொலை செய்தது?...டேய், இவனையும் கைது செய்யுங்கள்.

[வீரர்களுக்கும் முத்தனுக்கும் சண்டை-முடிவில் முத்தன் பிடிபடு கிருன்...முத்தாயி கதறி மூர்ச்சையாகிருள்.]

வெளியே

(தளபதியின் பிணத்தை தூக்கிக்கொண்டு போகிறார் கள். சுகதேவ் அதைப் பார்க்கிருன்.)

சுக: ஆ!...

[முத்தன் இழுத்துவரப்படுகிறான்.]

சுக: ஏ, முத்தா! நீ தான் தளபதியைக் கொன்றதா?...பலே பலே...நன்றி...நன்றி...அவன் எங்கே வேதாளம், அவன் சாகலையா?...

[உள்ளே போகிறான்.]

சுக: ஆ!...முத்தாயி!...முத்தாயி!...கண்ணை முழிச்சுப் பாரேன்...வீரன் சுகதேவ் வந்திருக்கிறேன்...கண்ணை முழிச்சி பாரேன் முத்தாயி! எழுந்திரேன்...

முத்: (மூர்ச்சை தெளிந்து) நீங்கள் கொலைக் குற்றவாளியா?

சுக: நான் ஒன்றும் குற்றவாளி இல்லை...அந்த முத்தன்தான் குற்றவாளி!

முத்: அய்யோ என் காதல் தெய்வமே! உங்கள் கைகளிலே...

சுக: ஒன்றுமில்லை ... தண்ணீர்க்குவளைதான் கண்ணே...பயப்படாதே கண்ணே...எழுந்திரு...

முத்: பாவி! நீ ஒருத்தன் வந்து விட்டாயா?...

சுக: ஏன் முத்தாயி கோபித்துக் கொள்கிறாய்? ஏதாவது ஊடலா?...

முத்: இப்போது நீ என்ன சொல்கிறாய்?

சுக: என்ன சொல்வேன்; நமது திருமணத்தைப் பற்றித்தான்!

முத்: அட அநியாயக்காரா!...வேதனையின் விளிம்பிலே நிற்கும் என்னிடம் விரகதாபம் பேசவந்து விட்டாயா, நீ ஒருவன்? இதுதானு உன் மாளிகையில் கற்றுக் கொடுத்த பாடம்? போ...வெளியே! உம் போகிறாயா இல்லையா?...

சுக: ஊகூம்...அதெல்லாம் யாரும் போகமுடியாது.. முத்தாயி, நான் யார் தெரியுமா?...வருங்கால சக்ரவர்த்தியின் திருமகன்!

முத்: சக்ரவர்த்தித் திருமகன்! உம் ... உனக்குக் கண்ணில்லை... மனித உணர்ச்சி இல்லை...பெண் பழி பொல்லாது என்பார்களே, அதை நீ படித்ததில்லை?...

ககக: உம்...நான் ஏன் அதெல்லாம் படிக்கிறேன்... முத்தாயி, இப்போது நீ என்னைத் திருமணம் செய்து கொண்டுதான் தீரவேண்டும்...கண்ணே முத்தாயி!...

முத்: உம்...நான் தயாராக இருக்கிறேன்... இந்த சரீரம்தானே உனக்கு வேண்டும்?...என் மேனியின் மெருகிலேதானே நீ மயங்கிவிட்டாய்?..... உம்... அடிமையாக்கிக் கொள் என்னை! யாரோ சொன்னளாமே உடல்தான் அழுக்குப்பட்டது; உள்ளம் அழுக்குப் படவில்லை என்று! அப்படியல்ல நான்...என் கற்பை உன் காலடியில் வைக்கத் தயாராகி விட்டேன்...காமவெறியில் பாய்ந்துவரும் கழுகே! உன் கொடிய நகங்களால் என் இருதயத்தைப் பிராண்டி விடு!.....உம்...தாமதிக்காதே! சூறையாடு என் வாழ்க்கையை!...சிக்கு நூலுக்கிவிடு என் வைராக்கியத்தை! பெண்களை விபசாரப் பதுமைகளாக நினைத்துவிட்ட பேயர்களின் பிரதிநிதியே!...என் தயக்கம்? இதோ நான் தயார்! என்பிணம் பேசுகிறது உன்னோடு! என் சவம் அழைக்கிறது உன்னை! வா...வா...வஞ்சகனே! இதோ நான் முத்தாயி--முத்தனின் மனைவி--உனக்கு வெள்ளாட்டி!

சுக: என்ன? நீ முத்தனின் மனைவியா?...முத்தாயி, என்னை மன்னித்துவிடு!...உன் தகப்பனுர் பேச்சைக்கேட்டு இப்படி எல்லாம் கெட்டுவிட்டேன்! இல்லறத்தை நம்பி துறவறத்தின் எல்லை வரையில் போய்விட்டேன்! முத்தாயி! உன் மேல் வைத்த காதலை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். அன்புள்ள சகோதரி! இப்போதே போய் உன் காதலனைக் காப்பாற்றுகிறேன்.

பாழ் மண்டபம்

[1000 பொன்களுடன் வேதாளம் ஒரு பாழ் மண்டபத்தில் உட்கார்ந்திருக்கிறுன்]

வேதா: ஆயிரம் பொன் கிடைத்தது எனக்கு! கடவுளே! உனக்கு ஆயிரம் நமஸ்காரம்...என்னை எப்படியாவது பழுதூர் பாளையக்காரனாக ஆக்கிவிடு...உனக்குக் கோடி நமஸ்காரம்! முத்தாயியை அழைத்து வந்ததற்காக எனக்கு ஆயிரம் பொன்...இனிமேல் நமக்கு இந்த வேஷம் வேண்டாம்...நாமார்க்கும் குடியல்லோம்:நமனையஞ்சோம்!

[சுகதேவ் அங்கு வருகிறான். ஆத்திரம் அடைகிறான் மண்டபத்தில் இருந்த கல்லைத் தள்ளி வேதாளத்தை கொன்று விடுகிறான்]

சுக . அக்ரமக்காரனுக்கு இதுதான் முடிவு...திருந் தினவன்தான் பொழச்சான்; இந்த உலகத்திலே!

வேங்கை நாட்டு அவைக்கூடம்

சக்ரவர்த்தி . தளபதி வேலழகர்...கொலை செய்யப் பட்டார்...வேங்கை நாட்டுக்குப் பெருத்த அவமானம்! படையில் இருந்து ஓடியதும் அல்லாமல், படைத்தலை வரையும் கொன்று விட்டான்...அந்தப் பாதகனை விடக் கூடாது! உடனே தூக்கிலிடுங்கள்.

பூங்காவனம் அறை

சாமியார் : எனக் கென்னமோ, சுகதேவ் திரும்பி வருவது சந்தேகமாகிவிட்டது. விதி நம் விழிகளையும் மூடி விடும்...சுகதேவ் எதிரே நின்றுகூட நம் பார்வைக்கு திரைபோட்டு விடும் பயங்கர சக்தி வாய்ந்தது அந்த விதி...

(பூங்காவனம் வந்துகொண்டே)

பூங் : உம்...ஆரம்பமாகிவிட்டது விதிக்கு விளக் கம்!...அண்ணே, நீங்கள் சாமியாரை நம்புகிறீர்கள்—சாமியார் பாவம், விதியை நம்புகிறார்—விதி சாமியாரை நம்பி வாழ் கிறது—இப்படிச் சக்கரம்போல விதி சுற்றிக்கொண்டே இருந்தால், சுகதேவும் எங்காவது சுற்றிக் கொண்டேதானி ருப்பான் ...

சாமி : அவசரக்காரப் பெண்கள்...

பூங் : ஆமாம் சாமியாரே! அது முழுக்க...முழுக்க உண்மை...நான் அவசரக்காரிதான் ... அவசரக்காரியே தான்...

பல : பூங்காவனம், போதும் நிறுத்து.

(சுகதேவ் ஓடிவருகிறான்)

சுகதேவ் : அப்பா...அப்பா...

ராணி : வந்து விட்டாயா செல்வமே!...

சுக : என்னைக் கொஞ்சுவதற்கு நேரமில்லை... அப்பா...காரியம் மிஞ்சிவிட்டது...

பல : என்ன சொல்கிறாய்?

சுக : நீங்கள் வந்தால் தான் ஒரு உயிரைக் காப்பாற்றமுடியும்!

பல : என்ன சுகதேவ்?

சுக : தூக்கு மேடைக்கு போய்க் கொண்டிருக்கிறான் ஓரு ஏழை! அவனைக் காப்பாற்றுங்கள்... அவன் எதிரி நாட்டு உளவாளி என்று சொல்லி கொலைக் குற்றம் சுமத்தி தண்டித்து விட்டார்கள்...அப்பா உடனே புறப்படுங்கள், வேங்கை புரத்து அரசனிடம்!...

பல : விஷயத்தை விவரமாகச் சொல்...

சுக : முத்தனுக்குத் தூக்கு தண்டனை கொடுத்து விட்டார்கள்!...

[பூங்காவனம் "முத்தா" என்று அலறி வீழ்கிறாள்]

சுக : அத்தை!...

பல : பூங்காவனம்!...யாரங்கே? உடனே போய் வைத்தியர் பூபதியை அழைத்து வாருங்கள்!...

[வைத்தியர் பூபதி வருகிறார்–பூங்காவனத்தை பரிசோதித்து மருந்து தருகிறார்.

பூபதி : பயப்படாதீர்கள்...மன அதிர்ச்சிதான்... வேறென்றுமில்லை! பிரபூ, ஏன் இப்படி திடீரென்று மயக்கம் வந்தது?...ஏதாவது சோகச் செய்தி?...

பல : அப்படி ஒன்றுமில்லை...நமது மாளிகையில் குதிரைக்காரனாக இருந்தானே காவேரியின் மகன் முத்தன், அந்த முத்தனுக்கு தூக்குத் தண்டனையாம்! அதைக் கேள்விப்பட்டவுடன்.....

[பூங்காவனம் மறுபடியும் "முத்தா" என அலறுகிறாள்... பூபதியின் மூளை வேகமாக வேலை செய்கிறது.]

பூபதி : பிரபூ! இந்த மாளிகைக்குப் பின்புறமாக படிக்கட்டுகள் இருக்கின்றதல்லவா?...

பல : இருக்கிறது...

(பூபதி அறையைச் சுற்றி நன்றாகக் கண்ணைச் செலுத்துகிறார். காதல் புறாக்கள்—கன்றை நாடும் பசு—மான்தோல் வேங்கை மூன்று ஓவியங்களையும் உற்றுப் பார்க்கிறார்)

பூப : தயவு செய்து என்னை அந்தப் பின்புறத்து படிக்கட்டுகளின் பக்கம் அழைத்துப் போங்கள்!

(போகிறார்கள். பூபதி படிகளை எண்ணுகிறார்)

சுக : அத்தை...அத்தை...கவலைப்படாதே அத்தை! அடடா...அங்கே முத்தாயி வேற முத்தனுக்காக கவலைப் பட்டுகிட்டு இருப்பா...ஆகா!...நான் என்ன வேகமா வந்தேன்...என் வேகத்தையே இந்த வைத்தியர் கொஞ்சிட்டாரோ...ம்...படி எண்ணப் போயிட்டாரு படி!...அட வாங்கய்யா

பல : என்ன பூபதி; படிகளை ஏன் எண்ணினீர்?...

பூப : படிகளை எண்ணினேன்—அதோடு பழைய நிகழ்ச்சி ஒன்றையும் எண்ணினேன்...

ஆகாகா! நன்றாக ஞாபகம் இருக்கிறது—இப் போது நடப்பதுபோல் இதோ, எல்லாம் என் கண்முன்னே அப்படியே காட்சியாகின்றன! அந்தக்காட்சியை அப்படியே சொல்கிறேன், கவனமாகக் கேளுங்கள்...

இந்த மாய்மைகநாத சாமியார் ஒருநாள் இரவு அவசர மாக ஓடிவந்து என்னைக் கூப்பிட்டார். ரகசியம் ஒன்று—அதை மறைத்துவிட வேண்டுமென்றார். வந்தேன். கண்களை வழியிலேயே கட்டிவிட்டார். மறுத்தேன். பொன்மூட்டை யொன்று வழங்கினர். ஒத்துக் கொண்டேன். என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகிறார் என்றே எனக்குத் தெரியவில்லை. கண்கள் கட்டப்பட்டே இருந்தன. ஏதோ படிகளில் ஏறி என்னை அழைத்துச் செல்வது தெரிந்தது...படிகளைக் கவனமாக எண்ணிக் கொண்டேன். முப்பத்தாறு படிகள்! நன்றாக ஞாபக மிருக்கிறது...ஒரு இருண்ட அறையில் மங்கலான வெளிச்சத்திற் கிடையே என் கண்கள் அவிழ்த்து விடப்பட்டன. எந்த இடமென்று

தெரிந்து கொள்ள...சுற்று முற்றும் பார்த்தேன்... இதோ, இந்த மூன்று ஓவியங்களும் அப்போதும் இருந்த்ன !... கட்டிலிலே ஒருபெண் படுத்திருந்தாள்...அவள் முகம் கருப்புத் துணியால் நன்றாக மூடப்பட்டிருந்தது... பிரசவ வேதனையால் அந்தப்பெண் துடித்துக் கொண்டிருந்தாள். இன்னும்...சிறிது நேரத்தில் இறந்து விடுவாள் போல் தோன்றியது...பிறகு நான் மருத்துவம் செய்தேன் ... ஆஹா !...ஆஹா... !அழகான குழந்தை — குழந்தையை உடனே சாமியார் காவேரி என்பவளிடம் கொடுத்துவிட்டார். காவேரி குழந்தையுடன் ஓடி விட்டாள். மீண்டும் என் கண்கள் கட்டப்பட்டு வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டேன். மறு நாளே என் வெளி நாட்டுப் பயணமும் ஆரம்பமாகி விட்டது. அதனால் அந்தப் பரம ரகசியம் பாதாளத்தில் புதைந்து கிடந்தது. திரும்பி வந்ததிலிருந்து சாமியாரையும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன்; சொல்லவில்லை. ஆனால் இப்போது புரிகிறது, அந்தக் குழந்தை பிறந்த இடம் இந்த அறைதான் என்பது! ஆம்...இன்று தூக்கு மேடையிலே நிற்கும் முத்தனுக்கு, தொட்டில் கட்டியிருக்க வேண்டிய இடம் இது தான்! ஆனால் ஒன்று பிரபுவே! இந்தச் சாமியார் அவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டாரே, அது ஏன் என்று எனக்கு இன்னும் விளங்கவில்லை...

(பூங்காவனம் எழுகிறாள்)

பூங் : நான் சொல்லுகிறேன்! முத்தனின் தாய் நான் தான்!

பல : ஆ!.....

பூங் : என்னை ஏமாற்றியவன் இதோ, இந்தக் காதகன் தான்!

பல : என்ன!.....

பூங் : அண்ணா! என்னை மன்னித்து விடுங்கள்! நீங்களும் அண்ணியும் வடக்கே சென்றிருக்கும்போது, இவன் வலையில் நான் வீழ்ந்து விட்டேன்! பக்தி போதனை செய்வதாக இந்தப் : பாலசந்நியாசி அடிக்கடி வந்தான் ... ஒரு

நாள் — இரண்டு நாள் உலகத்தைப் பற்றி பேசினான். பிறகு உலகைப் படைத்தவனின் உத்தம குணங்களை விளக்கினான். கடவுள் அவதாரங்களும் காதல் லீலைகள் புரிந்ததாக வர்ணித்தான். மாயக் கண்ணன்—மன்மதன்—ரதி தேவி—மகேசன் பார்வதி—வள்ளி மணவாளன்—பிரம்மா. திலோத்தமை—மேனகா விஸ்வாமித்ரன்—இப்படி எல்லாம் புராணக் கதைகள் சொன்னான்—போதை நிறைந்த இவன் வார்த்தைகள் என் புத்தியைத் தடுமாற வைத்து விட்டன... விவரிப்பானேன்—வீழ்ந்தேன் ... வீழ்ந்தேன் ... தமிழச்சி கட்டிக் காக்கும் கற்பு நெறியிலிருந்து வீழ்ந்தேன்...சந்தியா சத்தை விட்டுவிடுகிறேன்—சம்சார வாழ்வு தொடங்குகிறேன் என்றான். கடைசியில் கருவிலே முத்தனும் வந்தான்! ஊர் கை கொட்டிச் சிரிக்கும் உன்னை மணந்தால் என்று காரணம் கூறி, என்னை கை விட்டு விட்டான்! முத்தனின் தந்தை இவன்! நான்தான் தாய்!

சுக : ஓ!...இதுதானே அத்தை காரணம்? வேங்கை நாட்டு மன்னரை கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன் என்று நீ சொன்னது ஏன் என்று இப்போது அல்லவா புரிகிறது!

பூப : ஹ...ஹ...ஹ!...பற்றற்ற துறவிகள் புழுதியைக்கூட நாடமாட்டார்களாம்—நீரோ பூங்காவனத்தையே நாடி இருக்கிறீர்...ஹ...ஹ...ஹ!

பல : பூபதி! ஐயாயிரம் பொன் தருகிறேன், இந்த அவமானச் செய்தியை வெளியே சொல்லாதீர்!...

பூப : எனக்கு வேண்டாம் ஐயாயிரம் பொன்! முன்பு ஒருமுறை நான் பொன்னுக்கு அடிமைப்பட்டதால் இந்த போலி வேடதாரி இத்தனை நாள் வெளிச்சம் போட முடிந்தது!...பெருமையுள்ள பிரபுவே! இனியும் இந்த ரகசியத்தை மூடி வைத்துப் பயனில்லை— உடனே சென்று முத்தனைக் காப்பாற்றுங்கள்...

முத்தனின் தோழர்கள் பேசிக் கொண்டிருத்தல்

வீரன் 1 : தோழர்களே! எப்படியும் முத்தண்ணனை விடுவிக்க வேண்டும்.

வீரன் 2 : அந்த இலட்சிய வீரனை மீட்பதற்காக நான் என் உயிரையும் தியாகம் செய்யக் காத்திருக்கிறேன்...

வீரன் 1 : தூக்குமேடையை தூள் தூளாக்கி யாவது முத்தண்ணனை விடுவிப்போம்...வாருங்கள்!

சுமதி வீடு

பூங்காவனம் : முத்தாயி! இவ்வளவும் கேட்ட பிறகும ஏன் எங்களோடு பேச மாட்டேன் என்கிறுய்?...

முத்தாயி : என் பெருமூச்சுகளுக்கு பேசும் சக்தி இல்லை என்று கருதுகிறீர்களா?...

பூங் : கண்ணே முத்தாயி!...

முத் : தொடாதீர்கள் என்னை!

பூங் : முத்தனைப் பற்றி உனக்கு மட்டுந்தானே கவலை? ...எங்களுக்கெல்லாம் இல்லையா?...உனக்குக் கணவன் — எனக்கு மகன்!...

முத் : மகன்! இன்னொரு முறை சொல்லாதீர்கள்... உங்கள் மாளிகை கௌரவம் மண்ணுகிவிடும். வெட்கமில்லை உங்களுக்கு...முத்தனை உங்கள் மகன் என்று சொல்லிக் கொள்ள? ...தாயாம் தாய்!...நாயைப் போல் மகன் நடத்தப் பட்டபோது வாயை மூடிக் கொண்டிருந்த தாய்!...பசியால் மகன் வாடிய சேதியை ருசியோடு கேட்டுக் கொண்டிருந்த தாய்!...மகன் என்ற பாசத்தை மறைத்துக்கொள்ளத் தூண்டியது உங்கள் மாளிகை வாசம்! புத்திரன் என்று கூறிக் கொள்ளத் தடையாயிருந்தது உங்கள் போலி கௌரவம் — மதிப்பு — மரியாதை — மண்ணுங்கட்டி — எல்லாம்! பாளையக்காரர் பெருமைக்கு பங்கம் வரக்கூடாது என்றுதானே பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகனை பரதேசிபோல நடத்திக் கொண்டிருந்தீர்கள்? எங்கே தாயே அந்தத்திமிர்?

திமிருக்கு போட்டதிரை கிழிந்து விட்ட காரணத்தால் தேடிவந்தீர்களோ மகனே?...

மாளிகை கௌவரத்தை பாதுகாக்கும் தாய்! மத வெறிக்கு சாமரம் வீசும் தகப்பன்!...பத்தினியாக வேஷம் போட்டாள் தாய்!...பக்தனுகக் கூத்தாடினன் தகப்பன்!.., அறியாத கன்னிபோல் வாழ்ந்தாள் அம்மை!...அடியாரின் தலைவனுய் வாழ்ந்தான் அப்பன்!

அம்மை அப்பர்களே! அவலக்ஷண ஜீவன்களே! அக்ரமத்தின் புதிய பதிப்புகளே! கற்பிழந்தவள் கன்னியாக வாழ்ந்தாளாம்—காமாந்தகாரன் சாமியாராகத் திரிந்தாணும்! இந்தக் கயமையின் உருவங்களுக்கு கடைசி நேரத்திலே ஞானோதயம் பிறந்து விட்டதாம்!... வந்து விட்டார்கள் துக்கம் விசாரிக்க வகைகெட்ட வஞ்சகர்கள்! மதிப்பு கெடக்கூடாது— மகன் கெட்டாலும் பரவாஇல்லை என்பவள் மாதாவாம்!...மக்கள் ஆதரவு குறையக் கூடாது— மகான் என்ற பெயர் மாறக் கூடாது—மகனைப் பற்றி கவலையில்லை யென்றவன் பிதாவாம்! இந்த மாக நல்லவர்கள் மருமகளைத் தேற்ற வந்து விட்டார்கள்! மானங்கெட்டவர்கள்—ஆடினர்களாம், பாடினர்களாம்—ஆனந்தம் அனுபவித்தார்களாம்—அதன் அடையாளச் சின்னம் பிறந்ததும் விஸ்வாமித்திரன் மேனகைபோல் வீண் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டார்களாம்!—விதியற்றவர்கள்!... அறுந்து போன தந்தியை ஒட்டவைக்க வந்து விட்டார்கள், அன்றொரு நாள் அதே வீணையைப் புழுதியில் ஏறிந்த புண்யாத்மாக்கள்!... போங்கள் இதை விட்டு; போய்விடுங்கள் இப்போது! உங்களுக்கெல்லாம் பதில் சொல்ல என் முத்தன் இங்கில்லை! இன்றில்லா விட்டால் நாளை உங்களுக்கு மட்டுமல்ல; உங்களைப் போன்ற உலுத்தர்களுக்கு பதில் சொல்ல என் வயிற்றிலே வளர்கிறது வாள்! போலி மதிப்பைப் பொசுக்கும் தீ!...மக்களை ஏமாற்றி வாழும் மதயானைகளை மாய்க்கும்! வேல் என் வயிற்றிலே வளருகிறது—அது சொல்லும் சூதுக்காரர்களுக்குப் பதில்!... சூழ்ச்சிக்காரர்களுக்குப் பதில்!...சூடான பதில்! சுயமரியாதைப் பதில்!...

அந்த பதிலுக்குக் காத்திருங்கள் பாவிகளே !..என் முத்தனை அநியாயமாகக் கொன்ற பாவிகளே ! அந்த பதி லுக்குக் காத்திருங்கள்—

மாய் : முத்தாயி ! முத்தன் சாகமாட்டான்...

முத் : சாமியார் நடையில் பேசும் தத்துவார்த்தமா? ...சொர்க்க லோகத்தில் சுகமாக இருப்பார் என் முத்தன் என்கிறீரா?... பூதவுடல்தான் அழியும்;புகழுடல் அழியாது என்று கூறுகிறீரா!...

மாய் : இல்லை ! பலதேவர் சக்ரவர்த்தியை சந்திக்கப் போயிருக்கிறார்—முத்தனுக்கு விடுதலை கட்டாயம் கிடைத் துவிடும் !...

சுகதேவ் : அதோ !...அப்பாவும் வந்து விட்டார். என்னப்பா ! என்ன ஆயிற்று ? முத்தனுக்கு விடுதலையா ?...

[பலதேவர் தலை குனிகிறார்]

முத்தாயி : என் முத்தனுக்கு விடுதலைதான் ! இந்த உலகத்திலிருந்து என் ஆசை முத்தனுக்கு விடுதலைதான் ! உங்களைப் போன்ற துரோகிகள் வாழும் பூமியிலிருந்து என் அன்பு புத்தனுக்கு விடுதலைதான்! விடுதலைதான்!

[ஓடுகிறாள்...வெறி பிடித்தவள் போல]

சிறைச்சாலை

[கதவுதிறக்கப்படுகிறது! முத்தாயி ஓடிவருகிறாள்]

முத் : அத்தான்!...

முத்தன் : இன்பமே ! கலங்காதே ! இன்று நமக்கு கடைசி நாள் ! கடைசி சந்திப்பு !... காதல் பாடும் உன் கண் களை இனிநான் பார்க்க முடியாது ! தேன் பொழியும் உன் அதரங்களின் தித்திப்பை இனி நான் சுவைக்க முடியாது ! இன்னும் இரண்டொரு விநாடிகள் ; அதற்குமேல் உன்னைப் பற்றிய இன்ப நினைவுகளை இந்த ஏழை முத்தனால் சுமக்க முடியாது !...

முத்: அத்தான்! நம்மை யாரும் பிரிக்கவே முடியாது —நானும் உங்கள் பின்னுலேயே வருவேன்.....

முத்தன்: உம்...பைத்தியம்! ஏதோ காதலர்களுக் காக ஒரு உலகம் கட்டிவைத்திருப்பதாகவும், அந்த உலகத் தில் செத்துப்போன காதலர்கள் குடியேறலாம் என்றும் யாரோ ஒரு ஆசைக்காரன், கிறுக்கி வைத்துவிட்டுப் போனன்! அதை நம்பி நீயும் பிணமாகிவிடாதே! உயிர் விடப்போகும் நான் உன்னிடம் கேட்கிற ஒரே ஒரு அன்பு உத்திரவு...

முத்: எதுவானுலும் கேட்கிறேன்...

முத்தன்: நீ சாகாமல் வாழ வேண்டுமென்பது தான்...

முத்: ஆ!...நான் வாழ முடியாதவள் அத்தான்-இனி நான் வாழக்கூடாது...

முத்தன்: உம்...நீயா வாழக்கூடாது? இந்த நீள் வையத்தில் யார் யாரோ வாழ்கிறார்கள்—நீதானு வாழக் கூடாது? நீசத்தனம் படைத்தோன்-மோசக்குணம் உடை யோன்-நேசத்தை முறிப்போன்-பாசத்தை உடைப்போன்— அனைவரும் வாழ்கிறார்கள், என் அமுதமே! நீதானு வாழக் கூடாது? யுத்தம் யுத்தமெனப் பித்தம் பிடித்தலையும் ரத்த வெறியனும் வாழ்கிறன், என் சித்திரப் பாவையே நீதானு வாழக்கூடாது? என் செல்வமே! இந்த வையகத்தில் வாழ் வாரைக் கண்டு வயிறெரியும் வஞ்சகனும் வாழ்கிறன்— நெஞ்சமிலாக் கொடியோனும் வாழ்கிறன்—என் வைர முரு நிலவே! நீதானு வாழக்கூடாது? உழைக்க ஒருவன்-தழைக்க ஒருவன் என்று கூறி, அழைப்பில்லாமல் வந்தவன் ஆனந்த மாகத்தான் வாழ்கிறன், அஞ்சுகமே! யார் சொன்னது நீ வாழக் கூடாது என்று?...என் ஆருயிரே! தாண்டவம் புரிந்திடும் ஆண்டவன் நான்-ஆகவே இந்த உண்டியலை நிரப்புங்கள் என்று கூறி ஊரை ஏய்த்து வாழும் பட்டு பீதாம்பர பரோதசியாம் மாய்கைநாத சாமியார் வாழ்கிறார்— கொட்டு முழக்கோடும், கொடிபிடிப்போர் ஆயிரவரோடும்!

அந்த பாம்புகள் வாழலாம், பைங்கொடியே! நீ வாழக் கூடாதா?... அழுதூரும் அழகுத் திருநகரை பழுதூராக்கி பொன்னையும், பொருளையும் சூரண்டியது போதாதென்று, மண்ணையும் அடிமை கொண்ட மகோன்மத்தனும் வேங்கை நாட்டான் வாழ்கிறான், எடுபிடிகளோடு, ஏராள மானச் செல்வாக்கோடும்! கப்பம் கட்டுவோர்—காவடி தூக்குவோர்—கட்டியம் கூறுவோர்—கால் கழுவிப் பிழைப் போர்—களிப்போடுதான் வாழுகிறார்கள் கண்ணழகி, இந் தக் காசினியில்!...நிலாப் பதுமையே! நீ மட்டும் வாழக் கூடாது என்று யார் சொன்னது?

முத்: புலிக் காட்டில் மான் வாழ முடியுமா அத்தான்?...

முத்தன்: மானம் புலி நகத்தைவிட கூர்மையானது மலர்க்கொடியே! கானம் பாடும் வானப்பாடிகள், கழுகுக்கும் வல்லூருக்கும் மத்தியிலே வாழத்தான் வேண்டி இருக் கிறது, என் அன்பே! நான் போனபிறகு நீயும் இந்த பண்பிலா மனிதர் கூட்டத்திடையே வாழத்தான் வேண்டும். வாழ்வது உனக்காக அல்ல; உன் வயிற்றிலே வளரும் நம் காதல் களஞ்சியத்தை—பிள்ளைக் கனியமுதை— பேசும் பொற் சித்திரத்தை—நான் காணமுடியா விட்டாலும் நீ கண்டுகளிப்பவள்; அதைக் காப்பாற்ற வேண்டியவள்;... அணைத முத்தனின் வம்சம் அடியோடு அழிந்து விடவில்லை என்று இந்த உலகத்தின் காதிலே உரக்கச் சொல்லப் போவது, உயிரே, அந்த இன்பச் செல்வந்தானே! அந்த எதிர் காலத்தை நினைத்து இப்போதே நான் ஒரு சந்தோஷ பெருமூச்சு விட்டுக் கொள்கிறேன்...

முத்: அத்தான்....

முத்தன்: அழாதே கண்ணே! அழாதே! உன்னை சிரித்த முகத்தோடு என் சிந்தை குளிர ஒருமுறைப் பார்க் கிறேன். எங்கே என் செந்தமிழே! சிரிப்புக் காட்டு...

முத்: அத்தான்...

முத்தன் : மதுவூறும் உன் இதழ்களை முத்த மிட்டேன். அது பிடிக்கவில்லை. உலகுக்கு நீதிக்கு—நியாயத் துக்கு — ஆகையால் மரணத்தை முத்தமிடப் போகிறேன்!

கடைசியாக ஒன்று கேட்கிறேன் முத்தாயி; கடைசி யாக ஒன்று கேட்கிறேன்! நாம் இருவரும் சேர்ந்து பாடு வோமே அந்தக் காதல் பாட்டு, அதை இனிமேல் எங்கு கேட்கப்போகிறேன்; எங்கே அதை ஒரு தடவை பாடு!... கண்ணே பாடு! நீ பாடாவிட்டால் உன் காதலன் நிம்மதி யாக சாகமாட்டான்...பாடு கண்ணே, பாடு!

[அவள் பாடுகிறாள் அழுது கொண்டே. அவன் நடந்து கொண்டே இருக்கிறான் தூக்குமேடை நோக்கி]

வேங்கைபுரம்

[வேங்கைநகர் மன்னன்—அருகே பூங்காவனம்—பூபதி பொன்னால் செய்யப்பட்ட தாமரையைப் பார்த்த படி பேசுகிறார்]

பூபதி : அழகான தாமரை மலர்—அருமையாக செய் திருக்கிறான் சிற்பி...பொன்னிற இதழ்கள் கண்ணைப் பறிப் பது போல் மின்னுகின்றன...ஆனாலும் இந்த மலருக்கு வாசனை கிடையாதே மகாராஜா!... அப்படித்தான் ஆகிவிட் டது இளையராணி பூங்காவனத்தின் வாழ்வு!...

பூங்காவனம் : மகாராஜா!...பூபதி வைத்தியர் இவ் வளவு சொன்ன பிறகாவது நான் என் தங்கையைத் திரு மணம் செய்து கொள்ள மறுத்தேன் என்ற காரணத்தை புரிந்து கொண்டீர்களா

அரச : புரிந்து கொண்டேன் பூங்காவனம்! இந்தக் காரணத்தை நீ முன்பே வெளியிட்டிருந்தால், என்னுடைய வாழ்க்கை எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கும்!

பூங்: மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள். நான் தங்களுக்கு பெரிய தவறுதான் செய்து விட்டேன். தங்களுக்கு மட்டுமல்ல; மாதர் குலத்துக்கே நான் தவறு செய்து விட்டேன்! மகாராஜா, என் மகனை எப்படியாவது விடுதலை செய்யுங்கள்!

அர: பூங்காவனம்! நான் உன்மீது வைத்திருந்த அன்புக்காக மட்டுமே முத்தனை விடுவிக்கலாம். ஆனால் முத்தன் வேங்கை நாட்டின் விரோதி!...விடுதலை விரும்பி!... அவனை விடுவிக்க சட்டம் இடையாது.....

பூங்: மகாராஜா!...முத்தன் சாகவேண்டியதுதானே?...என் மகன் சாகவேண்டியதுதானே?...அப்படியானால் என்னையும் கொன்று விடுங்கள்...

அர: கவலைப்படாதே! முத்தன் இதுவரையில் என் இதயத்திலே குடியிருந்தவளின் மகன் என்பதற்காக விடுதலை செய்யப்படுகிறான்!...

நகரின் வீதி

[முத்தன் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான்...பெருங்கூட்டம். இடையே முத்தனின் நண்பர்களும் இருக்கின்றனர். மாய்ஸைகாதஸ்வாமிகள், பலதேவர், சுகதேவ், இவர்களும் இருக்கின்றனர். முத்தனின் நண்பர்கள் ஏதோ சைகை மூலம் பேசிக்கொள்கின்றனர்...திடீரென்று கூட்டத்தில் குழப்பம் உண்டாகிறது. முத்தனின் நண்பர்கள் முத்தனை கொண்டு சென்று விடுகின்றனர் குழப்பம் முடிகிறது. வீரர்கள் கருப்பு முகமூடியணிந்த கைதியை முத்தன் என்றெண்ணி தூக்குமேடைக்கு இழுத்துக் கொண்டு போகின்றனர்]

தூக்குமேடை

[முக்காடிட்ட உருவம் தூக்கிவிடப்படும்போது கயிறு வெட்டப்படுகிறது. பூங்காவனம் ஓடிவருகிறாள்]

பூங் : முத்தா!...முத்தா!...

[முகத்தை மூடியுள்ள துணியை விலக்குகிறாள். அங்கே மாய்கைநாதர் தெரிகிறார்...அலறுகிறாள்]

பூபதி : என்ன இது? முத்தனுக்கு பதில் சாமி யார்?...இது எப்படி?...

சுக : பெரியவரே!... நான் சொல்கிறேன்! சாமியார் எப்படி மாறினார் என்று எனக்குத் தெரியும்...முத்த னுடைய தோழர்கள் முத்தனை விடுவித்து அவனது கருப்பு உடைகளை கழற்றி எறிந்து விட்டு ஓடிவிட்டார்கள்...அதைப் பார்த்த சாமியார் உடனே அந்த உடையை தான் போட் டுக்கொண்டு முத்தன் போல் நின்றார்...இந்த வீரர்கள் ஏமாந்து போய் சாமியாரை முத்தன் என்று நினைத்து— இப்படி—இது மாதிரி-நடந்து விட்டது.

மாய்கை : யாரும் ஆச்சரியப்பட வேண்டாம்! நானே தேடிக்கொண்ட முடிவுதான் இது. என் குற்றங்களுக்கு பிராயச்சித்தம் செய்து கொண்டேன். என் மகனுக்காக நான் செய்யும் முதலும், கடைசியுமான தியாகம் இதுதான்! பட்டினத்தாரும், பதினெட்டு சித்தர்களும், பண்புடைய துறவிகளும் வாழ்ந்த பூமியில் நாலோர் களங்கமாக வந்தேன். இதோ, ஓடி கிறேன்! பூங்காவனப்; பூங்காவனம்! என்னை மன் னித் து விடு! எனை மன்னித்து விடு! எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள்! மன்னித்து விடுங்கள்!...

(பேச்சு முடிகிறது; சாமியாரின் வாழ்வும் முடிகிறது)

வெளியே

[முத்தாயி விழுந்து கிடக்கிறாள். முத்தனும், அவன் தோழர்களும் வருகிறார்கள்]

முத் : முத்தாயி! முத்தாயி!...

முத்தா : அத்தான்!...

முத் : கண்மணி!...

[பூங்காவனம்-பலதேவர்-பூபதி-சுகதேவ் வருகிறார்கள்]

பூங் : முத்தா...

முத் : இளையராணி!...

பூபதி : முத்தா!...இளையராணி உனக்குத் தாய்!... உன்னை பெற்றெடுத்த தாய்!...

முத ஆ...

முத்தா : ஆமாம் அத்தான்! அவர்கள்தான் உங்கள் தாய்!

முத் : தாயா?...அம்மா!... உங்களை எப்படி யெல்லாம் தவறுக நினைத்து விட்டேன்—என்னை மன்னித்து விடுங்கள் அம்மா! மன்னித்து விடுங்கள்!...

பூங் : முத்தா!...

பூபதி : முத்தா!...காதலும், தாய்மையும் வெற்றி பெற்று விட்டது!...இனி கடமையிலே வெற்றிடெற வேண்டும் நீ!...கண்ணீர்த் துளியோடு சேர்த்து வளர்ந்த கர்ம வீரனே! தாயகத்து விடுதலைக்கு போராடும் தகுதி படைத்த தளபதி நீதான்!...முத்தாயி, நீயும் உன் கணவனும் பழுதூர் விடுதலைக்குப் பாடுபடுங்கள்... சோலையிலே தென்றலிலே சொகுசு! பின்னர்—சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்று வாளே!

முத் : அறிவேன் அய்யா!
காதலிலே கனிதையிலே
களம் போகும் பேச்சு!...
கணவனுக்கும் மனைவிக்கும்
தாயகமே மூச்சு!...

அருமைத் தோழர்களே! அன்புத் தம்பிமார்களே!... அனைவரும் புறப்படுங்கள்!... அன்னையின் விலங்கொடிப் போம்! பழுதூரை மீட்போம்! வாரீர்! தம்பி யுடையான் படைக்கஞ்சான்! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!...வாரீர்! வாரீர்!

திராவிடர்க்கோர் தேன்கூடு !

தென்னகத்தின் புரட்சி ஏடு !

★

முரசொலி

ஆசிரியர் : மு.கருணாநிதி

★

மு. க. வின் “ புதையல் ” தொடர்கதையுடன்

வெள்ளிதோறும் வெளிவருகிறது.

முரசொலி அலுவலகம் :: சென்னை-14

மேகலா பிக்சர்ஸ் தரும் பெருமைக்குரிய செய்தி!

நாளைக்கே நாளை



..எடுக்கலாம்..

A.காசிலிங்கம்

மேகலா பிக்சர்ஸ்

..சென்னை - 14..

..கதை..

..வசனம்...